# சுயதொழில் வழிகாட்டி

வடக்கு - கிழக்கு மாகாண சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயதொழில் வழிகாட்டி

1992ம் ஆண்டு மே மாதம் 29, 30, 31 ஆம் திகதிகளில்
வவுனியாவில் நடைபெறும்
ஜனாதிபதி இடம்பெயர் சேவையின் போது
இந்நூல் வெளியிடப்படுகின்றது.

திட்டமிடல் பிரதிச் செயலர் அலுவலகம்
நிதி திட்டமிடல் அமைச்சு
வடக்கு - கிழக்கு மாகாணம்
திருகோணமலை
29 மே 1992

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்பாசிரியர்:

**சி. வன்னியகுலம்**
உதவிப் பணிப்பாளர்
(ஆளணி பயிற்சி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்புமிகு ஆளுநர் அவர்களின் ஆசிச் செய்தி

ஒரு பிரதேசத்தின் இயற்கை வளங்களுக்கு அமைவுறவே அப் பிரதேசத்தின் உற்பத்தி நடவடிக்கைகள் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். இந்த வகையில் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் இயற்கை வளங்களைச் செம்மையான வகையிலே பயன்படுத்து வதற்கு சுயதொழில் உற்பத்தி முறைமை பொருத்தமான ஒன்றாக அமைய முடியும்.

இதனை இனங்கண்டு சுயதொழில் முயற்சியை ஊக்குவிக்குமுக மாக வடக்கு - கிழக்கு மாகாண நிதித்திட்டமிடல் அமைச்சின் திட்டமிடல் பிரிவு மேற்கொள்ளும் முயற்சிகள் வரவேற்கப்பட வேண்டியவை. இப் பிரிவினரால் இந்நூல் தமிழ், சிங்களம், ஆகிய இரு மொழிகளிலும் வெளியிடப்படுவதையிட்டு எனது மகிழ்ச்சி யைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந் நூல் சுயதொழில் முயற்சியில் பயிற்சிபெற இருப்பவர் களுக்கும், எதிர் காலத்தில் சுயதொழிலில் ஈடுபடவிரும்புவோருக் கும் வழிகாட்டியாக அமையும். சுயதொழில் முயற்சி தொடர்பான தொழில் திட்டங்கள் பல இந் நூலில் இனங்காணப்பட்டுள்ளன. இதனை வவுனியாவில் நடைபெறும் ஜனாதிபதி நடமாடும் சேவை யின் போது பொது மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்துவது பொருத்தமான நடவடிக்கையாகும். இந்த முன்னோடி முயற்சிக்கு எனது நல்லாசிகள்.

லெப். ஜென. ஜீ. டீ. ஜீ. என். செனவிரத்தின. விஎஸ்வி,
ஆளுநர், வடக்கு - கிழக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம செயலரின் வாழ்த்துச் செய்தி

சுயதொழில் முயற்சிகளை ஊக்குவிக்குமுகமாக நூல் ஒன்று அச்சிடப்பட்டு நிதித்திட்டமிடல் அமைச்சின் திட்டமிடல் பிரிவினால் வெளியிடப்படுவதனையிட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

சுயதொழில் முயற்சியில் ஈடுபட விரும்பி தொழிற்பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெற்றோருக்கு இந் நூல் பெரிதும் உதவும். சுய தொழில் முயற்சியை ஆரம்பிக்க இருப்போருக்கும் இது சிறந்த வழிகாட்டியாக அமையும். தொழில்களை இனங்காணவும், அவற்றின் பொருளாதார வாய்ப்புக்களை மதிப்பிடவும் சுயதொழில் முயற்சியில் நம்பிக்கையுடன் ஈடுபடவும் இந்நூல் உற்சாகமூட்டுகிறது.

தொழில் அற்றிருக்கும் இளைஞர்கள் இதனை வழிகாட்டியாகக் கொண்டு சுயதொழில் முயற்சிகளை ஆரம்பிக்கலாம். உற்பத்தி, நிதி, சந்தைப்படுத்தல் தொடர்பான வழிகாட்டல்களை தருவதற்குப் பல நிறுவனங்கள் ஆவலோடு தயாராக இருக்கின்றன. அந் நிறுவனங்கள் மூலம் ஆலோசனைகளைப் பெற்று தாம் ஈடுபட்டுள்ள சுயதொழில் முயற்சியில் முன்னேற முடியும்.

பயிற்றப்பட்ட இளைஞர்களுக்கு மட்டுமன்றி பாடசாலையில் தமது கல்வியைத் தொடரமுடியாத இளைஞர்களும் இத்துறையில் பயிற்றப்படுதல் அவசியமாகும். இம் முயற்சியில் திட்டமிடல் பிரிவு தொடர்ந்தும் ஊக்கத்துடன் ஈடுபட்டு தொடர்புடைய ஏனைய நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்க வேண்டும். சிறு தொழில் முயற்சியின் வளர்ச்சியே தேசிய பொருளாதாரத்தின் உயர்ச்சி.

**சொ. கணேசநாதன்,**
பிரதம செயலாளர்,
வடக்கு - கிழக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளரின் செய்தி

ஆயிரக்கணக்கிலான இளைஞர்களும் யுவதிகளும் வேலை தேடுவோர் பட்டாளத்தில் வருடா வருடம் சேர்ந்து வருகின்றனர். இவர்களில் பள்ளிப் படிப்பை இடை நடுவில் விட்டு விலகிச் சென்றவர்களும், பள்ளிப் படிப்பை முடித்து உயர்கல்வியைத் தொடர வாய்ப்பில்லாமல் போனவர்களும் மிகப்பலர். அரச துறையிலோ தனியார் துறையிலோ வேலைக்குச் சேரும் தகுதியைப் பெற்றிருக்காத இத்தகையோருக்கு பிழைப்புக்கான வேறு வழிகளைக் காட்ட வேண்டிய பொறுப்பு அரசைச் சார்ந்ததாகிறது.

வடக்கு - கிழக்கு மாகாணசபை இத்திசையில் சில முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அடிப்படைக் கல்வியறிவுடைய இளைஞர் யுவதிகளுக்கு தொழிற்பயிற்சிகளை பல்வேறு இயந்திர, கைவினைத் தொழில்களில் ஆற்றல் பெறும் வகையில் இயக்கி வருகிறது. இவ்வாறு தொழில் ஆற்றல் பெறுவோர் பிறரை நம்பியிருக்காமல் தமது சொந்த தொழில் முயற்சிகளில் ஈடுபடவேண்டுமென்பதே இதன் நோக்கம்.

சுயமாகத் தொழிலைத் தொடங்கி நடத்தக் கூடிய ஆற்றலைப் பெற்றிருந்தும்கூட, எத்தகைய தொழிலைத் தொடங்குவது, அதற்கான வாய்ப்புக்களை எங்கிருந்து எவ்வாறு பெறுவது போன்ற தகவல்களைப் பெறமுடியாத காரணத்தினால் பலர் எத்தொழிலையும் தொடங்கி நடத்தத் தயங்குகின்றனர். அத்தகையோருக்கு ஒரு வழிகாட்டியாகவே இந்த நூல் வடக்கு - கிழக்கு மாகாணசபையின் நிதி திட்டமிடல் அமைச்சினால் தயாரித்து வெளியிடப்படுகிறது. சுயதொழிலில் ஆர்வமுள்ள பலர் இந்த நூலினால் பயன் பெறுவார்கள் என்பது எனது நம்பிக்கை.

இவ்வழிகாட்டி நூலைத் தயாரிப்பதில் சேர்ந்து உழைத்த பிரதிச் செயலாளர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர் (ஆளணி, பயிற்சி) மற்றும் சகல உத்தியோகத்தருக்கும் எனது பாராட்டுக்கள்.

**அ. ஜெயரத்தினம்,**
செயலாளர்,
நிதி திட்டமிடல் அமைச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதிச் செயலாளரின் செய்தி

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள இயற்கை வளங்களை இனங் கண்டு, அவற்றிலிருந்து உச்சப் பயனைப் பெற்றுக்கொள்வதற்கான அபிவிருத்தி நடவடிக்கைகள் அரசினால் அண்மைக்காலத்தில் முடுக்கி விடப்பட்டுள்ளன. சுயதொழிலில் ஈடுபடுவோருக்கு பல்வேறு உதவி களும், பாதுகாப்பும் தேவைப்படுகின்றது என்ற கருத்து சகலரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்று. ஆகவே அரசும், அரசுசார்பற்ற நிறுவனங்களும் வழங்கும் உதவிகள் பற்றிய விபரங்களை இத் தருணத்தில் பகிரங்கப்படுத்த வேண்டியது அவசியமாகும். கடன் வசதிகள், தொழில்நுட்ப ஆலோசனைகள், திட்ட உருவாக்கம், சந்தைவாய்ப்பு வசதி, முகாமைத்துவ ஆலோசனைகள் போன்ற இன்னோரன்ன அம்சங்களை இந்நூலில் அடங்கியுள்ள கட்டுரைகள் தெளியப்படுத்துகின்றன. எனவே இக் கைநூல் எதிர்காலத்தில் சுயதொழில் வாய்ப்புக்களை ஊக்குவிப்பதில் பெரும்பங்கினை வகிக் கும் என திடமாக நம்புகிறேன்.

சுயதொழில் பற்றிய ஒட்டு மொத்தமான விபரங்களை நூலுரு வில் வழங்குவதற்கு வடக்கு - கிழக்கு மாகாண நிதி திட்டமிடல் அமைச்சின் திட்டமிடல் பிரிவு சமீப காலமாக மிக ஆர்வத்துடன் உழைத்து வந்துள்ளது.

தொழிற்பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெற்றிருக்கும் இளை ஞர்கள், வேலையற்றிருப்போர், பாடசாலையிலிருந்து விலகிச் செல் லும் மாணவர்கள் ஆகியோரை சுயதொழில் முயற்சியில் ஈடுபடுத் தும் அரசுசார்பற்ற நிறுவனங்களுக்கும் ஏனையோருக்கும் இது ஓர் உசாத்துணையாக அமையும்.

இந்நூல் ஆக்கம்பெற ஆலோசனை வழங்கியவர்களுக்கும், ஆக் கமும் ஊக்கமும் தந்தவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**க. சிவலிங்கம்,**
பிரதிச் செயலாளர், திட்டமிடல்
நிதி திட்டமிடல் அமைச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1 | சுயதொழில் முயற்சி ஓர் அறிமுகம் | 1 — 3 |
| 2 | சுயதொழிலும் வேலையில்லாத் திண்டாட்டத் தீர்வும் | 4 — 7 |
| 3 | சுயதொழிலும் பொருத்தமான தொழில்நுட்பமும் | 8 — 9 |
| 4 | பொருத்தமான தொழில்நுட்பத்தின் இன்றியமையாமை | 9 — 10 |
| 5 | சனசவிய நம்பிக்கை நிதியத்தின் சமூகநலத் திட்டங்கள் | 11 — 13 |
| 6 | சுயதொழில் வேலை வாய்ப்புக்கான உதவித் திட்டங்கள் | 14 — 16 |
| 7 | மக்கள் வங்கிக் கடனுதவித் திட்டம் | 17 — 18 |
| 8 | ஹற்றன் நஷனல் வங்கி | 19 — 20 |
| 9 | சுயதொழில் திட்டத்தை தெரிவு செய்தலும், உருவாக்கலும், திட்ட அறிக்கை தயாரித்தலும் | 21 — 23 |
| 10 | சுயதொழில் திட்ட அறிக்கை நிதிக்கூற்று | 24 |
| 11 | மாதிரி செயற்திட்ட அறிக்கை | 25 — 26 |
| 12 | மெழுகுவர்த்தி தயாரித்தல் | 27 — 28 |
| 13 | பாடசாலை வெண்கட்டி தயாரித்தல் | 29 — 30 |
| 14 | ஊதுபத்தி தயாரித்தல் | 31 — 32 |
| 15 | கடதாசிப் பொம்மை தயாரித்தல் | 33 — 34 |
| 16 | கடித உறை தயாரித்தல் | 35 |
| 17 | அலுவலக பயன்பாட்டுக்கான மரப்பொருட்கள் தயாரித்தல் | 36 |
| 18 | சீமெந்து புளொக்குகள் (கல்) தயாரித்தல் | 37 |
| 19 | செங்கல் தயாரித்தல் | 38 |
| 20 | கண்ணாடி இழைப்பொருட்கள் உற்பத்தி | 39 |
| 21 | சூட்கேஸ் தயாரித்தல் | 40 |
| 22 | பனை ஓலைப்பொருட்கள் தயாரித்தல் | 41 |
| 23 | பனந்தும்பு தயாரித்தல் | 42 — 43 |
| 24 | தும்புக்கயிறு தயாரித்தல் | 44 |
| 25 | கயிற்றுத் தும்புச்சுருள் தயாரித்தல் | 45 |
| 26 | நெசவுத்தொழில் | 46 |
| 27 | தலையணை உறை தயாரித்தல் | 47 |
| 28 | புற்பாய் தயாரித்தல் | 48 |
| 29 | பிரம்புப் பொருட்கள் தயாரித்தல் | 49 |
| 30 | கைப்பொறிமூலம் தானியம் அரைத்தல் | 50 |
| 31 | மாவகை பொதி செய்தல் | 51 |
| 32 | மாவினால் திண்பண்டங்கள் தயாரித்தல் | 52 |
| 33 | போசாக்கு உணவுப்பொதி தயாரித்தல் | 53 |
| 34 | இனிப்புகள், ரொபிகள் தயாரித்தல் | 54 |
| 35 | தக்காளிக்குழம்பு தயாரித்தல் | 55 — 56 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 36 | யோகட் தயாரித்தல் | 57 — 58 |
| 37 | ஜாம் தயாரித்தல் | 59 — 60 |
| 38 | மார்ஷ்மெலோ தயாரித்தல் | 61 — 62 |
| 39 | நூடில்ஸ் தயாரித்தல் | 63 — 64 |
| 40 | பப்படம் (அப்பளம்) தயாரித்தல் | 65 — 66 |
| 41 | குளிர்பானம் தயாரித்தல் | 67 |
| 42 | பாணிப்பனாட்டு தயாரித்தல் | 68 — 69 |
| 43 | பதநீரிலிருந்து உணவுப்பொருட்கள் தயாரித்தல் | 70 — 71 |
| 44 | பதப்படுத்தப்பட்ட பனங்களி தயாரித்தல் | 72 |
| 45 | கோழி வளர்த்தல் | 73 |
| 46 | ஆடு வளர்த்தல் | 74 |
| 47 | முயல் வளர்த்தல் | 75 |
| 48 | தேனீ வளர்த்தல் | 76 |
| 49 | காளான் வளர்த்தல் | 77 |
| 50 | பட்டுப்பூச்சி வளர்த்தல் | 78 |
| 51 | காஸ் வெல்டிங் தொழில் | 79 |
| 52 | ஆர்க் வெல்டிங் தொழில் | 80 |
| 53 | ஸ்பிறே பெயின்ரிங் தொழில் | 81 |
| 54 | வாகனங்களின் ரயர்களை கையால் மாற்றுதல் | 82 |
| 55 | துவிச்சக்கரவண்டி (சைக்கிள்) பழுதுபார்த்தல் | 83 |
| 56 | கடிகாரம் மணிக்கூடு பழுதுபார்த்தல் | 84 |
| 57 | பி. வி. சி. ஈயக்குழாய் பழுது பார்த்தல் | 85 |
| 58 | பிளாஸ்ரிக் எழுத்துக்கள், பெயர்த்தகடுகள் தயாரித்தல் | 86 |
| 59 | படச்சட்டம் (பிறேம்) அமைத்தல் | 87 |
| 60 | புத்தகம் கட்டுதல் | 88 |
| 61 | புத்தக நிலையம் அமைத்தல் | 89 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயதொழில் முயற்சி - ஓர் அறிமுகம்

மக்கள் மத்தியில் சுயதொழில், வேலைவாய்ப்புகளை ஊக்குவிக்கும் பொருட்டு இன்று பல்வேறு மட்டங்களிலும் பேசப்பட்டு வருகின்றது. உள்ளார்ந்த மூலவளப்பயன்பாடு, வேலைவாய்ப்பு, தனிநபர் வருமானம், தேசிய உற்பத்தி வருமான அதிகரிப்பு ஆகியவற்றிற்கு சுயதொழில் முயற்சி பின்னணியாக அமைகின்றது. அரசதுறையிலோ, தனியார் துறையிலோ கூலிக்குப் பணி புரிவோரைத் தவிர தாமாகவே, சுயமாகச் செய்யும் தொழில் மூலம் வாழ்க்கைக்கு ஆதாரமான வருவாயை பெறுபவை யாவும் சுயதொழில் என்ற பகுப்பிற்குள் அடங்கும்.

## பொருளாதார வளர்ச்சியில்:

தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப தனிநபருடைய உற்பத்தியையும் வருமானத்தையும் பெருக்குவது தகுந்த நடவடிக்கைகளில் ஒன்றாகக் கருதப்பட்டு இன்று பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இளைஞர்களிடையே அமைதியின்மை, எதிர்காலம் பற்றிய நம்பிக்கையின்மை காணப்படுகின்றன. வறுமைப்பட்ட - நாதியற்ற மக்கள் தமது வாழ்க்கையை வளம் படுத்த வழி தெரியாது மலைத்து நிற்கிறார்கள். இவை அடிப்படை பொருளாதார வளர்ச்சி நோக்கத்திற்கு தடையாகக் காணப்படுகின்றன.

படித்த இளைஞர்கள், ''வேலை தருவது அரசின் கடமை'' என்று கருதி அரசாங்கத்தை வேலைவாய்ப்பின் பொருட்டு எதிர்பார்க்கின்றார்கள். இக் கருத்தை நீக்கி, அவர்களுக்கு எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை ஊட்டுவதும், வழிகாட்டுவதும் அவசியமாகும் என்பதோடு அடித்தள மக்களுடைய வாழ்க்கைத் தரமும் உயர்த்தப்பட வேண்டும். இவற்றிற்கெல்லாம் வழிகாட்டியாகச் சுய தொழில் முயற்சி சிபார்சு செய்யப்பட்டுள்ளது. இந்த சுயதொழில் முயற்சியானது பொருளாதார ஏற்றத் தாழ்வைக் குறைத்து பொருளாதார சமநிலையை ஏற்படுத்தும் ஒரு செயற்பாடாகக் கருதப்படுகின்றது.

## தொழில் முயற்சியில்:

இன்று பலரிடம் திறமையும் போதியளவு பயிற்சி அனுபவமும் காணப்படுகின்றன. ஆனால் அவை சரியான முறையில் பயன்படுத்தப்படாமையையும் கூடவே காண்கின்றோம். இவை ஒரு மனிதனுடைய உயர்வுக்கும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் குந்தகமாகக் காணப்படுகின்றன. இத்தகைய பொருளாதார முட்டுக்கட்டையைத் தவிர்ப்பதற்கு சுயதொழில் முயற்சி வழி காட்டுகின்றது.

சுயதொழில் முயற்சியானது தனி மனிதனது திறமை, பயிற்சி, முயற்சி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சுயவருவாயை ஏற்படுத்திக் கொள்ளும் பொருளாதார நடவடிக்கையாகும். அதேநேரம் பிறருக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கக்கூடிய சாத்தியங்களைக் கொண்ட தொழில் முயற்சிச் செயற்பாடாகவும், வறுமைக் கோட்டுக்குள் உள்ள மக்களை உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடுத்தும் நடவடிக்கையாகவும் அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலட்சிய நோக்கில்:

மக்களை பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடவைக்க வேண்டும் என்பது அரசின் கொள்கையாக உள்ளது. இவ்வாறு மக்களை நேரடியாக ஈடுபட வைப்பதில் ஒரு கட்டமாக அரசுசார்பற்ற உற்பத்தி நிறுவனங்களை மக்கள் மயப்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இது தவிர வரையறுக்கப் பட்ட கம்பனி அல்லது தனிநபர் முயற்சி அல்லது கூட்டுறவுமுயற்சி என்பன இன்று உற்பத்தி நடவடிக்கைகளுக்கு தீவிரமாக சிபார்சு செய்யப்படுகின்றன.

வளர்முக நாடுகளில் தொழில் முயற்சிக்கும் அதில் ஈடுபடும் உற்பத்தி யாளர்களுக்கும் ஆரம்ப கட்டத்தில் நிதி வசதிகள், தொழில் பாதுகாப்பு, சேவை வசதிகள், சந்தைவாய்ப்பு என்பன தேவைப்படுகின்றன. இவை பெரிய தொழில் தொடக்கம் சிறிய தொழில் வரைக்கும் பொருந்தும்.

இன்று பொருளாதாரத்தை கிராமமட்டத்திலிருந்து கட்டியெழுப்பும் கொள்கையை அரசாங்கம் கொண்டுள்ளது. அடித்தள மட்டத்திலிருக்கும் வறிய மக்களின் பொருளாதார முயற்சியை அடிப்படையாகக் கொண்டு பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. வறுமைப்பட்ட மக்கள் தங்கள் வறுமையை ஒழித்து சொந்தக்காலில் நிற்கும் பல திட்டங்கள் மக்கள் முன்வைக்கப் பட்டுள்ளன. சனசவிய கிராம எழுச்சித்திட்டம் என்பன இவற்றுள் அடங்கும். சனசவிய உதவித்திட்டத்தின் அடிப்படைக் கோட்பாட்டில் சுயதொழில் வேலைவாய்ப்பு மையமாகக் காணப்படுகின்றது.

இந்த சுயதொழில் முயற்சியானது கிராமமட்ட பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் தொடக்க நிகழ்ச்சியாக அமைகின்றது. தனிநபர் உற்பத்தி அதிகரிப்பு, தேசிய உற்பத்தியை அதிகரிக்கின்றது. தேசிய உற்பத்தி தேசிய வருமானத்தை அதிகரிக்கின்றது. வாழ்க்கைத்தர உயர்வு, வேலைவாய்ப்பு சாத்தியங்கள் என்பன இவற்றுடன் இணைந்ததாகக் காணப்படுகின்றன. இந்த வகையில் ஏற்படுத்தப்பட்ட ஏற்றுமதி அபிவிருத்திக் கிராமம், விவசாய அபி விருத்திக் கிராமம் என்பன சுயதொழில் வளர்ச்சிமூலம் ஏற்றுமதியை நோக்க மாகக் கொண்டவையாகும். ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட சுய தொழில் முயற்சிகள் மூலம் நவீன தொழில் நுட்பத்தை கிராமமட்டத்திற்கு எடுத்துச்செல்ல முடிகின்றது. அது மட்டுமல்ல அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பளிக்கின்றது.

## சுயதொழில் முயற்சிக்கு உதவிகள்:

சுயதொழிலில் ஈடுபடுவோருக்கு உதவிகளும் பாதுகாப்பும் தேவைப்படு கின்றன. இன்று அரசாங்கம் மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களால் கிடைக் கக்கூடிய உதவிகள் பற்றிய விளக்கங்கள் பகிரங்கப்படுத்தப்படல் வேண்டும்.

1. நிதி உதவி
2. தொழில் நுட்ப மற்றும் ஆலோசனை
3. சந்தைவாய்ப்பு வசதி
4. முகாமைத்துவ ஆலோசனை

என்பன பற்றிய உதவிகளை/ வசதிகளை மக்களுக்குத் தெரியப்படுத்துவதன் மூலம் சுயதொழில் உற்பத்தி முயற்சியில் மக்களை ஈடுபடத் தூண்டமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தி முயற்சியில் ஈடுபட வைக்க பல்வேறு காரணிகள் பின்னணியில் உள்ளன. ஒருவரிடம் தொழில் அறிவு இருக்கும், நிதி இருக்காது. இவையி ரண்டும் இருக்கும்போது சந்தைவாய்ப்பு குறைவாக இருக்கும். இவை எல்லாம் இருந்தும் பொருத்தமான தொழில்நுட்ப வசதியிராது. எல்லா அமைவுக் கார ணிகள் இருந்தும் சுயதொழிலில் ஈடுபட மக்களுக்கு மனத்துணிவு, நம்பிக்கை இல்லாதிருக்கும்.

சுயதொழிலில் ஈடுபடக்கூடிய நம்பிக்கையையும் மனத்துணிவையும் கொடுக் கக்கூடிய ஒரு வழிகாட்டி இன்று மக்களுக்குத் தேவைப்படுகின்றது. கைத்தொ ழில் அபிவிருத்தி அடிப்படைப் பரவலுக்கும் பொருளாதாரத்தைக் கிராமமட் டத்தில் கட்டியெழுப்புவதற்கும் பல்வேறு கோணத்திலிருந்து பலரும் முயன்று வருகின்றார்கள். இவர்கள் எல்லோரும் மக்களுக்கு மனத்தெளிவை ஏற்படுத்தி நேரடியாக உற்பத்தியில் ஈடுபட வைப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

## நாளைய முதலீட்டாளர்:

இன்றைய சுயதொழிலில் ஈடுபடுபவர்கள் எதிர்காலத்தில் ஒரு முதலீட்டாளர் களாக மாறக்கூடிய சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளார்கள். மூலதனப் பிரயோகத்தையும் தொழில்நுட்ப உத்திகளையும் சரிவர தமது சுயதொழிலுக் குப் பயன்படுத்துவார்களேயானால், சுயதொழிலானது ஒரு நிறுவனத்தொழில் முயற்சியாக மாறி பலரின் வேலைவாய்ப்பிற்கும் தேசிய உற்பத்திப் பெருக்கத் திற்கும் அடிகோலும்.

உங்கள் எல்லோருக்கும் ஒரு சிறுவிடயத்தைக் கூற விரும்புகின்றோம். உலகில் மோட்டார்வாகன உற்பத்தியில் முன்னணியில் நிற்கும் ஹொண்டா கம்பனி உரிமையாளர் ஆரம்பத்தில் ஒரு சைக்கிள் திருத்தும் சுயமுயற்சித் தொழிலிலேதான் தனது தொழில் முயற்சிப்பாட்டை ஆரம்பித்தார். இன்று உலகை வியக்கவைக்கும் ஒரு நிறுவனத்தை அவரால் கட்டியெழுப்ப முடிந்துள் ளது.

இச்சிறு நூலானது மக்களைச் சுயதொழிலில் ஈடுபட ஒரு வழிகாட்டியாக அமைந்து அவர்களுக்கு தொழிலையும், வாழ்க்கைக்குத் தேவையான வருமானத் தையும் கொடுக்கும் ஒரு பாதையைக் காட்டுமானால் எமது முயற்சியில் ஓர் இலக்கை அடைந்தோம் என்ற மனநிறைவை அது எமக்கு ஏற்படுத்தும்.

"முயற்சி திருவினையாக்கும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயதொழிலும் வேலையில்லாத் திண்டாட்டத் தீர்வும்

சுயதொழில் வளர்ச்சிக்கு அரசு தீவிர முயற்சி எடுத்து வருவதனால் மக்களுடைய கவனம் அதன்பால் திரும்பியுள்ளது. இதற்கு அரசாங்கத்தின் கொள்கைத்திட்டத்தில் அதிமுக்கியத்துவம் கொடுக்கப்பட்டு பலவித உதவிச்சேவைகளும் இதன் பொருட்டு விரிவுபடுத்தப்பட்டுள்ளன. வறுமை ஒழிப்புத்திட்டம் (சனசவிய) என்பதனை சுயதொழில் விருத்திக்காக உருவாக்கப்பட்ட திட்டம் எனக் கூறினால் மிகையாகாது.

## 1. சுயதொழில் கருதுகோள்

தேடிப்பெறும் வழிமுறையே தொழிலாகும். முயற்சி, வருவாய் இரண்டும் இதற்குள் அடங்கும். சுயதொழில் ''தன் முயற்சியால் வருவாயைத் தேடும் ஒரு வழி'' என்று சுருக்கமாகக் கூறலாம். இன்னொருவகையில் கூறினால் தனது வாழ்க்கைக்கு ஆதாரமான வருமானத்தைப் பெறும் ஒரு நிரந்தர தொழில் முயற்சி எனலாம். வேலையில்லாப் பிரச்சினைத் தீர்வுக்கும் அடிப்படைப் பொருளாதார வளர்ச்சிக்குமான மாற்றுவழியாகவும் சுயதொழிலை பொருளியலாளர்கள் சிபார்சு செய்துள்ளனர்.

இன்று அரசாங்கத்திலும் தனியார்துறையிலும் வேலை செய்வோர் வருமானப் பற்றாக்குறைக்கு ஆளாகின்றார்கள். இவர்கள் மேலதிகமாக உப வருமானத்தை உருவாக்கிக்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள். சிலர் குறை உழைப்பு (UNDER EMPLOYMENT) தொழிலிலும் ஈடுபட்டுள்ளார்கள். இவற்றைத் தவிர, பலர் வேலையில்லாமல் இருக்கின்றார்கள். கணிசமான தொகையினர் திறமைக்கும், முயற்சிக்கும், உழைப்புக்கும் உரிய வேதனம் கிடைக்காமல் இருக்கின்றார்கள். இவர்கள் யாவரும் தமது மேலதிகவருவாயைப் பெற அல்லது அதிகரிக்க சுயதொழிலைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர்.

இலங்கையில் தொழிற் பாகுபாடுகளை நோக்கும்போது அரசாங்கத் துறைத் தொழிலில் ஈடுபட்டோர் மிகக்குறைவாகவே காணப்படுகின்றனர். தனியார் துறையினரும் - தனிநபரும் ஒரு தொழிலை ஆரம்பிக்குமுன்பு பல்வேறு அமைவுக் காரணிகளை ஆராய கடமைப்பட்டுள்ளனர்.

## 2. சுயதொழிலைத் தெரிவுசெய்தல்

எந்த ஒரு தொழிலையும் ஆரம்பிக்குமுன்பு அதன் சாத்தியங்கள் பற்றி அலசி ஆராயவேண்டும். பின்வரும் அம்சங்களை கருத்திற்கொண்டு சுயதொழில்களைத் தெரிவுசெய்யலாம்.

### 2:1 பிரதேசத் தேவைகளை நிர்ணயம் செய்தல்

தான் வாழும் பிரதேசத்தில் மக்களுடைய தேவைகள் எவை என்பதில் கருத்துத் தெளிவைக் கொண்டிருக்க வேண்டும். பிறபகுதியிலிருந்து இந்தப் பிரதேசத்திற்கு என்னென்ன பொருட்கள் கொண்டுவரப்படுகின்றன. இவற்றை இங்கு உற்பத்தி செய்யமுடியுமா என்பது பற்றி ஆராயவேண்டும். அல்லாமலும் அப்பகுதி மக்களுடைய தேவைகள், அபிலாஷைகள் என்பன உற்பத்தி நடவடிக்கை மூலம் பூர்த்தி செய்யப்படுகின்றனவா என்பதையும் ஆராய்ந்து செயற்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2:2. பிரதேச வளம்

தான் வாழும் பிரதேசத்தின் வளங்கள் எவையெவை கவனிக்கப்படாது இருக்கின்றன. அவற்றை எப்படி முடிவுப்பொருளாக மாற்றலாம் என்ற எண்ணக்கருவையும் திட்டம் நடைமுறைப்படுத்தல் பற்றிய தெளிவையும் கொண்டிருத்தல்.

## 2:3. தொழில் நுட்பம்

சுயதொழிலுக்குப் பொருத்தமான தொழில்நுட்பம் பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்ளல்.

## 2:4. சந்தைவாய்ப்பு

உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு உள்ளூரிலும் வெளியூரிலும் உள்ள சந்தைவாய்ப்பை நிர்ணயம் செய்தல்.

## 2:5. பயிற்சியும் அனுபவமும்

சுயதொழிலை ஆரம்பிப்பதற்கு தனக்குள்ள பயிற்சிகளையும், அனுபவங்களையும் பிரதேசத்திலுள்ள வளங்கள் மீது எவ்வாறு பிரயோகிக்கலாம் என்றும் உற்பத்தி முயற்சியை எவ்வாறு அமைக்கலாம் எனவும் நிர்ணயம் செய்தல்.

## 3. சுயதொழில் வகைகள்

ஆரம்பித்த அடுத்த வருடமே மூடுவிழா செய்கின்ற தொழில்களை சுயதொழில் என்று கூறமுடியாது. வருவாய் குறைந்ததும் நீண்டகாலம் நிலைத்து நிற்காதவையுமான தொழில்கள் சுயதொழிலுக்குப் பயன்படாதவை. சரிவரச் சுயதொழிலைத் தெரிவுசெய்யாத பட்சத்தில் அதில் ஈடுபடுத்தப்பட்ட மூலதனம் கரைந்துவிடும்.

3:1. விவசாயம், விவசாய அடிப்படையிலான கைத்தொழில்கள்.
3:2. மிருகவளர்ப்பு அதனுடன் தொடர்புடைய தொழில்கள்.
3:3. நெசவும் தையலும்.
3:4. கட்டட நிர்மாணம்.
3:5. உள்ளூர் மூலதனத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள்.
3:6. கைவினைப் பொருள் உற்பத்தி.
3:7. அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருள் உற்பத்தி.
3:8. சேவை வழங்கும் தொழில்கள்.

என மேலெழுந்தவாரியாக சுயதொழில்களை வகைப்படுத்திக் கொள்ளலாம். இவற்றினுள் எவை அதிக இலாபந்தரக்கூடியவை, எவற்றுக்கு அதிக சந்தைவாய்ப்பு உண்டு என்பதைத் தேர்ந்து முடிவு செய்தல் வேண்டும். ஆராய்ந்த தெரிவுதான் தொழிலின் வாழும் காலத்தை நிர்ணயிக்கும்.

## 4. சுயதொழிலில் ஈடுபடுவோர்

இன்று மேலதிக வருமானம் பலருக்குத் தேவைப்படுகின்றது. இவர்களும் தமது வருமானத்தைப் பெருக்க சுயதொழிலில் ஈடுபடலாம். இன்று வேலையற்றோரையும் குறையுழைப்பில் ஈடுபட்டோரையும் சுயதொழிலில் ஈடுபடுத்த திட்டங்கள் தீட்டப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4:1. ஒரு குடும்பத்தலைவர் தனியாகவே சுயதொழிலில் ஈடுபடலாம்.

4:2. ஒரு குடும்பத்தலைவர் குடும்ப அங்கத்தவர் ஒருவருடன் இணைந்து சுய தொழிலில் ஈடுபடலாம்.

4:3. குடும்பத்தில் பலர் சேர்ந்து சுயதொழிலில் ஈடுபடலாம்.

4:4. ஒருவர் வெளியார் ஒருவருடன் சேர்ந்து சுயதொழிலில் ஈடுபடலாம்.

இவை தனிநபர் முயற்சியாக அல்லது கூட்டுறவு முயற்சியாக அமையலாம். இதில் ஈடுபடுபவர்கள் தமது சக்தி, உற்சாகம் என்பவற்றின் அடிப்படையில் தொழில் தொடங்கவேண்டும். உற்பத்திகள் சந்தையில் கிராக்கியை ஏற்படுத் தக்கூடியதாக இருக்கவேண்டும்.

## 5. சுயதொழிலை ஊக்குவிக்க அரசு மற்றும் அரசுசார்பற்ற நிறுவனங்கள் கடைப்பிடிக்க வேண்டியவை:

## சுயதொழில் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

### 5:1. சந்தைப்படுத்தல்

எந்த ஒரு உற்பத்தியும் உறுதியான சந்தைவாய்ப்பினைக் கொண்டிருக்க வேண்டும். சந்தைவாய்ப்பே தொழிலுக்குப் பாதுகாப்பு வழங்குகின்றது. உற்பத் தித்தரம், வெளிச்சந்தையில் விற்கும் விலை ஆகிய இருவகையிலும் உற்பத்தி பாதுகாக்கப்பட வேண்டும். திறந்த பொருளாதார அமைப்பில், சுயதொழில் உற்பத்திப் பொருட்கள் சவாலை எதிர்நோக்க வேண்டியுள்ளன. அலங்காரப் பொருட்கள், நவநாகரிக உற்பத்திப் பொருட்களாகியன வெளிநாட்டுப் பொருட் களுடன் போட்டி போடமுடியாது தளம்புகின்றன. இதனால் சுயதொழிலில் உற்பத்திப் பொருட்கள் தேக்கநிலையை அடைவது தவிர்க்க முடியாதுள்ளது.

கமத்தொழில் சார்ந்த பொருட்களும் தகுந்த விலை கிடைக்காமல் நலிந்து வருவதைக் காணலாம்.

### 5:2. நவீன தொழில்நுட்பம்

சுயதொழில் உற்பத்திகளுக்கு நவீன தொழில்நுட்பம் செம்மையான வகை யில் கிடைப்பதில்லை. உற்பத்தியாளர் தமது பயிற்சி அனுபவத்தைக் கொண்டு உற்பத்தியில் ஈடுபடுகின்றனர். இவர்களுக்கு நடுத்தர தொழில்நுட்ப வசதிகள் மிகக் குறைவாகவே கிடைக்கின்றன. அல்லது கிடைப்பதேயில்லை.

### 5:3. நிதி வசதிகள்

சுயதொழிலில் ஈடுபட்டோருக்குப் போதியளவு நிதி கிடைப்பதில்லை. நிதிப் பற்றாக்குறையால் இந்தச் சுயதொழிலை விரிவுபடுத்த முடியாதுள்ளது.

## 6. உற்பத்திச் செலவை மட்டுப்படுத்தல்

### 6:1. சுயதொழிலில் தொடர்புமுறை

சுயதொழில் முயற்சிகளை ஒரு தொடர்புநிலைப்படுத்த வேண்டும். இதன் மூலம் உற்பத்தியின் தரத்தையும், பாதுகாப்பையும் வழங்கமுடியும். அல்லாமலும் உள்ளூர் சந்தைவாய்ப்பு, ஏற்றுமதிச்சந்தை என்ற ரீதியில் அதனை விரிவுபடுத்த முடியும். வளர்ச்சியடைந்த நாடுகள் தமது உற்பத்திச்செலவைக் குறைப்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராம மட்டத்திலுள்ள சுயதொழிலாளருடன் கொண்டுள்ள உற்பத்தித் தொடர்புநிலை தொழில் வெற்றியின் இரகசியமாகக் கொள்ளப்படுகின்றது.

வளர்ச்சியடைந்த நாடுகளில் தொழில் முயற்சிகள் குத்தானதும், கிடையானதுமான தொடர்புநிலைகளைக் கொண்டவையாகக் காணப்படுகின்றன. இவை தொழில் வளர்ச்சிக்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. வெளிநாடுகளில் பாரிய கம்பனிகளானவை, கிராமமட்டம் வரை தமது உற்பத்தித்தொடர்புகளைக் கொண்டிருக்கின்றன. மக்கள் பலர் தத்தம் வீடுகளில் இருந்துகொண்டே பெரிய கம்பனிகளுக்கு உற்பத்திப் பாகங்களை உற்பத்திசெய்து வழங்குகின்றனர். இதனால் சுயதொழிலில் ஈடுபட்ட மக்களுக்கு சந்தைப் பிரச்சினை, விலைப் பிரச்சினை என்பன எழுவதில்லை. நிதிப்பிரச்சினையும் அவர்களைத் தாக்குவதில்லை. பாரிய கம்பனிகள் உற்பத்திப் பொருட்களின் தரத்தை உறுதி செய்து சந்தைப்படுத்துகின்றன. இதனால் பாரிய கம்பனிகளுக்கு உற்பத்திச்செலவு குறைகின்றது. இதனால் பாரிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்கான நிலப்பிரச்சினை, தொழிலாளருக்கான சேவைவசதி, தொழிலாளர் பிரச்சினை என்பன அவர்களைப் பாதிப்பதில்லை. மூலப்பொருட்களைத் தேடிக் கொடுப்பதிலும் சந்தைவாய்ப்பைக் கண்டுபிடிப்பதிலும் கம்பனிகள் அதிக கவனம் செலுத்துகின்றன. இதனால் சுயதொழில் உற்பத்தியாளர்கள் தமது உழைப்பையும் திறமையையும் பயன்படுத்தித் தரமான உற்பத்திப்பொருட்களைச் செய்வதில் அதிக ஈடுபாடு கொள்கின்றார்கள்.

வளர்முக நாடுகளில் சுயதொழிலில் ஈடுபடுவோர் பல்வேறு கோணங்களிலிருந்து பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள். இந்தப் பிரச்சினைகளை வெற்றிகொள்ள முடியாத நிலையில் இவர்களுடைய தொழில் முயற்சி நலிவடைகின்றது. உற்பத்தியாளர்கள் தரமான உற்பத்தியில் மட்டும் கவனம் செலுத்தும் ஒரு நடைமுறை இருக்கும்பட்சத்தில் அவர்களுடைய திறமை பூரணமாக வெளிப்படுகின்றது. இதனால் உற்பத்தித் தரமும், தொகையும் அதிகரிக்கின்றது. ஏனைய வசதிகளான சந்தைவாய்ப்பையும் தொழில்நுட்ப வசதிகளையும் கம்பனிகள் பெற்றுக் கொடுக்கும்போது சுயதொழில் முயற்சியில் வெற்றி இலகுவாகின்றது. இந்த முறைகளை வளர்முகநாடுகள் கைக்கொள்ளுவதன் மூலம் அவர்களின் எதிர்கால பொருளாதார வளர்ச்சி துரித முன்னேற்றமடையும். வளர்ச்சியடைந்த ஜப்பான், வளர்ந்துவரும் நாடுகளான பிலிப்பைன்ஸ், தென் கொரியா, மெக்சிக்கோ போன்ற நாடுகளைப்போல சுயதொழில்கள் வகுக்கப்பட்டு கம்பனிகளுடன் தொடர்புடையதாக உற்பத்திகள் மேற்கொள்ளப்பட வேண்டும். வேலையற்ற எல்லோரும் சுயதொழிலில் ஈடுபடமுடியாது. சுய தொழில் என்பது திறமையுள்ளவர்களுக்கு மட்டுமே. திறமை, பயிற்சி, சிறந்த நிர்வாகம் என்பவற்றின்மூலம் சுயதொழிலை வெற்றிப்பாதையில் வழிநடத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயதொழிலும் பொருத்தமான தொழில்நுட்பமும்

மட்டுப்படுத்தப்பட்ட வளங்களிலிருந்து உச்சப்பயனைப் பெறுவதற்கான ஒரு வழிமுறையைத் தொழில்நுட்பமெனலாம். இத்தொழில்நுட்பமும் காலம், இடம், சமூகஅமைப்பு, பொருளாதார அமைப்பு ஆகியவற்றிற்குப் பொருந்தக் கூடியதாக அமைதல் வேண்டும். இதனையே பொருத்தமான தொழில் நுட்ப மெனலாம்.

வளங்கள் மட்டுப்படாதவையாயின் பொருத்தமான தொழில் நுட்பம் அவசியமற்றதாகின்றது. உற்பத்திப் பொருட்களின் விலையில் கட்டுப்பாடு வேண்டப்படாதவிடத்தும் பொருத்தமான தொழில்நுட்பம் அவசியமற்றதா கின்றது. ஆனால் உலகின் எவ்வளமும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப் படுகின்றது. அதுபோல உற்பத்திப் பொருட்களின் விலையும் மட்டுப்படுத்தப் பட்டதாகவே அமைகிறது. பொருளின் தரத்தைவிட அதன்விலை பன்மடங்கு அதிகரித்திருக்குமாயின் அதனை சந்தைப்படுத்துவது முடியாத ஒன்றாகிவிடும். எனவே வளங்களின் சிக்கனத்தன்மையையும் உற்பத்திப் பொருட்களின் விலைத் தரத்தினையும் பேணும் ஒரு வழிமுறையாகவே பொருத்தமான தொழில்நுட் பம் விளங்குகின்றது.

தொழில்நுட்பம் உயர்ந்ததாக இருக்கவேண்டும் என்பதனைவிட பொருத்த மானதாக இருக்கவேண்டும் என்பதே முக்கியமானதாகும். இதுவே தகுந்த தொழில்நுட்பமாகும். அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளுக்கு பாரிய தொழில் நுட்பம் பொருத்தமான தொழில்நுட்பமாக அமைந்துவிட, வறுமையுற்ற தென் கிழக்காசிய நாடுகளுக்கு சிறு அளவிலான தொழில்நுட்பமே பொருத்தமான தொழில்நுட்பமாக அமைந்துவிடுகிறது. பொருத்தமான தொழில்நுட்பத்தின் சில அடிப்படை இயல்புகள்:-

1. பொருத்தமான தொழில்நுட்பம் எளிமையானதாகவும், தொழிலாளர் தொழில்நுட்பத்தை இலகுவாக விளங்கிக் கொள்ளவும் அதனை இலகுவாக கடைப்பிடிக்கக்கூடியவாறும் அமைதல் வேண்டும்.

2. பொருத்தமான தொழில்நுட்பம் அதிக பணமுதலீடு வேண்டாததாக அமைதல்வேண்டும். சுயதொழில் அல்லது குடிசைக்கைத்தொழில் சார்ந்த தாக இது அமையும்.

3. மக்களின் சக்தியையும் திறமையையும் அடிப்படையாகக் கொண்டு இத் தொழில் நுட்பம் அமையவேண்டும். இயற்கையோடு இயைந்ததாகவும் சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்புடையதாகவும் அல்லது சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்தாததாகவும் இது அமைதல் வேண்டும்.

4. தகுந்த தொழில் உற்பத்தியின்போது கிடைக்கப்பெறும் கழிவுப்பொருட்களும் இயன்றளவுக்கு நுகர்வுப்பொருளாக (பாவனைப் பொருளாக) மாற்றப்படல் வேண்டும். இக்காலத்தில் நெல்லிலிருந்து கிடைக்கும் கழிவுப்பொருளான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமி மீண்டும் வயலுக்கு பசளையாகப் பயன்படுத்தப்படுவதையும், எரிக்கப்பட்டு அதன்சாம்பல் பற்பொடியாக மாற்றப்படுவதையும் இங்கு குறிப்பிடலாம்.

5. கழிவுப் பொருட்கள் அற்ற அல்லது மீள உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட முடியாத எரிபொருள் முதலியவற்றை இயன்றளவு சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். இவை பெருமளவு பணவிரயத்தை ஏற்படுத்துவதுடன் சுற்றுப்புறச் சூழல் மாசடைவதற்கும் காரணமாக அமைந்துவிடும்.

# பொருத்தமான தொழில்நுட்பத்தின் இன்றியமையாமை

1. பொருத்தமான தொழில்நுட்பத்தினை பயன்படுத்துவதன் மூலம் உற்பத்தி அளவினைக் கட்டுப்படுத்துவதுடன் சந்தைவிலையையும் தளம்பாது பாதுகாத்துக்கொள்ள முடியும். பேரளவு உற்பத்திப் பொருட்கள் நிரம்பலை அதிகரிப்பதுடன் சந்தைவிலையில் வீழ்ச்சியையும் ஏற்படுத்திவிடும்.

2. சிறு உற்பத்தி முயற்சிகளில் ஈடுபடக்கூடிய அளவிற்கே எமது நாட்டின் தொழில்நுட்பமும் வளர்ச்சியடைந்துள்ளது. அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் தமது நாடுகளில் கிடைக்கும் பெருமளவிலான வளங்களைப் பயன்படுத்தி பாரிய உற்பத்தி நடவடிக்கைகளில் முன்னேறியுள்ளன. அதிகளவிற்கு எமது நாட்டின் வளங்கள் பெருமளவினதாக இல்லாதிருப்பதனால், கிடைக்கும் சொற்ப வளங்களைப் பயன்படுத்தும் அளவிற்கே எமது தொழில்நுட்பமும் உற்பத்தி முயற்சிகளும் அமைதல் வேண்டும்.

3. மூலதனவளமும் சேமிப்பும் பெருமளவிலற்ற எமது நாட்டிற்கு சிறு உற்பத்தி முறைகளே சாத்தியமானவையாகும். இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருட்களை அடிப்படையாகக் கொண்ட பேரளவு கைத்தொழில்களுக்கு எமது மூலதனமோ சேமிப்போ ஈடுகொடுக்குமளவிற்கு இல்லையாகையினால் எமது நாட்டில் கிடைக்கும் வளங்களுக்கேற்ற பொருத்தமான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதே உசிதமானதாகும்.

4. எமது நாட்டின் சமூக அமைப்பிற்கு ஏற்றவகையிலேயே எமது உற்பத்தி நடவடிக்கைகளும் தொழில்நுட்பமும் அமைதல்வேண்டும். பாரிய கைத்தொழில்கள் சமூகத்தில் சடுதியான மாற்றங்களை ஏற்படுத்திவிடும். இம்மாற்றங்களின் விளைவுகளை ஏற்றுக்கொள்ளுமளவிற்கு எமது சமூக அமைப்பு இன்னும் விருத்தியடையவில்லை. எனவே எமது சமூக அமைப்பிற்கேற்றதான பொருத்தமான தொழில்நுட்பத்தை உற்பத்தி முயற்சிகளில் பயன்படுத்துவதன் மூலமே சமூகத்தில் படிப்படியான மாற்றங்களை ஏற்படுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பொருத்தமற்ற தொழில்நுட்ப முறைகள் உற்பத்தி முயற்சிகளில் பயன் படுத்தப்படும்போது அவை மக்கள் தலையில் மீளமுடியாத பெருஞ்சுமை யைச் சுமத்தி விடும். வடபகுதி மக்கள் பண்டைக்காலத்திலிருந்தே கிணறு களிலிருந்து துலா மூலம் பயிர்களுக்கு நீர்ப்பாய்ச்சி வந்தனர். தண்ணீர்ப் பம்பி, மோட்டர் ஆகியவற்றின் வருகையுடன் துலாமூலம் நீரிறைக்கும் முறை கைவிடப்பட்டுவிட்டது. தற்போது எரிபொருள் தட்டுப்பாடு காரண மாக தண்ணீர்ப் பம்பியோ, மோட்டர்களையோ இயக்கமுடியாத நிலையில் வடபகுதி விவசாயிகள் தத்தளிக்கின்றனர். எப்போதுமே எமது இயல்புக் கேற்ற தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதனை இந்நிலை யானது நிரூபிக்கின்றது.

பொருத்தமான தொழில்நுட்பத்தைக் கையாள்வதற்கு எமது நாட்டிலுள்ள உள்நாட்டுப் பொறிகளை (யந்திரங்களை) பயன்படுத்தலாம். இப்பொறிகள் மலிவானவையும், தரமானவையும், இலகுவானவையுமாகும். இப்பொறிகளைக் கையாள்வதற்கேற்ற பயிற்சிகள் தொழில்நுட்பவியலாளர்களினால் வழங்கப் படும். இப்பயிற்சி வழங்கல்கள் மூலம் எமது சுயதொழில்வாய்ப்புக்களை வளர்ப் பதுடன் அவற்றின் ஸ்திரத்தன்மையையும் பேண வழியுண்டாகும்.

இந்நூலில் குறிப்பிடப்படும் சுயதொழில் முயற்சிகளுக்கான இயந்திர சாதனங்கள் ஸ்ரீலங்கா அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தினால் விற்பனை செய் யப்படுகின்றன. அவற்றைப் பயன்படுத்தும் வழிமுறைகள் பற்றி இந்நிறுவனத் தினால் தகுந்த தொழில்நுட்பப் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனசவிய நம்பிக்கை நிதியத்தின் சமூகநலத் திட்டங்கள்

## 1. சனசவிய நம்பிக்கை நிதியம்

இலங்கை அரசு, கடன்வழங்கு நிறுவனங்களின் உதவியுடன் சனசவிய நம்பிக்கை நிதியம் ஒன்றினைப் புதிதாக உருவாக்கியுள்ளது. இந் நிதியம் இலங்கையின் மிக வறுமைப்பட்ட குடும்பங்களுக்கு உதவும் வகையில் சனசவியத் திட்டத்திற்கு தனது உதவிகளை வழங்க முன்வந்துள்ளது. சனசவிய நம்பிக்கை நிதியம் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை ஒன்றினால் பரிபாலிக்கப்படும். இச் சபை கொள்கைத்திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சினூடாக அரசாங்கத் தொடர்புடையதாகின்றது.

வறிய குடும்பங்களுக்கான இவ்வுதவிகள் வருமானத்தை அதிகரித்தல், தொழில்வாய்ப்புக்களை உருவாக்குதல், சத்துணவுத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றினை உள்ளடக்குகின்றது. இந்நம்பிக்கை நிதியம் ஒரு மூலாதார நிறுவனமாகச் செயற்படுவதுடன் பின்வரும் காரணங்களின் பொருட்டு பங்காளர் நிறுவனங்களுக்கு நன்கொடையாகவும், கடனடிப்படையிலும் நிதி உதவிகளை வழங்கும்.

1. மனிதவளமும் நிறுவனரீதியான அபிவிருத்தியும்.
2. சிறு அளவிலான மூலாதாரத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
3. சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்திக்கான கடன் வழங்கு நடவடிக்கைகளை விரிவுபடுத்தல்.
4. அவ்வப்போது சத்துணவுத்திட்டத்தை வகுத்தமைத்து நடைமுறைப்படுத்தல்.

கொழும்பிலுள்ள உத்தியோகத்தர் குழாத்தின் உதவியுடன் சனசவிய நம்பிக்கை நிதியத்தின் நடவடிக்கைகள் பங்காளர் நிறுவனங்களின் அனுசரணையுடன் நடத்தப்படும். பங்காளர் நிறுவனங்கள் அரசுசார்பற்ற தாபனங்களையும், ஆதார அடிப்படைக் குழுக்களையும், வங்கி, தொழில்நுட்பத் தாபனங்கள் மற்றும் ஏனையோர்க்கும் வேண்டிய பயிற்சியையும் வளங்களையும் அளிக்கும். இதன்மூலம் நீண்டகால உதவிகளை ஏழைகளுக்கு வழங்கமுடியும்.

பங்காளர் நிறுவனங்கள், அரசுசார்பற்ற நிறுவனங்களையும் அடிமட்டத்திலான குழுக்களையும், வங்கிகள், அரசாங்க தொழில்நுட்பமுகவர் நிறுவனங்கள் போன்றவற்றையும் உள்ளடக்கியதாக இருக்கும். இந்நிறுவனங்களின் வளர்ச்சியின் பொருட்டு வேண்டிய மூலாதார வசதிகள் வழங்கப்படுவதோடு பயிற்சியளித்தல், நிறுவன அபிவிருத்தி உதவிகளுக்கான நிதியும் உதவியாக வழங்கப்படும். இதன்மூலம் வறியோர்க்கான வசதிகள் நீண்டகாலத்திற்குச் செய்து கொடுக்க முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. சனசவிய திட்டம்

சனசவிய திட்டத்தின் ஆதரவுடன் இயங்கும் சமூகத்திட்டங்கள், தொழிலாளர்கள் நடவடிக்கைகள் ஆகியன உற்பத்தி சார்ந்ததாயமைவதை உறுதிப்படுத்தும். இவை நலன்பெறுவோர் ஒத்தாசையையும் பெற்றுக்கொள்ளும். சகல திட்டங்களும்

1. நலன்பெறுநர் சம்பந்தப்பட்டதாக திட்டமிடப்படும்.
2. சமூக பொருளாதார இயக்கம் உடையதா எனப் பரிசீலிக்கப்படும்.
3. தொழில்நுட்ப சாத்தியம் கொண்டதா எனப் பரீட்சிக்கப்படும்.
4. தேவைப்படும் இடங்களில் தகுதிவாய்ந்த பொறியியலாளர்களால் வடிவமைக்கப்படும்.

நலன்பெறுநர் குடும்பத்தைச் சேர்ந்த ஓர் அங்கத்தவர் கிராமத்தில் உள்ள நம்பிக்கை நிதியத்தின் உதவிபெறும் திட்டமொன்றிலே மாதமொன்றுக்கு 20 நாட்களுக்கு தமது உழைப்பை வழங்கவேண்டும்.

இவ்வகையான பயிற்சியை பெற்றுக்கொண்டதும், சுயதொழில் நடவடிக்கைகளிலே ஈடுபட்டுள்ளதுமான குடும்பங்களுக்கு இவ்விதியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. வறுமைநிலையை அண்மிய இதர உறுப்பினர்களுக்கு உள்ளூரில் வழங்கப்படும் கூலியின் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும். சம்பளம் அவ்வப்போது குறிப்பிட்ட வேலைகள் முடிவடைகையில் வழங்கப்படும்.

## 3. பங்காளர் நிறுவனங்கள்

மேலே குறிப்பிட்டவாறு சனசவிய நம்பிக்கையானது தகுதிவாய்ந்த பங்காளர் நிறுவனங்களினூடாக சமூகத்திட்டங்களை மட்டும் நடைமுறைப்படுத்தும். சமூகச் செயற்றிட்டங்களுடன் தொடர்பிணைப்பை ஏற்படுத்திக் கொள்ளுமுகமாக ஒவ்வொரு நிறுவனமும்:-

- தன்னைப் பதிவுசெய்து கொள்ளல் வேண்டும். அத்துடன் குறைந்தது வறுமையுற்றோர் தொடர்பில் இரண்டு வருடங்களுக்காவது செயற்பாட்டு அனுபவமுடையதாயிருத்தல்.
- சனசவியத்திட்டம் நடைமுறையிலுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவிலே ஓர் அலுவலகத்தை அமைத்தல்.
- திட்டங்களை முகாமை செய்வதன்பொருட்டு அனுபவமுடைய தகுதியான உத்தியோகத்தரை நியமித்தல்.
- நிதி தொடர்பான கணக்கியல் நடவடிக்கைகளில் அனுபவம் பெறுதல்.

தகுதிவாய்ந்த ஒரு நிறுவனம் சமூகத்திட்டங்களிலே பங்கேற்க முன்வருமிடத்து அந்நிறுவனம் தனது இலக்கினை அடைவதற்கான பின்வரும் நடவடிக்கைகளின் பொருட்டு நிதி உதவி வழங்கும்.

1. வறியோர்களின் பொருட்டு திட்டம் ஒன்றையோ அல்லது பலவற்றையோ நடைமுறைப்படுத்தல்.
2. அதன் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளித்தல்.
3. ஏனைய நிறுவனங்களையும் கட்டியெழுப்புதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. திட்டப் பிரேரணைகள்

சனசவிய நம்பிக்கைநிதியமானது சமூகத்திட்டங்களை இரண்டு வகையாக அணுகும். முதலில் ஆரம்பத்திட்டப் பிரேரணை ஒன்று பங்காளர் நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்படும். அது சனசவிய நம்பிக்கைநிதியத்தினால் வகுக்கப்பட்டதாக இருக்கும். அத்துடன் அது திட்டத்தை விபரிப்பதாகவும் அடையவேண்டிய நன்மைகள் யாவை, உழைப்பு, பொருள் ஆகியவற்றின் பெறுதற்சாத்தியம், ஆரம்ப செலவு, திட்டம் ஆகிய தரவுகளை உள்ளடக்கியதாகவும் இருக்கும்.

ஆரம்பத்திட்டப் பிரேரணையானது சமூக / பொருளாதார இயக்கம், திட்டத்தின் தொழில்நுட்ப சாத்தியங்கள் பற்றிய தகவல்களைக் கொண்டிருக்கவேண்டும். திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பங்காளர் நிறுவனத்தின் பயிற்சி நிறுவனத்தேவைகள் பற்றிய தகவல்களையும் கொண்டிருக்கவேண்டும். இறுதித் திட்டப்பிரேரணையைத் தயாரிப்பதற்கும் இதன்பொருட்டு ஆலோசகர் ஒருவரை அமர்த்துவதற்கும் முற்பணத்தை வழங்கும். ஆலோசகர் பொறியியல் வடிவமைப்பினைத் தயாரிப்பார். வேண்டியவிடத்து அவர் தரக்கட்டுப்பாட்டு பரிசீலனைகளையும் நடைமுறைப்படுத்தலின்போது செய்து கொள்வார்.

இறுதித்திட்டப் பிரேரணையானது பொறியியல் வடிவமைப்பு, செலவுத் தொகைப் பெறுமானங்கள் ஆகியவற்றையும் ஏனைய முக்கியமான பத்திரங்களையும் கொண்டதாக இருக்கும். பணம் வழங்குவதற்காக தீர்மானம் எடுக்கப்படுவதன் முன்னர் சனசவிய நம்பிக்கைநிதியத்தின் உத்தியோகத்தரினாலோ அல்லது வெளி மதிப்பீட்டாளர்களினாலோ இத்திட்டப் பிரேரணை கவனமாக மறுபரிசீலனை செய்யப்படும்.

## 5. உடன்படிக்கையும் நிறைவேற்றுகையும்

இறுதித்திட்டப் பிரேரணை அனுமதிக்கப்பட்டதன் பின்னர் பங்காளர் நிறுவனத்திற்கும் சனசவிய நம்பிக்கைநிதியத்திற்குமிடையில் ஓர் உடன்படிக்கை நிறைவேற்றப்படும். இவ் உடன்படிக்கை முற்கூறப்பட்ட பொறியியல் வடிவமைப்பையும் செலவுத்தொகைப் பெறுமானங்களையும் கருத்திற் கொண்டதாக அமையும். கொடுப்பனவுகளின் முன்னர் இவை குறிப்பிட்ட வேலைகளை நிறைவேற்றுவதையும் உள்ளடக்கியதாக இருக்கும்.

பங்காளர் நிறுவனங்களின் அறிக்கைகளின் அடிப்படையிலே சனசவிய நம்பிக்கைநிதியமானது திட்ட நடைமுறைப்படுத்தலையும் மேற்பார்வையையும் செய்துவரும் பங்காளர் நிறுவனங்களுக்கு அடிக்கடி அறிவுறுத்தல்கள் வழங்கும்.

## 6. தொடர்பு கொள்ளுதல்

இத்துறையில் ஈடுபட்டு உழைக்க விரும்பும் குழுக்கள் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் செயலகம், யுனிட்டி பிளாசா, 4வது மாடி, கொழும்பு - 4 என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளலாம். அவர்கள் உங்களைப் பங்காளர் நிறுவனமாக இனங்காண்பதற்கான படிவங்களையும் தகவல்களையும் வழங்குவர். மேலதிக தகவல்களைப் பெறுவதற்கு தொலைபேசி இலக்கம் 508296 உடன் தொடர்பு கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயதொழில் வேலைவாய்ப்புக்கான உதவித்திட்டங்கள்

சுயதொழில் வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்கும், அடிப்படைப் பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கும், மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்குமான பல்வேறு திட்டங்களை அரச, அரசுசார்பற்ற நிறுவனங்கள் அறிமுகப்படுத்தியுள்ளன.

திருகோணமலையிலும் மற்றும் சுமுகநிலைமை நிலவும் ஏனைய மாவட்டங்களிலும் நடைமுறையிலிருக்கும் சுயதொழில் வேலைவாய்ப்புக்கான உதவித் திட்டங்கள் பின்வருமாறு:

## இலங்கைவங்கியின் கடன் வசதிகள்

### 1. சுயதொழில் வேலைவாய்ப்புக் கடன்திட்டம்

### 1:1. நேரடிக் கடன்திட்டம்

இக்கடன் உதவியைப் பெறுபவர்கள் நேரடியாக அருகிலுள்ள இலங்கை வங்கியுடன் தொடர்புகொள்ளலாம். இக்கடனுதவியை தனிப்பட்டவர்களும் குழுக்களும் பெற உரித்துடையவர்கள்.

### 1:2. நிறுவனம்மூலம் கடனுதவி பெறல்

கூட்டுறவுச்சங்க விதிமுறைகளுக்கு அமைய நிறுவப்பட்ட சகல கூட்டுறவு நிறுவனங்கள், அரசுசார்பற்ற நிறுவனங்கள் இவற்றுள் அடங்கும். இந்நிறுவனங்கள் வங்கியிலிருந்து கடனைப் பெற்று சுயதொழிலில் ஈடுபடுபவர்களுக்கு மறுகடன் நிதி உதவியாக வழங்குகின்றது.

### 1:3. கடன் கோருபவருக்கான தகைமைகள்

*1:3:1* வேலையற்றவர்.
*1:3:2* குறை உழைப்பாளர்.
*1:3:3* வங்கி வாடிக்கையாளர், இலங்கைப்பிரஜை, தேசிய அடையாள அட்டை உடையவர்.
*1:3:4* குறித்த தொழில் முயற்சியில் அனுபவம் அல்லது திறமை கொண்டவர்.
*1:3:5* தனிநபர் அல்லது ஐந்து பேரைக் கொண்ட குழுவினர் குழு அடிப்படையில் நேரடியாகவோ அல்லது கடனுதவி வழங்கும் நிறுவனங்கள் மூலமாகவோ கடனுதவியைப் பெறலாம்.

### 1:4. கடனுதவியின் நோக்கம்

*1:4:1* விவசாயம்
*1:4:2* மிருகவளர்ப்பு
*1:4:3* விவசாயம் சார்ந்த உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள், சிறுகைத்தொழில்கள், குடிசைக்கைத்தொழில்கள், சேவை அடிப்படையிலான தொழில்கள், வர்த்தக முயற்சிகள் ஆகிய முயற்சிகளுக்கு இக்கடனுதவி வழங்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1:5. கடன்தொகை

ஒருதனிப்பட்டவர் 5,000/- தொடக்கம் 25,000/- வரையும் கடனாகப் பெற முடியும். 5 பேர்கொண்ட குழுவிற்கு 25,000/- தொடக்கம் 125,000/- வரையும் கடன் வழங்கப்படும்.

இதனை சான்றுகள் மூலம் உறுதிப்படுத்தல்வேண்டும். இவரது மொத்தக் கடன் 25,000/-க்கு உட்பட்டதாக இருக்கவேண்டும். திட்டக்குழுவாயின் 125,000/- மேற்படாது இருக்கவேண்டும்.

### 1:6. வட்டி 18%

### 1:7. மீளளிப்புக் காலப்பகுதி

இக்கடன் பெறுபவருடைய யோக்கியதாம்சங்கள் மற்றும் அவர் கொடுக்கும் பிணை என்பவற்றைப் பொறுத்து காலம் 36-60 மாதம் வரையும் நிர்ணயிக்கப் படும்.

### 1:8. வேறு சில நிபந்தனைகள்

இவர் சமர்ப்பிக்கும் சுயமுயற்சித்திட்ட அறிக்கைமூலம் இத்திட்டத்தின் வருவாயை வங்கிக்கு உறுதிப்படுத்தவேண்டும். மொத்தச்செலவில் 20% செலவை கடனாளி திட்டத்திற்குத் தனது முதலீட்டுப் பங்களிப்பாகச் செலுத்த வேண்டும். கடனாளியின் முதலீட்டுப் பங்கு, திட்டத்திற்குத் திட்டம் மாறுபடலாம்.

### 1:9. கடனுக்கான பிணை பற்றிய விபரங்கள்

#### 1:9:1. 10,000/- கடன்

10,000/- கடன் வரையிலான கடனை ஒரு சாதாரண பிணையாளி மூலம் பெறமுடியும். இவர் இலங்கைவங்கியின் ஒரு வாடிக்கையாளராக இருக்கவேண்டும்.

#### 1:9:2. 10,000/- தொடக்கம் 25,000/- வரையான கடன்

விவசாயம், கால்நடைவளர்ப்பு போன்ற முயற்சிக்கு காப்புறுதி செய்திருக்க வேண்டும். சிறுகைத்தொழில் முயற்சியாளரின் காணி உறுதியை (சிறுகைத் தொழில் நடைபெறும் காணியின் உறுதி) வங்கியில் வைப்புச் செய்யவேண்டும்.

சிறுகைத்தொழில் முயற்சியில் ஈடுபடுத்தப்படும் உபகரணங்கள் வங்கியில் அடகுவைக்கப்பட வேண்டும்.

இருவர் தனிப்பட்ட பிணையாக இருக்கவேண்டும். பிணையாளருடைய வருமானம் பற்றி வங்கியைத் திருப்திப்படுத்தக்கூடியதாக இருக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. சனசவிய சுயதொழில் கடனுதவி

சனசவிய உதவிபெறும் எவரும் இந்தக் கடனுதவி பெறத் தகுதியுடைய வராவர். திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட சகல நோக்கங்களுக்கும் இக் கடனுதவியானது வழங்கப்படும். இவற்றின் சுயதொழிலுக்கு விசேட கவனம் செலுத்தப்படும். கடன்தொகையானது ரூபா 16,000/- வரையும் 16% வட்டியில் வழங்கப்படும். இக்கடன் 24 மாதங்களில் திருப்பிச் செலுத்தப்படவேண்டும். தனிப்பட்ட முறையில் இக்கடனை வங்கியுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

## 03. ரேபியாக் கடனுதவி

இக்கடனுதவியானது புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூகசேவை அமைச்சினால், வன்செயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வங்கிகள் மூலம் கொடுக்கும் உதவித்திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்றது. வீடு, கட்டடங்கள் பாதிக்கப்பட்டோருக்கு 250,000/- வரை கடனாக வழங்கப்படுகின்றது. 6% வட்டி அறவிடப்படுகின்றது. 180 மாதங்களில் திருப்பிச் செலுத்தப்படல் வேண்டும்.

சுயதொழில் முயற்சிகள், வியாபாரங்கள் என்பன பாதிக்கப்பட்டோருக்கு 500,000/- வரை கடனுதவி வழங்கப்படுகின்றது. இதற்கான வட்டி 9% ஆகும். 120 மாதங்களில் இவை திருப்பிச் செலுத்தப்படல் வேண்டும்.

வன்செயலால் சுயமுயற்சிகள் பாதிக்கப்பட்டவர்கள் தமது முயற்சிகளையோ, தொழில்களையோ மறுசீரமைத்துக்கொள்ள அல்லது தொடங்க இக்கடனுதவி வழங்கப்படுகின்றது. இக்கடனைப் பெறுவதற்கான பிணை நிபந்தனைகள் வருமாறு:

3:1. ரூபா 25,000/- வரை கடன்பெறுபவர்களுக்கு இரண்டு வங்கி வாடிக்கையாளர்களின் பிணைமூலம் வழங்கப்படும். பிணையாளர் தமது வருமானத்தை வங்கியாளருக்குச் சான்றுபடுத்த வேண்டும்.

3:2. ரூபா 25,000/- தொடக்கம் ரூபா 75,000/- வரை கடன் பெறுபவர்கள், இரண்டு வாடிக்கையாளர்களைப் பிணையாகக் கொடுக்க வேண்டும். இதே நேரம் பிணையாளர்கள் தமது வருமானத்தைச் சான்றுபடுத்த வேண்டும். இவற்றுடன் உறுதியை வைப்புச் செய்வதுடன் பாதுகாப்பும் செய்து கொள்ளப்பட வேண்டும்.

3:3. ரூபா 75,000/- க்கும் அதற்கு மேலும் கடன் பெறுபவர்கள் உறுதிப் பிணை கொடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் வங்கிக் கடனுதவித் திட்டம்

இவ்வங்கியின் கீழ் பின்வரும் கடனுதவித்திட்டங்கள் நடைமுறையில் இருக்கின்றன.

1. ரேபியா
2. சிறிய நடுத்தர கைத்தொழில் (எஸ். எம்)
3. ஆசிய அபிவிருத்தி வங்கி (ஏ. டி. பி)
4. சுய கைத்தொழில் கடனுதவித் திட்டம்

## சுயதொழில் கடனுதவித் திட்டம்

இக்கடனுதவித் திட்டமானது பின்வரும் நோக்கங்களுக்கு வழங்கப்படுகிறது.

1. தையலும் ஆடைதயாரிப்பும்
2. ரயர் திருத்தும் நிலையம்
3. மேசன் வேலை
4. சிகை அலங்கார நிலையம்
5. பொருத்தும் நிலையம்
6. தச்சுமர வேலைகள்
7. தும்புக்கைத்தொழில்
8. செங்கல் உற்பத்தி
9. மோட்டார்கார் பழுதுபார்த்தல்
10. சப்பாத்து உற்பத்தி
11. ஒட்டுத்தொழில்
12. வர்ணம் பூசுதல்
13. சைக்கிள் திருத்துதல்
14. மின்சார பொருள் உற்பத்தி விற்பனை

## கடன் பெறுபவருடைய தகைமை

1. இலங்கைப் பிரஜை
2. வேலையற்றோர்
3. பாடசாலையிலிருந்து வெளியேறியோர்
4. 18 - 35 வயதுக்கும் இடைப்பட்டோர்
5. ஒரு அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் தொழில் பயின்றவர்
6. குறித்த தொழில் அனுபவம் உடையவர்

*குறிப்பு:- திறமை, அனுபவம் என்பன தகுந்தமுறையில் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும்.

## கடன்தொகை

ரூபா 10,000/- 30,000/- வரை கடன் பெறமுடியும். இதற்கு வட்டி 18%. கடன் மீளளிப்புக் காலப்பகுதி ரூபா 10,000/- மாயின் 60 மாதமும், அதற்கு மேற்படின் 84 மாதமும் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27 வயதுக்குக் குறைந்தவராயின் பெற்றோர் அல்லது குடும்பத்திலுள்ள ஒரு அங்கத்தவர் பிணையாளராக நிற்க வேண்டும். அல்லது பொறுப்பு வாய்ந்த ஒருவர் பிணையாளராக நிற்கவேண்டும். ரூபா 10,000/- க்கு மேல் கடன் எடுப்பவராயின் பெற்றோர் அல்லது பொறுப்புவாய்ந்த பிணையாளர் ஒருவர் வேண்டப்படுவதுடன் நகரும் சொத்துக்களும் பிணையாகக் கொடுக்கப்பட வேண்டும்.

## விசேட சுயதொழில் கடனுதவித்திட்டம்

(Micro Projects) நுண்கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் கைத்தொழில் மற்றும் சேவைசார்ந்த தொழில்களுக்கு இக்கடனுதவி வழங்கப்படுகின்றது.

1. சிறிய குடிசைக்கைத்தொழில்கள்
2. சேவை சார்ந்த தொழில்கள்
3. வர்த்தக முயற்சிகள்
4. கலை, கைவினைத்திறன் சார்ந்த தொழில்கள்
5. பூக்களுடன் சம்பந்தப்பட்ட தொழில்கள்
6. விவசாயம் சார்ந்த கைத்தொழில்கள்
7. கிணறுகள் கட்டுதல்
8. குழாய்க்கிணறு கட்டுதல்
9. காற்றாடியினால் இயங்கும் தொழில்கள்
10. தண்ணீர்த் தொட்டி, வாய்க்கால் அமைத்தல்
11. காணி திருத்துதல்
12. விவசாயத் திட்டங்கள்

## கடன்தொகை

தனிநபர் ரூபா 50,000/-
குழுவினராய் இயங்கினால் ஒவ்வொருவருக்கும் ரூபா 50,000/- திட்டத்தின் நலன்கருதி வழங்கப்படும்.

## விண்ணப்பதாரரின் தகைமை

1. வங்கியின் வாடிக்கையாளராக இருக்கவேண்டும்.
2. 18 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டவராக இருக்கவேண்டும்.
3. சனசவிய உதவித்திட்டம் பெறுபவராயின் வயதெல்லை 55 ஆகும்.
4. எந்த நிதி நிறுவனங்களிலும் கடனாளியாக இல்லாதிருத்தல்.

## பிணை பற்றிய விபரம்

1. ரூபா 10,000/- வரையுள்ள கடனுக்கு, பெற்றோர் அல்லது திட்டத்திலுள்ள எவரும் பிணையாளியாக கையொப்பமிடலாம்.
2. ரூபா 10,000/- தொடக்கம் ரூபா 50,000/- வரையுள்ள கடனுக்கு வங்கியால் உறுதிசெய்யப்பட்ட பிணையாளி கையொப்பமிடவேண்டும்.
3. நகரும், நகராத சொத்துக்களை பிணையாகக் கொடுத்தல்.
4. வட்டி 14%.
5. மீளளிக்கும் காலப்பகுதி 3 வருடம் தொடக்கம் 8 வருடம் வரை.

*ரூபா 10,000/- தொடக்கம் ரூபா 30,000/- வரை கடன் பெறுபவர் 10% முதலீட்டை அத்திட்டத்தில் கொண்டிருக்க வேண்டும். ரூபா 30,000/- க்கு மேல் கடன் பெறுபவர் 20% முதலீட்டை அத்திட்டத்தில் கொண்டிருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹற்றன் நஷனல் வங்கி

## 1. வர்த்தகக் கடன்கள்

இக்கடன் வசதியானது நடைமுறையில் இருக்கும் வர்த்தக நிறுவனங்களை விரிவுபடுத்துவதற்கும்; புதிதாக வர்த்தக முயற்சிகளை ஊக்குவிப்பதற்கும் வழங்கப்படுகின்றது.

### 1:1 கடன் பெறுபவருக்கான தகைமைகள்

1:1:1 வங்கியில் சிறந்த வாடிக்கையாளராக இருக்கவேண்டும்.

1:1:2 தொழில் முயற்சியில் நாட்டம் கொண்டவராக இருக்கவேண்டும்.

1:1:3 குறித்த தொழில் முயற்சியில் பயிற்சி அல்லது அனுபவம் உடையவராக இருக்கவேண்டும்.

### 1:2 கடனுக்கான பிணை பற்றிய விபரம்

அசைவுடைய அல்லது அசைவற்ற சொத்துக்களைப் பிணையாகக் கொடுத்தல்.

### 1:3 கடன் தொகை

ரூபா 25,000 க்கு மேற்பட்ட கடன்
வட்டி 25%
திருப்பிச் செலுத்தும் காலப்பகுதி 36 மாதங்கள்

## 2. அபிவிருத்திக்கான கடன்

இது ரூபா 25,000/-க்கு மேற்பட்ட கடன் தொகையாகும். அபிவிருத்தியின் நோக்கம் வெற்றியடைவதற்கான சாத்தியம், அறிக்கை என்பன தகுந்த ஆதாரத்துடன் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

வட்டி 22% திருப்பிச் செலுத்தும் காலம் 36 மாதங்கள். ஏனைய நிபந்தனைகள் மேற்கூறப்பட்ட வர்த்தக கடன்களுக்கு உரிய நிபந்தனைகள் ஆகும்.

## 3. விவசாயக் கடன்

இது விவசாயத்தில் குறிப்பாக நெல், மற்றும் உபஉணவுப் பொருட்கள் என்பவற்றின் பயிரிடுகைக்காக வழங்கப்படுகின்றது. பயிர்களின் தன்மையைப் பொறுத்து கடன்தொகை நிர்ணயிக்கப்படும்.

3:1 கடன் தொகை ரூபா 41,000/- க்கு மேற்பட்டது.

3:2 கடன் பெறுபவர்களின் தகைமைகள்.

3:2:1 விவசாயத்தில் ஈடுபட்டவராக இருக்கவேண்டும்.

3:2:2 விவசாய அறிவுடையவராக இருக்கவேண்டும்.

3:2:3 வங்கியின் வாடிக்கையாளராக இருக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3:3 வட்டி 16%
3:4 திருப்பிச் செலுத்தும் காலம் - 8 மாதம்
3:5 பிணை பற்றிய விபரம் ரூபா 15,000/- வரை இரு பிணையாளிகளின் சிபார்சுடன் கடன் வழங்கப்படும்

## 4. விவசாய இயந்திரசாதனங்கள் கொள்வனவுக்கான கடன்

இக்கடனுதவியானது விவசாய இயந்திரசாதனங்களைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்படுகிறது. குறித்த சாதனத்தின் பெறுமதியில் 80%, 90% வரை கடன் வழங்கப்படும்.

4:1 கடன் தொகை ரூபா 500,000/-
4:2 வட்டி 18%
4:3 திருப்பிச் செலுத்தும் காலப்பகுதி 36 மாதம்
4:4 கடன் பெறுபவரின் தகைமைகள்:

திருப்திகரமான வாடிக்கையாளர்
விவசாயத்தொழில் முயற்சியில் ஈடுபட்டோர்
குறித்த தொழில் முயற்சியில் அனுபவம்

4:5 பிணை பற்றிய விபரம் - அசையும் / அசையாச் சொத்துக்களைப் பிணையாகக் கொடுத்தல்

## 5. சிறிய நடுத்தர கைத்தொழிற் கடன்

5:1 கடன் தொகை ரூபா 4 மில்லியன்
5:2 வட்டி 18.5% மீளச்செலுத்தும் காலம் 36 மாதம்
5:3 கடன் பெறுபவரின் தகைமைகள்
5:3:1 சிறந்த வாடிக்கையாளராக இருக்கவேண்டும்
5:3:2 கைத்தொழில் பற்றிய அறிவுடையவராக இருக்கவேண்டும்
5:3:3 சாத்திய அறிக்கைமூலம் திட்டம் விளக்கப்பட வேண்டும்
5:4 பிணைபற்றிய விபரம் - அசையும் / அசையாச் சொத்துக்களைப் பிணையாகக் கொடுத்தல்

## 6. கிராம எழுச்சித்திட்டம் (கம்முதாவத்திட்டம்)

இக்கடனுதவித் திட்டமானது சிறிய கைத்தொழில்களையும், சுயதொழில் திட்டங்களையும் ஊக்குவிப்பதாக வழங்கப்படும். இதற்கு உகந்த கிராமங்கள் தெரிவுசெய்யப்படும்.

6:1 கடன் தொகை ரூபா 25,000/- க்கு கீழ்ப்பட்டது
6:2 வட்டி 16% தொடக்கம் 18%
6:3 திருப்பிக் கொடுக்கும் காலப்பகுதி 12 - 36 மாதம்
6:4 கடன் பெறுபவரின் தகைமைகள்
6:4:1 வங்கியின் வாடிக்கையாளராக இருக்கவேண்டும்
6:4:2 குறித்த சிறுகைத்தொழில் பற்றிய முன் அனுபவமுடையவராக இருக்க வேண்டும்

## 7. ரேபியாக்கடன்

இதுவும் இலங்கைவங்கி, மக்கள்வங்கி திட்டத்தை ஒத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயதொழில் திட்டத்தைத் தெரிவு செய்தலும், உருவாக்கலும், திட்ட அறிக்கை தயாரித்தலும்

## 1. சுயதொழில் திட்டம்

### 1:1 பிரிவுகள்

1. மூலப்பொருள் அடிப்படைத் தொழில்கள்
2. விருப்பு, கிராக்கி அடிப்படைக் கைத்தொழில்கள்

### 1:2 வகைகள்

1. மூலவளத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள் - கனிப் பொருள், விவசாயம், காடு, விவசாயக்கழிவு, மரக்கழிவு, உலோகக் கழிவு
2. மற்றைய தொழில்களுடன் தொடர்புபடுத்தும் தொழில்கள்-பாரிய கைத்தொழில் உற்பத்திகளுக்குத் தேவையான சிறிய பொருட்களை உற்பத்தி செய்தல்
3. சேவைத் துறைத் தொழில்கள்
4. தற்போது இறக்குமதி செய்யப்படும் பொருட்களை ஈடுசெய்யும் தொழில்கள்
5. சுய கண்டுபிடிப்பு சம்பந்தமான தொழில்கள்

## 2. சுயதொழிலை தெரிவு செய்தல்

### 2:1 பொதுவாக நோக்க வேண்டியவை

1. திட்டம் செயற்படுத்தப்பட இருக்கும் இடத்தின் அடிப்படைத் தன்மைகளும் இருக்கக்கூடிய மூலப்பொருட்களின் வகைகளும், கவனிக்கப் படாது இருக்கும் மூலவளங்களும்
2. சந்தைப்படுத்தும் இடத்தின் சனத்தொகை அமைப்பு, தற்போது இயங்கும் தொழில்வகைகள், சமூக பொருளாதார அமைப்பு
3. தற்போது விற்பனை செய்யப்படும் பொருட்கள் பெறப்படும் வழிகள்
4. அவ்விடத்தின் பாவனைக்குத் தேவையான பொருட்கள் பற்றிய அளவீடுகள்
5. வருங்காலத்தில் இப்பொருட்களின் சந்தைப்படுத்தலில் எதிர்பார்க்கப்படும் மாற்றங்களும், புதிய சந்தை வாய்ப்புகளும்

### 2:2 குறிப்பாக நோக்க வேண்டியவை

(1) நுகர்வோர் விரும்பும் பொருட்கள்

(2) சிறிய அளவில், இலகு தொழில் நுட்பத்துடன் உற்பத்தி செய்யக் கூடிய பொருட்கள்

(3) இலகுவாகவும், தொடர்ச்சியாகவும் கிடைக்கக்கூடிய மூலப்பொருட் களைக் கொண்டு உற்பத்தி செய்யக்கூடிய பொருட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) தொடர்ச்சியான கிராக்கியுள்ளதாகவும் குறைந்த முதலீடு கொண்டதாகவும் போட்டி விலையில் சந்தைப்படுத்தக் கூடியதாகவும் உள்ளபொருட்கள்
(5) சிறிய அளவு இடவசதியுடன் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்கள்
(6) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புத் தரும் பொருட்கள்
(7) இலாபம் தரக்கூடிய பொருட்கள்

## 3. சுயதொழிலை உருவாக்கல்

### 3:1 முக்கிய விடயங்கள்

1. சந்தைப்படுத்தல்
2. தொழில் நுட்பத்தைத் தெரிவு செய்தல் அல்லது பெறுதல்
3. தகுந்த இடத்தைக் கண்டுபிடித்தல்
4. தேவையான இயந்திர உபகரணங்களைப் பெறுதல்
5. தேவையான மூலப்பொருட்களைப் பெறுதல்
6. தேவையான வேலையாட்களைப் பெறுதல்
7. தேவையான மூலதனத்தைப் பெறுதல்

## 4. சுயதொழில் திட்ட அறிக்கை தயாரித்தல்

### 4:1. திட்டத்தின் பெயரும், திட்டத்தின் நோக்கமும், நியாயப்படுத்தலும்

### 4:2. சந்தைப்படுத்தல்

1. பொதுவான சந்தை வாய்ப்பு
2. கடந்த காலத்தில் உற்பத்தி செய்யப்பட்டவையும் தற்போதைய தேவைகளும்
3. தற்போது சந்தைப்படுத்தப்படும் அளவும், விகிதமும்
4. எதிர்கால சந்தைவாய்ப்பு
5. சந்தைப்படுத்தும் முறை
6. நீங்கள் எதிர்பார்க்கும் விற்பனையின் அளவு, விற்பனைப் பணத்தை பெறும் வகை
7. விளம்பரப்படுத்தும் முறை

### 4:3 தொழில் நுட்பம்

1. செய்முறை தொழில் நுட்பம் இலகுவாக உங்களால் விளங்கக் கூடியதா? அல்லது வேறு யாரையும் உபயோகிக்க வேண்டுமா?
2. உற்பத்தி வழிமுறையின் விபரம்

### 4:4 இடம்

1. தேவையான காணியின் அளவு
2. கட்டட வசதிகள்
3. திட்டத்தை விரிவாக்க உள்ள வசதிகள்
4. சந்தைப்படுத்தலுக்கு உள்ள தூரம்
5. கழிவுப்பொருட்களை வெளியேற்றும்வழி
6. உற்பத்திப் பொருட்களை கொண்டு செல்ல வசதி

### 4:5 அடிப்படைத் தேவைகள்

1. மின்சாரம்
2. நீர்
3. போக்குவரத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4:6. இயந்திர உபகரணங்கள்

1. இயந்திர உபகரணங்களின் விபரம், விலை
2. இயந்திரங்கள் உபகரணங்கள் பெறும் இடம், இலகுவில் கிடைக்குமா?
3. பொருத்தும் முறை

## 4:7. மூலப்பொருட்கள்

1. மூலப்பொருட்கள் விபரம், விலை
2. வருடத்துக்குத் தேவையான அளவு
3. தொடர்ந்து கிடைக்குமா அல்லது சேமித்து வைக்க களஞ்சிய வசதி
4. மூலப்பொருட்களைப் பெற்றுக் கொண்டு செல்ல வழி அல்லது முறை

## 4:8. முகாமைத்துவம்

1. வேலைத்திட்டம் (கால் அட்டவணை, திட்டம் செயற்படுத்தும் விதம்)
2. வேலையாட்களின் எண்ணிக்கை, தெரிவு செய்யும் முறை, பயிற்சி பெற்றவர் உண்டா அல்லது பயிற்சியளிக்க வேண்டுமா?
   (மனித வளத் தேவைகள்)
3. மேற்பார்வை செய்யும் முறை
4. தொடர்பு கொள்ளும் முறை
5. கணிப்புச் செய்யும் முறை

## 4:9. நிதிப் பகுதி

9:1 திட்டச் செலவு
9:1:1 மூலதனச் செலவு
9:1:2 நடைமுறைச் செலவு
9:1:3 பணத்தைப் பெறும் வழி
   1. சொந்த மூலதனம்
   2. கடன் மூலதனம்
   3. அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் மூலம் பெறும் மூலதனம்

9:2 நடைமுறைச் செலவைக் கணித்தல்
9:3 வருவாய் மதிப்பீடு
9:4 இலாப அறிக்கை
9:5 முதலீட்டின் மீளப்பெறும் வீதம்

## 4:10. ஏனையவை

10:1 திட்டம் திறமையாகச் செயல்படத் தேவையான விடா முயற்சி, சிறந்த முகாமைத்துவம், சந்தை வாய்ப்பு
10:2 நடைமுறைச் சிக்கல்கள்
10:3 திட்டத்தினால் ஏற்படும் சமூக பொருளாதார நன்மைகள்
   1. வேலைவாய்ப்பு
   2. வருமானம்
   3. பொருளாதார முன்னேற்றம்
   4. உள்ளூர் மூலவளங்களை உபயோகித்தல்
   5. மக்களின் தேவை நிறைவேற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயதொழில் திட்ட அறிக்கை நிதிக் கூற்று

நிதிப்பகுதி

1. **நிலையான செலவு**

காணி, கட்டடம் (வாடகை)
இயந்திரம்
உபகரணங்கள்

2. **நடைமுறைச் செலவு**

மூலப்பொருட்கள்
சம்பளம்
நீர், எரிபொருள்
பராமரிப்பு
வாடகை
போக்குவரத்து

3. **மொத்தத் திட்டச் செலவு** *1+2*

4. **வருடத்திற்கான விற்பனை**

*உற்பத்திப் பொருட்கள் விற்பனைவிலை*

5. **உற்பத்திச் செலவு** *(வருடம்)*

5:1. **மீண்டும் வரும் செலவு** *(வருடம்)*

*(மூலப்பொருள், சம்பளம், நீர், மின்சாரம், வாடகை)*

*5:2. தேய்மானம் 10%*

*5:3. கடன் வட்டி 15%*

*5:4. சொந்த மூலதனவட்டி 18%*

*5:5. வருடாந்த உற்பத்திச் செலவு: 5:1+5:2+5:3+5:4*

*5:5:1. நிகர இலாபம் 4-5*

5:5:2. மீளளிக்கப்படும் வீதம் — $\dfrac{\text{நிகர இலாபம் - தேய்மானச் செலவு}}{\text{திட்டச்செலவு}} \times 100\%$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதிரி செயற்திட்ட அறிக்கை

## திட்டம் — பற்பொடி தயாரிப்பு

### 1. நிலையான மூலதனம்

| | | ரூ. ச. |
|---|---|---|
| 1:1. | கட்டடம் | 30,000.00 |
| 1:2. | இயந்திரம் | 55,000.00 |
| 1:3. | இரசாயனப்பொருட்கள் | 3,000.00 |
| 1:4. | காரியாலய தளபாடங்கள் | 2,000.00 |
| | மொத்தம் | 90,000.00 |

### 2. நடைமுறைச்செலவு

மாதாந்த மீளவரும் செலவு

**2:1. ஊழியர்களின் சம்பளம்**

| பதவிநிலை | எண்ணிக்கை | மாதச் சம்பளம் | மொத்தம் |
|---|---|---|---|
| முகாமையாளர் | 01 | 1200.00 | 1200.00 |
| கணக்கு இலிகிதர் | 01 | 900.00 | 900.00 |
| பயிற்சி பெற்றஊழியர் | 01 | 800.00 | 800.00 |
| பயிற்சி பெறாதஊழியர் | 02 | 500.00 | 1000.00 |

ரூ. 3,900.00

**2:2. அடிப்படைத் தேவைகள்**

| | | |
|---|---|---|
| மின்சாரம் | ரூ. 300.00 | |
| நீர் | ரூ. 25.00 | |
| | | ரூ. 325.00 |

**2:3. மூலப்பொருட்கள்**

மரக்கரி, கற்பூரம், அமிலம், மென்தோல்
கிளிசரின் (280 திரவம்) 9,000.00 9,000.00

**2:4. வேறு செலவுகள்**

| | | |
|---|---|---|
| தபால் காரியாலய உபகரணங்கள், திருத்தச்செலவு, உபகரண மாற்றுச் செலவு | ரூ. 100.00 | |
| போக்குவரத்து, விளம்பரச்செலவு | 550.00 | |
| எதிர்பாராத செலவுகள் | 1,150.00 | 1.800,00 |
| | | 15,025.00 |

**2:5. மீளவரும் மாதாந்தச்செலவு**

நடைமுறைச் செலவு - 3 மாதத்துக்கான மீளவரும் செலவு

- 15,025.00 × 3 = 45,075.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. மொத்த மூலதனச் செலவு

| | | | |
|---|---|---|---|
| 3:1. | நிலையான செலவு | ரூ. 90,000.00 | |
| 3:2. | நடைமுறைச் செலவு | ரூ. 45,075.00 | |
| | மொத்த திட்டச்செலவு | | 135,075.00 |

### 4. மூலதனம் பெறும் வழி

| | | | |
|---|---|---|---|
| 4:1. | சொந்த மூலதனம் (37%) | ரூ. 50,000.00 | |
| 4:2. | வங்கிக்கடன் (63%) | ரூ. 85,075.00 | 135,075.00 |

### 5. வருடாந்த வருமானம்

| | | | |
|---|---|---|---|
| 5:1. | வருடாந்த விற்பனை வருவாய் 1,000 கி.கி × 12 × ரூ. 20 | 240,000.00 | 240,000.00 |

### 6. வருடாந்த உற்பத்திச் செலவு

| | | | |
|---|---|---|---|
| 6:1. | வருடாந்த மீளவரும் செலவு 15.025 × 12 | 180,300.00 | |
| 6:2. | இயந்திர உபகரணங்களுக்கான தேய்மானம் (10%) | 6,000.00 | |
| 6:3. | மூலதனவட்டி | | |
| | 1. வங்கி வட்டி 18% | 15,125.00 | |
| | 2. சொந்த மூலதனவட்டி 22% | 11,000.00 | |
| 6:4. | மொத்த வருடாந்த உற்பத்திச் செலவு (6.1+6.2+6.3) | | 212,425.00 |

### 7. வருடாந்த இலாபம் (வரிக்குமுன்)

(5:1—6:4) 27,575.00

### 8. மீளளிக்கப்படும் வீதம்

$$\frac{27,575}{135,075} \times 100\%$$

$$= 24\%$$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெழுகுவர்த்தி தயாரித்தல்

| | |
|---|---|
| அறிமுகம் | மெழுகுவர்த்தி தயாரிப்பதற்கு பெரிய அளவிலான இயந்திர சாதனங்கள் தேவைப்படுவதில்லை. சிறு மூலதனம் போதுமானது. இத்தொழிலை வீடுகளில் ஓர் உபதொழிலாகவும் மேற்கொள்ள முடியும். உற்பத்தி செய்யப்பட்ட மெழுகுவர்த்தி இலகுவில் பழுதடையும் தன்மையற்றது. எனவே நீண்ட காலத்திற்கு இதனைப் பேணிவைக்க முடியும். பிரதான மூலப் பொருட்கள் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலிருந்து பெறப் படவேண்டும். உற்பத்திக்கான ஏனைய மூலப்பொருட்களை உள்ளூரிலேயே பெற்றுக்கொள்ளலாம். |
| சந்தைவாய்ப்பு | வழிபாட்டுத் தலங்களிலும், மின்வசதியுடைய நகர, கிராமப் புறங்களிலும் மெழுகுவர்த்திகள் பயன்படுத்தப்படுகின்றன. எனவே தொடர்ச்சியான சந்தைவாய்ப்பு உண்டு. |
| தொழில்நுட்பம் | நுணுக்கமான தொழில்நுட்ப அறிவு இத்தொழிலை ஆரம்பிப் பதற்கு வேண்டியதில்லை. நாளடைவில் அனுபவரீதியாக தொழில்நுட்பத்திறனை வளர்த்துக்கொள்ளலாம். பிராந்திய கைத்தொழில் அபிவிருத்திச் சபையிடமிருந்தும் சிறுகைத் தொழில் திணைக்கள அலுவலகங்கள் மூலமாகவும் வேண்டிய தொழில்நுட்ப பயிற்சியைப் பெற்றுக்கொள்ளமுடியும். |
| மூலப்பொருட்கள் | பரவின் மெழுகு, ஸ்டியரிக்அமிலம், பருத்திநூல் இல. 10, எரிபொருள், பொதி செய்யும் பொருட்கள். |
| உபகரணங்கள் | மெழுகுவர்த்திஅச்சு, தண்ணீர் சூடாக்கும் பாத்திரம், அலுமினிய கொள்கலன் (மெழுகை உருக்குவதற்கு) தராசு, அடுப்பு (காஸ், மண்ணெய், விறகு) |
| முதலீடு | ரூபா 6200/- |
| மாதவருமானம் | ரூபா 2000/- |
| குறிப்பு | பிரதான மூலப்பொருட்களான பரவின்மெழுகு ஸ்டியரிக் அமிலம் ஆகியன இடையறாது தொடர்ந்து கிடைப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். காணி, கட்டடம் ஆகியவற்றுக்கான பெறுமதியோ வாடகையோ முதலீட்டில் சேர்க்கப்படவில்லை. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெழுகுவர்த்தி செய்முறை

மெழுகுவர்த்தி உற்பத்தி செய்தல் மிக இலகுவானதாகும். மூலப்பொருட்களான பரவின் மெழுகு (97 பங்கு) ஸ்டியரிக் அமிலம் (03 பங்கு) நிறுத்தெடுக்கப்பட வேண்டும். இரண்டினையும் ஒரு பாத்திரத்தில் இடுதல்வேண்டும். இப்பாத்திரத்தை நீர்நிறைந்த பாத்திரம் ஒன்றினுள்வைத்து அந் நீர் நிறைந்த பாத்திரத்தைச் சூடாக்க வேண்டும். மெழுகு உருகித் திரவ நிலையை அடையும்.

மெழுகுவர்த்தி தயாரிப்பதற்கான அச்சின் நடுப்பாகத்தில் திரிக்கான நூலைப் பொருத்த வேண்டும். பின் திரவநிலையிலான மெழுகை விரைவாக அச்சில் ஊற்ற வேண்டும். இந்த அச்சினைப் பின்னர் மெழுகுவர்த்தி இறுகி வரும் வரை குளிர்ந்த நீர் உடைய பாத்திரத்தில் இடுதல்வேண்டும். அச்சில் இணைக்கப்பட்டுள்ள நூலைத் துண்டித்து மெழுகுவர்த்திகளை வெளியே எடுத்துப் பொதிசெய்தல் வேண்டும். 40 மெழுகுவர்த்திகளை ஒரு பொதியில் வைக்கலாம். 10 நிமிடத்தில் 40 மெழுகுவர்த்திகளைத் தயாரிக்கலாம். மெழுகுவர்த்தியின் தரம் அச்சில் வார்த்தெடுக்கும் திறனில் தங்கியிருப்பதால் தொழில் நுட்பத்தில் நன்கு கவனஞ் செலுத்த வேண்டும்.

## மெழுகுவர்த்தி - செய்முறை அட்டவணை

பரவின் மெழுகு நிறுத்தெடுத்தல் | ஸ்டியரிக் அமிலம் நிறுத்தெடுத்தல்

↓

பாத்திரத்திலிடல்

↓

பாத்திரத்தை நீர் நிறைந்த பாத்திரத்தில் இட்டு சூடேற்றல்

↓

மெழுகு திரவ நிலையடைதல்

அச்சில்நூலை கிடையாக இணைத்தல் ——> ↓ <—— திரவமெழுகை அச்சில்வார்த்தல்

குளிர்நீரில் அச்சை இடுதல்

↓

மெழுகு இறுகியபின் நூலைத் துண்டித்தல்

↓

அச்சிலிருந்து மெழுகுவர்த்தியை அகற்றல்

↓

பொதி செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை வெண்கட்டி தயாரித்தல்

| | |
|---|---|
| அறிமுகம் | எழுதுவதற்குப் பயன்படும் வெண்கட்டிகளை வீடுகளிலும், சிறுதொழிற் கூடங்களிலும் தயாரிக்கலாம். இப் பொருளுக்கான கேள்வி (கிராக்கி) எந்நாளும் குறைவடைவதில்லை. எமது நாட்டிற்குத் தேவைப்படும் தொகையில் சிறுஅளவு மட்டுமே இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றது. மிகுதி வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது. எனவே ஆர்வமுடன் உழைப்போர் வெண்கட்டி தயாரித்தல் மூலம் பெரும் முன்னேற்றத்தை அடையலாம். |
| சந்தைவாய்ப்பு | நாட்டிலுள்ள பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், தொழில் நுட்பக் கல்லூரிகள், தனியார் கல்வி நிலையங்கள், அரச திணைக்களங்கள் வெண்கட்டிகளை பெருமளவில் நாளாந்தம் பயன்படுத்துகின்றன. எனவே நிலையானதும் சீரானதுமான சந்தைவாய்ப்பு உண்டு. சனத்தொகை அதிகரிப்பிற்கேற்ப வெண்கட்டிக்கான கிராக்கியும் அதிகரிக்கும். |
| தொழில்நுட்பம் | தொழில்நுட்ப தேர்ச்சிக்கேற்ப பொருளின் தரம் வேறுபடும். தரமான பொருட்களுக்கே நல்ல வரவேற்பு கிடைக்கின்றது. எனவே வெண்கட்டி தயாரிப்பதற்கு ஓரளவு பயிற்சியும், தொழில்நுட்பத் தேர்ச்சியும் அவசியமாகின்றது. தொழில்நுட்பப் பயிற்சியினை இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனம் கொழும்பு, பிராந்திய கைத்தொழில் அபிவிருத்திச் சபை, மாவட்ட சிறுகைத்தொழில் திணைக்கள அலுவலகங்கள் மூலம் பெற்றுக்கொள்ளலாம். |
| மூலப்பொருட்கள் | பிளாஸ்ரர் ஒப் பரிஸ் (கழிவு செய்யப்பட்ட மோல்). மட்பாண்ட கூட்டுத்தாபனம் பெருமளவு மோல் (ஜிப்சம்) களை கழிவு செய்கின்றது. இதனைக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். கயோலின் (சீனாக்களி) |
| உபகரணங்கள் | மோட்டார் (கிரனைட்) சம்மட்டி, வடிதட்டு, தராசு, அடுப்பு, அளக்கும் சிலிண்டர், வாளி (10லீட்டர் கொள்ளளவு) இறப்பர் அச்சுக்கள், மேசை, மெஷ் (வயர்) |
| முதலீடு | ரூபா 25,000/- (அண்ணளவாக) |
| மாதவருமானம் | ரூபா 1,500/- (அண்ணளவாக) உற்பத்தியாளரின் தேர்ச்சி, திறமை, உற்பத்தி அதிகரிப்பு ஆகியவற்றைப் பொறுத்து மாதவருமானத்தை அதிகரிக்கலாம். |
| குறிப்பு | காணி, கட்டடம் ஆகியவற்றுக்கான பெறுமதியோ வாடகையோ முதலீட்டுத் தொகையில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. ஜிப்சம் என்னும் கனிப்பொருள் 120°-130° சென்ரிக்கிறேட் வெப்பமூட்டப்படும்போது பிளாஸ்ரர் ஒப் பரிசாக மாற்றமுறுகின்றது. இது உள்ளூரில் பரிசுச் சாந்து அல்லது ஈரமற்ற சீமேந்து எனப்படுகின்றது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை வெண்கட்டி செய்முறை

கழிவு செய்யப்பட்ட பிளாஸ்ரர் ஒப்பரிஸ் மோல்ட்களை வெயிலில் உலர வைத்து இடித்து மாவாக்க வேண்டும். பின் அதனை 60 மெஸ் அரிதட்டினால் அரித்தெடுக்க வேண்டும். பெறப்பட்டமாவை பாத்திரத்திலிட்டு அடுப்பிலேற்றி 180° சென்றிக்கிறேட் வெப்பமேற்ற வேண்டும். வெப்பம் ஏறும்போது தொடர்ந்து துளாவுதல் வேண்டும். பின் அடுப்பிலிருந்து இதனை இறக்கி ஆறவைத்து 60 மெஸ் அரிதட்டினால் அரித்தெடுக்கவேண்டும்.

அரித்தெடுக்கப்பட்ட மாவுடன் உள்ளூர் பிளாஸ்ரர் ஒப்பரிஸ் 20% அல்லது இறக்குமதி செய்யப்பட்ட பி. ஒ. பரிஸ் 5%சேர்க்கப்படவேண்டும். இவற்றுடன் கெயோலின் (சீனாக்களி) 4:1 என்ற விகிதத்தில் கலக்கப்பட வேண்டும். இச் சேர்வையை பாத்திரம் ஒன்றினுள் இட்டு சிறிது சிறிதாகத் தண்ணீர் விட்டு கலக்குதல் வேண்டும். (2½ கிலோகிராம் மாவுக்கு 3 பைந் தண்ணீர் போது மானது) இவ்வாறு கலக்கும் போது மூலப்பொருட்களிலிருந்து வாயு குமிழிகளாக வெளியேறும். இக் குமிழிகள் நன்கு வெளியேறும் வரை கலக்கப்பட்டு பீட்டர் என்னும் கருவி மூலம் கலவை நன்கு பிசையப்படுதல் வேண்டும்.

இவ்வாறு செய்கையில் கலவை நன்கு பதப்படும். அப்போது மண்ணெண்ணெயினால் சுத்தப்படுத்தப்பட்ட வெண்கட்டி அச்சுக்களில் கலவையை வார்த்தல் வேண்டும். அச்சில் கலவை இறுகிவரும் போது வெப்பநிலை அதிகரிக்கும். இந்நிலையில் அச்சுக்களைக் கழற்றி வெண்கட்டிகளை வெளியே எடுத்து கம்பி வலைகளில் அல்லது மரத்தட்டுக்களில் இரண்டு நாட்களுக்கு உலரவிடுதல் வேண்டும்.

உலர வைக்கப்பட்ட வெண்கட்டிகள், 100 வெண்கட்டிகளுக்கு ஒன்றாக பெட்டிகளில் அடுக்கப்படுதல் வேண்டும். இவை பெட்டிகளில் செங்குத்தாக அடுக்கப்பட வேண்டும்.

## செய்முறை அட்டவணை

சுத்தப்படுத்தப்பட்ட பிளாஸ்ரர் ஒப்பரிஸ் + உள்ளூர் பிளாஸ்ரர் ஒப்பரிஸ் 20% அல்லது இறக்குமதி செய்யப்பட்ட பிளாஸ்ரர் ஒப்பரிஸ் 5% + கெயோலின் 4:1

↓

சிறிது சிறிதாக தண்ணீர் விட்டுக் கலக்குதல்

↓

வாயு குமிழிகளாக வெளியேறுதல்

↓

பீட்டர் கருவியினால் கலவையைப் பிசைத்தல்

↓

கலவையை வெண்கட்டி அச்சில் வார்த்தல்

↓

இறுகும்போது அச்சிலிருந்து வெண்கட்டிகளைக் கழற்றுதல்

↓

கம்பி வலை அல்லது மரத்தட்டுக்களில் இரண்டு நாட்களுக்கு உலர விடுதல்

↓

பெட்டிகளில் 100 வெண்கட்டிகள் வீதம் அடுக்குதல்

↓

விற்பனைக்கு விடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊதுபத்தி தயாரித்தல்

| | |
|---|---|
| அறிமுகம் | ஊதுபத்தி தயாரித்தலை குடிசைக் கைத்தொழிலாக மேற்கொள்ளலாம். பெரிய அளவிலான இயந்திரசாதனங்களேதும் அவசியமில்லை. மூலதனமும் அதிகம் தேவைப்படுவதில்லை. மூலப்பொருட்களை உள்ளூரிலேயே இலகுவாகப் பெற்றுக்கொள்ளலாம். ஊதுபத்தி இலகுவில் பழுதடையாதாகையால் நீண்டகாலத்துக்குப் பேணிவைக்கலாம். |
| சந்தைவாய்ப்பு | வழிபாட்டுத்தலங்களிலும், சமயச் சடங்குகளிலும், வீடுகளிலும் ஊதுபத்தி பெரிதும் பயன்படுத்தப்படுகின்றது. எனவே உள்ளூரிலேயே இதற்கான சந்தைவாய்ப்பு பெரிதும் கிடைத்துவிடுகின்றது. |
| தொழில்நுட்பம் | நீண்டகாலப் பயிற்சியோ தொழில்நுட்பத்துறைத் தேர்ச்சியோ இத்தொழிலுக்கு அதிகம் தேவைப்படுவதில்லை. செயல்முறை பற்றிய அறிவுடன் தொழிலை ஆரம்பித்து, தொழில்நுட்ப ஆற்றலை வளர்த்துக்கொள்ளலாம். தொழில்நுட்ப அறிவின் வளர்ச்சிக்கேற்ப பொருளின் தரத்தை வளர்த்துக் கொள்ளலாம். |
| மூலப்பொருட்கள் | நிலக்கரி அல்லது கரித்தூள், மரத்தூள், றக்காத்திப்பட்டை, நறுமணப்பொருள், வெள்ளை எண்ணெய், மஸ்க், மூங்கில் தடி, பொதிசெய்யும் தாள். |
| உபகரணங்கள் | நேர்த்தியான பலகை ( 2' × 2' × 2' )<br>பிளாஸ்ரிக் வாளிகள் 3<br>கலவை தயாரிப்பதற்கான பேசின்<br>கத்தரிக்கோல். |
| முதலீடு | ரூபா 2,500/- |
| மாதவருமானம் | ரூபா 1,500/-. வருமானத்தை உயர்த்துவது உற்பத்தியாளரின் முயற்சியில் தங்கியுள்ளது. ஊக்கம், திறமை, தொழில்நுட்பத் தேர்ச்சி, சந்தைப்படுத்தல் ஆகியவற்றில் முழுமூச்சுடன் ஈடுபடின் வருமானத்தில் கணிசமான அளவு முன்னேற்றத்தைப் பெறலாம். |
| குறிப்பு | முதலீட்டில் காணி, கட்டடம் ஆகியவற்றுக்கான பெறுமதிகள் சேர்க்கப்படவில்லை. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊதுபத்தி செய்முறை

மரத்தூளை சூரிய வெப்பத்தில் உலரவைக்க வேண்டும். மரக்கரி அல்லது நிலக்கரியையும் றக்காத்தி பட்டையையும் வேறுவேறாக மிகநுண்ணியதாக அரைத்தெடுக்க வேண்டும். பின்னர் இவற்றினை 80 மெஸ் அரிதட்டினால் அரித்தெடுக்க வேண்டும். பிரமாணத்துக்கேற்ப தூள்கள் யாவற்றையும் ஒன்றாக இட்டுக் கலக்கவேண்டும். பின்னர் நீரை அளவாக ஊற்றி ஏறத்தாள $1\frac{1}{2}$ மணித்தியாலத்திற்கு கலவையைக் கலக்கி சீரான சேர்வையைப் பெறுதல் வேண்டும்.

இச் சேர்வையிலிருந்து ஒரு சிறு பகுதியை எடுத்து சிறு உருண்டையாக செய்தல் வேண்டும். இதனை குச்சியின் நடுவில் இருக்கத்தக்கதாக ஒரு சீரான கிடையான தட்டில் வைத்து முன்பின்னாக குச்சிகளை உருட்டி அதன்நீளத்தின் முக்கால்வாசிப் பகுதிக்கு ஒரு சீரான படை உண்டாகச் செய்ய வேண்டும். பின் சூரிய ஒளியில் காயவிடுதல் வேண்டும். பின்னர் வெள்ளை எண்ணெயையும் மஸ்க்கையும் வாசனைத்திரவியத்தையும் நன்கு கலக்க வேண்டும். இக்கலவையை படை உண்டாக்கப்பட்ட குச்சியில் தெளித்தல் வேண்டும். இருபத்தைந்து குச்சிகள் கொண்ட கட்டுக்களாக்கி மெல்லிய கடதாசியால் சுற்றிப் பொதி செய்தல்வேண்டும்.

## செய்முறை அட்டவணை

சூரிய வெளிச்சத்தில் காய்ந்த மரத்தூள் → | எரித்த மரக்கரி/ நிலக்கரி ↓ | ← றக்காத்திப்பட்டை

இவற்றை வேறுவேறாக அரைத்தெடுத்தல்
↓
பிரமாணத்திற்கேற்ப நிறுத்தெடுத்தல்
↓
நீர்கலந்த சேர்வையாக்கல்
↓
சீரான பசையைப் பெறல்
↓
குச்சிகளில் தடவுதல்
↓
சூரியவெளிச்சத்தில் காயவிடுதல்
↓
வாசனையிடுதல்
↓
பொதிசெய்தல்

**பிரமாணங்கள்**

*100 குச்சிகளைப் பெறுவதற்கான பிரமாணம்*
நிலக்கரி—01 பகுதி (அங்கர் கரண்டி அளவு)
மரத்தூள்—01 பகுதி (அங்கர் கரண்டி அளவு)
றக்காத்திப்பட்டை—02 பகுதி (அங்கர் கரண்டி அளவு)
தண்ணீர்—03 பகுதி (அங்கர் கரண்டி அளவு)

1,500-2,000 குச்சிகளுக்கு விசிறுவதற்கான வாசனைக்கலவை
வாசனைத் திரவியம்—1 அவுன்ஸ்
வெள்ளை எண்ணெய்—1 அவுன்ஸ்
மஸ்க்—$\frac{1}{4}$ தேக்கரண்டி மூங்கில் குச்சிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடதாசிப் பொம்மை தயாரித்தல்

| | |
|---|---|
| அறிமுகம் | மனிதனின் தேவைக்கு உதவாது எனக் கழித்துவிடப்படும் பொருட்களையும் உற்பத்திக்குப் பயன்படுத்தலாம் என்பதற்கு கடதாசிப் பொம்மை தயாரித்தல் சிறந்த உதாரணமாகும். இத் தொழிலுக்கு கழிவுக் கடதாசிகளே பயன்படுத்தப்படுகின்றன. சிறு முதலீட்டுடன் குறைந்தது பத்துத் தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்பை வழங்க முடியும். குறிப்பாகப் பெண்களுக்கு இத்தொழில் உகந்ததாகும். |
| சந்தைவாய்ப்பு | வடக்கு - கிழக்கு மாகாணத்திலும், பிற மாவட்டங்களிலும் இப்பொருட்களுக்கு நிறையவே சந்தை வாய்ப்புண்டு. குழந்தைகளுக்கான பொம்மைகள், சில்லறைக் காசு சேமிக்கும் கலயங்கள், வீட்டு அலங்காரப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதனால் இவற்றை இலகுவில் சந்தைப்படுத்த முடிகின்றது. |
| தொழில்நுட்பம் | தொழில் நுட்பம் இலகுவானது, பயிற்சியே முக்கியமானது. பொறுமையும் விடாமுயற்சியும், ஊக்கமும் அவசியம். திருகோணமலையில் உள்துறைமுக வீதியில் அமைந்துள்ள ''மகாத்மா காந்தி நிலையம்'' இந்தத் தொழில் நிலையத்தை நடத்தி வருகின்றது. தொழில்நுட்ப ஆலோசனைகளுக்கு இந் நிலையத்தை நாடவும். |
| மூலப்பொருள் | கடதாசி, கோதுமைமா, நூல், வையிங் பவுடர், சான்பேப்பர், சிறுகம்பி, மண்ணெய், வர்ணமை |
| உபகரணங்கள் | அச்சு, ஊசி, கத்தரிக்கோல், குறடு, ஸ்பிறேயர் இயந்திரம் |
| முதலீடு | ரூபா 20,000/- |
| மாதவருமானம் | ரூபா 5,000/- |
| குறிப்பு | காணி, கட்டடம் ஆகியவற்றின் பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.<br>ஓரிருவர் இத்தொழிலைத் தனித்துச் செய்ய முடியாதாகையால் பலர் இத்தொழிலில் சேர்ந்து உழைப்பது அதிக இலாபத்தைத் தரக் கூடியதாக இருக்கும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடதாசிப் பொம்மை செய்முறை

கடதாசிப் பொம்மைகள் செய்வதற்காக ஒவ்வொருவகையான பொம் மைக்கும் தனித்தனியான அச்சுக்கள் உள்ளன. மிருகங்கள், பறவைகள், பழங் கள் போன்ற பொம்மைகளே பெரிதும் விரும்பப்படுகின்றன. பொம்மை ஒன்றைச்செய்வதற்கு இரண்டு பாதியான அச்சுக்கள் உண்டு.

கடதாசியை நீரில் ஊறவைத்து எடுக்கவேண்டும். அதில் கோதுமைப் பசையைப் பூசி சீமெந்திலான அச்சில் சிறுசிறு துண்டுகளாக ஒட்டவேண்டும். பின்னர் சாதாரண கடதாசியில் பசையையும் தண்ணீரையும் பூசவேண்டும். இதன்மேல் இன்னொரு கடதாசியை ஒட்டி நன்றாகக் கசக்கவேண்டும். கசக்கி எடுக்கப்பட்ட கலவையை கடதாசி ஒட்டிய அச்சில் ஒட்டவேண்டும். இவ்வாறு ஐந்து படைகள் ஒட்டப்பட வேண்டும். ஒட்டப்பட்ட தாள்கள் தடித்துவரும். அப்போது இதனை அச்சிலிருந்து முழுவதாகக் கழற்றியெடுத்து காய விட வேண்டும். காய்ந்தபின் ஓரங்களைக் கத்தரிக்கோலால் வெட்டிவிட வேண் டும். இவ்வாறே ஓர் உருவத்தின் இரண்டு பாதிகளையும் செப்பனிடவேண்டும்.

பின்னர் இரண்டு பாதிகளையும் பொருத்தித் தைத்தல் வேண்டும். தைத்த பொருத்துக்கு தண்ணீரில் ஊறிய கடதாசியைப் பசைபூசி ஒட்டிக் காயவிடவேண்டும். காய்ந்தபின் பொருத்து உயரத்தினைக் கத்தியால் சீவ வேண்டும். சீவிய இடத்தினை மீண்டும் தண்ணீர்ப் பசை பூசிய கடதாசியால் ஒட்டவேண்டும்.

இவ்வாறு ஒட்டிக் காயவிட்டபின்னர் வையிங் பவுடரைப் பசையில் கலந்து உருவத்திற்குப் பூசி காயவிடவேண்டும். காய்ந்ததும் சான்பேப்பரினால் நன்கு தேய்த்து மண்ணெய்கலந்த மைபூசவேண்டும். 5 மணித்தியாலங்களுக் குப்பின் தேய்த்த சான்பேப்பரினால் திரும்பவும் தேய்த்து உருவத்திற்கு ஸ்பிறே இயந்திரமூலம் வேண்டிய வர்ணம் தீட்டவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடித உறை தயாரித்தல்

| | |
|---|---|
| அறிமுகம் | இத்தொழிலை வீடுகளில் ஓர் உப தொழிலாக மேற்கொள்ள முடியும். ஓய்வு நேரத்தில் குடும்ப உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து இத் தொழிலில் ஈடுபடலாம். மூலப்பொருட்களை உள்ளூரிலேயே பெறமுடியும் ஆகையால் இடையூறின்றி இத் தொழிலை மேற்கொள்ளலாம். காணி கட்டடங்களுக்கான தேவையோ, பெருமளவு மூலதனமோ வேண்டியதில்லை. கடித உறை பழுதடையாதாகையால் நீண்ட காலத்துக்கு பேணிவைத்து சந்தைப்படுத்தலாம். |
| சந்தைவாய்ப்பு | அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியனவும் தனியார்களும் கடித உறைகளைப் பயன்படுத்து கின்றனர். வெளிநாடுகளுக்கான கடித உறைகளைத் தயாரிப்பதன் மூலமும் உள்நாட்டுக்கான கடித உறைகளைத் தயாரிப்பதன் மூலமும் தொடர்ச்சியான சந்தை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளலாம். |
| தொழில்நுட்பம் | இத் தொழிலுக்கான தொழில்நுட்பம் மிக இலகுவானது. பயிற்சியும் அனுபவமும் முக்கியமானது. அனுபவம் கூடக்கூட உற்பத்தி அளவும் கூடிச் செல்லும். பிராந்திய அபிவிருத்திச்சபை, சிறு கைத்தொழில் திணைக்கள அலுவலகம், திருகோணமலை பதிப்பகத் திணைக்களம் ஆகியவற்றிலிருந்து வேண்டிய பயிற்சிகளைப் பெறலாம். |
| மூலப்பொருட்கள் | மணிலாத்தாள், வச்சிரம். |
| உபகரணங்கள் | திருகு அமிழ்த்தியும் வெட்டியும், கத்தரிக்கோல். |
| முதலீடு | உபகரணங்கள் — ரூபா 10,000/-<br>மூலப்பொருட்கள் — ரூபா 7,000/- |
| மாதவருமானம் | ரூபா 2,000/- |
| குறிப்பு | உற்பத்தியில் துரிதகதியில் ஈடுபடுவதன் மூலம் உற்பத்தியைக் கூட்டி வருமானத்தையும் அதிகரிக்கலாம். காணி, கட்டடங்களுக்கான பெறுமதியோ வாடகையோ முதலீட்டில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலுவலக பயன்பாட்டுக்கான மரப்பொருட்கள் தயாரித்தல்

| | |
|---|---|
| அறிமுகம் | மரத்தளபாட உற்பத்தித் தொழில் சார்ந்த ஓர் உபதொழிலாக இத் தொழிலை மேற்கொள்ளலாம். பெரிய வேலைத் தலங்களில் கழிக்கப்படும் பலகைத்துண்டங்கள், விறகுக்காலையில் காணப்படும் சிறு மரக்குற்றிகள் போன்றவற்றை இத் தொழிலுக்குப் பயன்படுத்தலாம். அலுவலகத் தேவைக்கான கடிதத்தட்டுக்கள், ஊசி, கிளிப்புத் தட்டுக்கள், சாம்பல் சேரும் தட்டுக்கள், கடித விறாக்கிகள், புத்தக விறாக்கிகள்,இறப்பர் முத்திரைகளுக்கான விறாக்கிகள், கடதாசி பாரமேற்றிகள், அடிமட்டங்கள் போன்ற சிறு பொருட்களைத் தயாரிக்கலாம். |
| சந்தைவாய்ப்பு | கழிவுத்துண்டங்களிலிருந்து இப்பொருட்கள் செய்யப்படுவதனால் உற்பத்திச் செலவு குறைவாகும். எனவே பாடசாலைகள், அலுவலகங்கள் போன்றவை இப்பொருட்களை விரும்பி வாங்கும். இதனால் இவ்வுற்பத்திப் பொருட்களுக்கு நிலையான சந்தைவாய்ப்புண்டு. கழிவுத்துண்டங்களைப் பயன்படுத்தி குழந்தைகளுக்கான சிறு விளையாட்டுப் பொருட்களைச் செய்வதன் மூலம் சந்தை வாய்ப்பை மேலும் விரிவுபடுத்தலாம். |
| தொழில் நுட்பம் | பெற்றுக்கொள்ளப்பட்ட சொற்ப பயிற்சியுடன் இத் தொழிலை ஆரம்பிக்கலாம். அனுபவம் முதிர முதிர தொழில் நுட்பம் வளர்ச்சியடைந்து தரமான பொருட்கள் உற்பத்தி செய்யப்படும். பிராந்திய கைத்தொழில் அபிவிருத்திச் சபை, சிறுகைத்தொழில் திணைக்கள அலுவலகம் போன்ற இடங்களிலோ, தனியார் தளபாட உற்பத்தி நிலையங்களிலோ இதற்கான பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ளலாம். |
| மூலப்பொருட்கள் | தளபாட உற்பத்தி நிலையங்களிலிருந்து கழிவு செய்யப்படும் மரத்துண்டங்கள், விறகுக்காலைகளிலிருந்து பெறப்படும் மரக்குற்றிகள். |
| உபகரணங்கள் | மரமறுக்கும் வாள், உளிகள், சீவுளிக்கூடு, சுத்தியல் ($\frac{3}{4}$ கி.கி) கூர் உளி, திருப்புளி, அடிமட்டம், முச்சதுரம், எண்ணெய்க் கல், பிடிச்சிராவி, இரம்பம். |
| முதலீடு | ரூபா 5,000/- |
| மாதவருமானம் | ரூபா 4,500/- |
| குறிப்பு | காணி, கட்டடங்களுக்கான பெறுமதியோ, வாடகையோ, முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. வீட்டின் ஒரு சிறு இடத்திலேயே இத் தொழிலை நடத்தலாம். தரமான பொருட்கள் உற்பத்தி செய்யப்படின் ஏற்றுமதிக்கான வாய்ப்பு உண்டு. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீமெந்து புளொக்குகள் (கல்) தயாரித்தல்

| | |
|---|---|
| அறிமுகம் | நகரப்புறங்களில் சீமெந்து புளொக்குகளுக்கான கேள்வி அதிகம் உண்டு. தரமான புளொக்குகளைத் தயாரிப்பின் நல்ல இலாபத்தை ஈட்டிக்கொள்ளலாம். சில இடங்களில் போட்லன்ட் சீமெந்து, மண், நீர் ஆகியவற்றைக் கொண்டு இவை தயாரிக்கப்படுகின்றன. சில இடங்களில் இவற்றுடன் சிறுகற்களையும் (சல்லி / கிறஷர்) சேர்த்து புளொக்குகள் தயாரிக்கப்படுகின்றன. |
| சந்தைவாய்ப்பு | அரசாங்க கட்டட வேலைகட்கும், தனியார் கட்டட வேலைகட்கும் சீமெந்து புளொக்குகள் பயன்படுத்துவதால் சந்தை வாய்ப்பு நிறைய உண்டு. கட்டட ஒப்பந்தக்காரர்களுடன் தொடர்பு வைப்பதன் மூலம் விற்பனையைப் பெருக்கிக் கொள்ளலாம். |
| தொழில்நுட்பம் | ஆரம்பப் பயிற்சியுடன் இத்தொழிலை ஆரம்பிக்கலாம். பிராந்திய கைத்தொழில் அபிவிருத்திச் சபை, சிறுகைத் தொழில் திணைக்கள அலுவலகங்கள் வாயிலாகப் பயிற்சியைப் பெற்றுக் கொள்ளலாம். |
| மூலப்பொருட்கள் | போட்லன் சீமெந்து - 10 பை (நாளொன்றுக்கான உற்பத்திக்கு)<br>மண் - $\frac{1}{2}$ கியூப்<br>தண்ணீர் |
| உபகரணங்கள் | இயந்திரப்பொறி (மின்சாரத்தால் இயக்குவது)<br>அச்சு (4'', 6'', 8'', அளவு கொண்டவை)<br>பாத்திரங்கள்<br>மண்வெட்டி / சவள் |
| முதலீடு | நிலையான செலவு: 20,000/- (இயந்திரம், அச்சு)<br>நடைமுறைச் செலவு: 3,000/- |
| மாதவருமானம் | ரூபா 5,000/- |
| குறிப்பு | காணி, கட்டடம் ஆகியவற்றின் பெறுமதியோ வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. தொழிலாளர்களை மேலும் சேர்த்துத் தொழிற்படும் போது உற்பத்தி அதிகரிக்கும். உற்பத்திச் செலவு குறையும். இயந்திரப் பொறியைப் பயன்படுத்தாது கையாலும் சீமெந்து புளொக்குகளைத் தயாரித்துச் சந்தைப்படுத்தலாம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செங்கல் தயாரித்தல்

| | |
|---|---|
| அறிமுகம் | வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வன்னிப் பிரதேசம் இத் தொழிலுக்கு வாய்ப்பானதாகும். இயந்திரசாதனங்கள் அதிகம் தேவைப்படாத இத்தொழிலுக்கு மனித உழைப்பே முக்கியமானதாகும். மூலப்பொருட்கள்கூட மிக இலகுவாகப் பெறக்கூடியன. எனவே இத் தொழிலை நிலையாகத் தொடர்ந்து செய்வதன் மூலம் பெருமளவு வருமானத்தைப் பெற்றுக்கொள்ளலாம். |
| சந்தைவாய்ப்பு | அரச திணைக்களங்கள், பாடசாலைகள், தனியார் நிறுவனங்களுக்கான கட்டடங்களை அமைப்பதற்குப் பெருமளவு செங்கற்கள் தேவைப்படுகின்றன. செங்கற்கள் வீட்டைக் குளிர்மைப்படுத்துவதால் சீமெந்துக்கற்களைவிட பெரிதும் வரவேற்கப்படுகின்றன. எனவே செங்கற்களைப் பொறுத்தவரையில் பெருமளவு சந்தைவாய்ப்புண்டு. |
| தொழில்நுட்பம் | இத் தொழிலுக்குத் தொழில்நுட்பம் பெரிதும் வேண்டப்படுவதில்லை. சொற்ப பயிற்சியுடன் தொழிலை ஆரம்பிக்கலாம். அனுபவம் முதிர முதிர உற்பத்தித் திறனும், தரமும் அதிகரிக்கும். பிராந்திய கைத்தொழில் அபிவிருத்திச்சபை, சிறுகைத்தொழில் திணைக்கள அலுவலகங்கள், தனியார் செங்கல் தயாரிப்பு நிலையங்களில் வேண்டிய பயிற்சியைப் பெற்றுக்கொள்ளலாம். |
| மூலப்பொருட்கள் | களி, மணல், நீர், எரிபொருள் (விறகு)<br>நீர்நிலைகளை அண்டிய களிமண்பாங்கான பிரதேசங்கள் இத் தொழிலுக்கு வாய்ப்பானவையாகும். தரிசு நிலங்களை இவ்வுற்பத்தியின் பொருட்டு பயன்படுத்தலாம். வன்னிப்பிரதேசத்தில் காடுகள் காணப்படுவதனால் தேவையான அளவு விறகையும் இலகுவாகப் பெற்றுக்கொள்ளமுடியும். |
| உபகரணங்கள் | அச்சுக்கள், மண்வெட்டி, வாளி, அலவாங்கு, கோடரி, சூளை. |
| முதலீடு | ரூபா 15,000/- |
| மாதவருமானம் | ரூபா 6,000/- |
| குறிப்பு | காணி, கட்டடங்களுக்கான பெறுமதியோ வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. மூலப்பொருட்களான களி, மணல், நீர், விறகு ஆகியன இலகுவாகவும் மலிவாகவும், இலவசமாகவும் கிடைப்பதனால் குறைந்த விலைக்கு இவற்றை விற்பதன்மூலம் பெருமளவு வருமானத்தைப் பெறலாம். மழைகாலங்களில் இத்தொழில் தடைப்படும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணாடி இழைப்பொருட்கள் உற்பத்தி

**அறிமுகம்** உடையாததும் பழுதுபடாததுமான தன்மைகொண்டவை கண்ணாடி இழையிலான உற்பத்திப்பொருட்கள். இதனால் இவை மக்களால் பெரிதும் விரும்பப்படுகின்றன. சாப்பாட்டு மேசை, கதிரைவகைகள், பூச்சாடிகள், கண்ணாடிபிறேம்கள், சமையலறை பேசின்கள், கொமட், மின்சாரவிளக்கு ஷெட்டுகள், சாம்பல்தட்டுகள், ஊசிக்கிளிப்தட்டுகள், பேப்பர்வெயிட், திறப்புக்கோர்வைகள், சாதாரணறே வகைகள், தண்ணீர்த் தொட்டி, போன்றபொருட்கள் கண்ணாடி இழைமூலம் உற்பத்திசெய்யப்படுகின்றன.

**சந்தைவாய்ப்பு** மரத்தளபாடங்களின் விலையேற்றம் காரணமாக இன்று கண்ணாடி இழைப்பொருட்களுக்குப் பெரும்கிராக்கி ஏற்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கு மாகாணத்திலும் வெளிமாகாணங்களிலும் இவற்றைச் சந்தைப்படுத்தலாம். திருகோணமலை ப. நோ. கூ. சங்கம் தயாரிக்கும் கண்ணாடி இழைப் பொருட்களுக்கு கொழும்பிலிருந்து ஒடர்கள் கிடைப்பது குறிப்பிடத்தக்கது.

**தொழில்நுட்பம்** தொழில்நுட்பம் இலகுவானது. பயிற்சியும் அனுபவமும் அவசியம். பயிற்சியை திருகோணமலை ப. நோ. கூ. சங்க கண்ணாடி இழைப்பொருள் உற்பத்தி நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஒவ்வொருவகையான பொருளைத் தயாரிப்பதற்கும் ஒவ்வொரு வகையான அச்சு உண்டு. இவ்வச்சுக்களை நாமே தயாரிக்கலாம். துப்பரவு செய்யப்பட்ட அச்சில் ஜெல்கொட் என்னும் இரசாயனத்தைப் பூசி ஒரு மணி நேரம் காயவிட வேண்டும். பின்னர் நூல் இழைப்பாயை அச்சின் அளவுக்கேற்ப வெட்டி காயவிட்ட இரசாயனத்தின்மேல் ஒட்ட வேண்டும். றேசின், கரலஸ்ற் ஆகிய இரசாயனங்களை பிரமாணங்களுக்கேற்ப கலந்து நூல் இழைமேல் பூசவேண்டும். குறைந்தது 2 மணிநேரம் காயவிடவேண்டும். இவையாவும் ஒன்று சேர்ந்து ஒட்டி காய்ந்து இறுகும். பின்னர் அச்சிலிருந்து உற்பத்திப் பொருளைக் கழற்ற வேண்டும். பொருளின் ஓரங்களை நேர்த்தியாகக் கத்தரித்தல் வேண்டும். இவ்வோரங்களுக்கு ஜெல்கொட் பூசி மெழுகினால் பொலிஸ் செய்யவேண்டும். கதிரை மேசைகளுக்கான பிறேமை இரும்புத் தொழிற்சாலை ஒன்றில் செய்விக்கலாம்.

**மூலப்பொருட்கள்** நூல் இழைப்பாய், கண்ணாடி இழை இரசாயனங்கள் (RESIN, GELCOT, CATALUST) ஜீ. ஐ. பைப்புக்கள், கம்பிகள்.

**உபகரணங்கள்** $\frac{1}{2}''$—$3''$ வரையான பிறஷ்கள், சான்பேப்பர், அச்சுக்கள், கலவைக்கான பாத்திரங்கள்.

**முதலீடு** ரூபா 15,000/-

**மாதவருமானம்** ரூபா 2,500/-

**குறிப்பு** காணி கட்டடம் ஆகியவற்றின் பெறுமதியோ வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.
இருவர் அல்லது மூவர் இத்தொழிலில் ஈடுபடலாம். முதலீட்டை அதிகரிப்பின் மேலதிக தொழிலாளர்களை அமர்த்தி உற்பத்தியை அதிகரிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூட்கேஸ் தயாரித்தல்

**அறிமுகம்** — பிரயாணங்களின்போதும் பொருட்களை எடுத்துச் செல்வதற்கும் வீடுகளில் துணிமணிகளைப் பேணிவைப்பதற்கும், பாடசாலைப் பிள்ளைகள் புத்தகங்களை எடுத்துச் செல்வதற்கும் சூட்கேஸ் பயன்படுத்தப்படுகின்றது. பிரயாணப் பொருட்களை எடுத்துச்செல்வதற்கும் துணிமணிகளைப் பேணிவைப்பதற்கும் 18'', 20'', 22'', 24'' சூட்கேஸ் பயன்படும். பாடசாலைப் பிள்ளைகளுக்கு 12'' சூட்கேஸ் போதுமானது.

**சந்தைவாய்ப்பு** — சந்தையில் சூட்கேசுக்கான கேள்வி மிக அதிகமாகும். எக்காலத்திலும் இதற்கான கிராக்கி உண்டு. கேள்விக்கேற்றளவு உற்பத்தி இது காலவரை மேற்கொள்ளப்படவில்லையாகையால் எவ்வளவு பொருளையும் உற்பத்திசெய்யலாம்.

**தொழில்நுட்பம்** — தொழில்நுட்பம் மிக இலகுவானது. ஆரம்பப்பயிற்சியைப் பெற்றுக்கொண்டு தொழிலை ஆரம்பிக்கலாம். தொழில்நுட்பத்தேர்ச்சி அதிகரிக்கும்போது உற்பத்தியும் அதன்தரமும் அதிகரிக்கும். திருகோணமலை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் சூட்கேஸ்உற்பத்தி செய்கின்றது. இங்கு வேண்டிய பயிற்சியை இலவசமாகப் பெற்றுக்கொள்ளமுடியும்.

**மூலப்பொருட்கள்** — சூட்கேஸ்போட், வீடிங் தகரம், றிவேட்ஆணி, $\frac{1}{4}$'', $\frac{1}{2}$'', பெனால்பின் $\frac{1}{2}$'' பெனால்பின் 1'', கோணகப், கைபிடி, கிளம்ஸ் $\frac{3}{4}$''×$\frac{1}{2}$'' மரநீப்பை, மாபிள்பேப்பர், பூட்டு, கிளிப், பிணைச்சல், (கொழும்பு 11ல் உள்ள '' கண்டி ஸ்ரோஸ் '' இல் இப் பொருட்களைக் கொள்வனவு செய்யலாம்.

**உபகரணங்கள்** — றிவேட் சுத்தியல் 250 கிறாம், பெரிய சுத்தியல் 500 கிறாம், இரும்பறுக்கும்வாள், கத்தரிக்கோல், (பெரிது) ஸ்குறூட்றைவர் குறடு (சிறிது) போட் மடிப்பதற்கான அச்சு (இதனை இரும்பில் நாமே செய்விக்கலாம்)

**முதலீடு** — உபகரணங்களுக்கு ரூபா 3000/-
உற்பத்தி மூலப் பொருட்களுக்கு ரூபா 10,000/-

**வருமானம்** — நாளொன்றுக்கு இரண்டு தொழிலாளர் குறைந்தது 5 தொடக்கம் 10 சூட்கேஸ் தயாரிக்கலாம். சூட்கேஸ் ஒன்றில் பெறும் இலாபம் ரூபா 25/- ரூபா 10,000/- முதலீட்டில் 95 சூட்கேஸ் தயாரிக்கலாம். எனவே இம் முதலீடு மூலம் கிடைக்கும் இலாபம் 95×25/- = 2375/- ரூபா. தொழில் நுட்பத் தேர்ச்சிக்கேற்ப உற்பத்தி அளவு அதிகரித்துச்செல்லும்.

**குறிப்பு** — காணி, கட்டடம் ஆகியவற்றின் பெறுமதியோ வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.
வீட்டின் ஒரு பகுதியில் வைத்தே இத்தொழிலை மேற்கொள்ளலாம். மிக இலகுவான தொழிலாகையால் யாரும் இத்தொழிலில் ஈடுபடலாம். உற்பத்திப் பொருட்களை வெளிமாகாணங்களிலும் சந்தைப்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை ஓலைப் பொருட்கள்

**அறிமுகம்** வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பனை ஓலைப் பொருட்கள் தயாரித்தல் பண்டுதொட்டு குடிசைக் கைத்தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பனை ஓலையில் இருந்து பாய், பெட்டி, வெங்காயக்கூடை, சுளகு, தொப்பி, இடியப்பத்தட்டு, வீட்டு அலங்காரப்பொருட்கள் ஆகியன உற்பத்தி செய்யப்படுகின்றன.

**சந்தைவாய்ப்பு** வடக்கு-கிழக்கு மாகாணத்தில் மட்டுமன்றி நாட்டின் ஏனைய மாகாணங்களிலும் இவ்வுற்பத்திப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்பு நிறைய உண்டு. தரமான உற்பத்திப் பொருட்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. நாட்டின் பல பாகங்களிலுமுள்ள ''கற்பகம்'' விற்பனை நிலையங்கள் இப்பொருட்களைக் கொள்வனவு செய்து சந்தைப்படுத்துகின்றன. இப்பொருட்களுக்கான தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு இதுவரை உற்பத்தி மேற்கொள்ளப்படவில்லையாகையால் எவ்வளவு பொருளையும் உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்பு உண்டு.

**தொழில்நுட்பம்** தொழில்நுட்பம் மிக இலகுவானது. குறுகிய காலப்பயிற்சியுடன் உற்பத்தி முயற்சியில் ஈடுபடலாம். தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கங்கள், இலங்கைக் கைத்தொழிற் சபை, சிறுகைத்தொழில் திணைக்களம் ஆகியன தொழில்நுட்பப் பயிற்சிகளை அளித்து வருகின்றன. தொழில்நுட்பத் தரத்தை அதிகரிப்பதன் மூலம் உற்பத்தித் தரத்தையும் சந்தை வாய்ப்பையும் விரிவுபடுத்தலாம்.

**மூலப்பொருட்கள்** பனை ஓலை. பனையின் இளம் குருத்தோலை(சார்வு)யிலிருந்து செய்யப்படும் பொருட்கள் அதிகம் விரும்பப்படுகின்றன.

**உபகரணங்கள்** சத்தகம், அல்லது சிறுகத்தி அல்லது ஓலை வாருவதற்கான சிறுபொறி.

**முதலீடு** ரூபா 1,000/-

**மாதவருமானம்** ரூபா 1,500/-

**குறிப்பு** காணி, கட்டடம், ஆகியவற்றுக்கான பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.
வீட்டில் ஒரு சிறுபகுதியிலேயே இத்தொழிலை மேற்கொள்ள முடியும். வடக்கு-கிழக்கு மாகாணத்திலும் வெளி மாகாணங்களிலும் உற்சவ காலங்களில் இப்பொருட்களுக்கான கிராக்கி மிக அதிகமாகும். புகையிலை (சிப்பங்கள்) பொதி செய்யப்படுவதற்கு பனை ஓலைப்பாய்கள் பயன்படுத்தப்படுவதனால் புகையிலையை வெளிமாகாணங்களுக்கு ஏற்றுமதி செய்யும் காலங்களிலும் பாய்களுக்கான கிராக்கி அதிகமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனந்தும்பு தயாரித்தல்

| | |
|---|---|
| அறிமுகம் | வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பெருமளவில் பனை மரங்கள் காணப்படுகின்றன. பனையின் இளம்வடலிகளின் கங்கு மட்டைகளில் இருந்து தும்பு எடுக்கப்படுகின்றது. வீட்டில் ஒரு பகுதியில் இதனை ஓர் உபதொழிலாக மேற்கொள்ள முடியும். பலர் சேர்ந்து ஒரு குழுவாகவும் இணைந்து இத் தொழிலை மேற்கொள்ளலாம். |
| சந்தைவாய்ப்பு | வடக்கு-கிழக்கு மாகாணத்தில் மட்டுமன்றி நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பனந்தும்புக்கு அதிக கிராக்கி உண்டு. பல வெளிநாடுகள், பனந்தும்பை இறக்குமதி செய்வதில் ஆர்வம் காட்டுவதனால் நிலையான சந்தைவாய்ப்புண்டு. பனந்தும்பிலிருந்து தும்புத்தடிகள், பிரஷ்கள், துடைப்பான்கள் போன்றன தயாரிக்கப்படுகின்றன. |
| தொழில்நுட்பம் | தொழில் நுட்பம் இலகுவானது. சொற்ப நாள் பயிற்சியுடன் இத்தொழிலை ஆரம்பிக்கலாம். பனை அபிவிருத்திச்சபையும் தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களும் இதுபற்றிய பயிற்சிகளை வழங்கிவருகின்றன. உற்பத்தியை ஆரம்பிப்பதற்கான ஊக்குவிப்புக்களையும், உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளையும் 'கற்பகம்' விற்பனை நிலையங்கள் மேற்கொள்கின்றன. |
| மூலப்பொருட்கள் | இளம் பனை வடலிகள். |
| உபகரணங்கள் | சுத்தியல், தும்பு வாரும் சீப்புகள், கங்கு அறுக்கும் கத்தி, கங்கு அடிக்கும் மரப்பொல், கங்கு வைத்து அடிக்கும் அடைகல், மட்டப்படுத்தும் கத்தி. |
| முதலீடு | ரூபா 1,000/- க்கு உட்பட்ட சிறு உபகரணங்கள். |
| மாதவருமானம் | நாளொன்றுக்கு 2 கி.கி. தும்பு அடிக்க முடியும்.<br>கி. கி.ரூபா 60/- ஆக விற்பனை செய்யமுடியும். |
| குறிப்பு | காணி, கட்டடம் ஆகியவற்றிற்கான பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.<br>பனந்தும்பின் ஒரு சிறுபகுதித் தேவையைக் கூட பூர்த்தி செய்யும் அளவுக்கு உற்பத்தி வளர்ச்சியடையவில்லை. எனவே பனந்தும்பை பெருமளவில் உற்பத்தி செய்யும் வாய்ப்புண்டு. தரமான தும்பு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால் அவற்றுக்கு நல்ல விலை கிடைக்கின்றது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனந்தும்பு பெறப்படும் செய்முறை

தும்பு சேகரிப்பதற்கு பத்து வருடத்துக்குமேற்பட்ட வளர்ச்சியடைந்த வடலிகள் பயன்படுகின்றன. ஓலையைப் பனையுடன் பற்றிப்பிடித்திருக்கும் பகுதி கங்கு எனப்படும். இக் கங்கிலிருந்தே தும்பு எடுக்கப்படுகின்றது. இக் கங்கினைத் தனித் தனியாக்கி அடைகல்லின்மேல் வைத்து மரப்பொல்லினால் அடிக்கும்போது அவை நைந்து மென்மையடைகின்றன. தும்பை சுற்றியிருக்கும் சோற்றிப்பாகம் வேறாக்கப்படும். பின் தும்புடைய பகுதியைப் பகிர்ந்து இரும்பாணி பொருத் தப்பட்ட சீப்பிலிட்டு அவற்றை வாருதல்வேண்டும். இந் நிலையில் தும்பைப் பற்றியிருக்கும் எஞ்சிய சோற்றிப்பாகம் வேறாக்கப்பட்டு தும்பு கைக்குவரும். இத்தும்பு கறுப்பு வெள்ளை என இனம்பிரித்தெடுக்கப்பட்டு வெயிலில் காயவிடப் படுகின்றது. இது கோரா தும்பு எனப்படும்.

## கோராதும்பு சுத்திகரிக்கும் முறை

கோராத்தும்பை 24 மணிநேரம் ஊறவைக்கவேண்டும். பின் இதனை அதற் கென உரிய சீப்பிலிட்டு வாருதல் வேண்டும். அப்போது எஞ்சியிருக்கும் சோற் றிப்பாகமும் நீங்குவதால் தும்பு பளபளப்பாக வருகின்றது. பின் தும்பை ஒரு பக்கம் மட்டமாக்கி பிடியாகக் கட்டவேண்டும். மட்டமற்ற பகுதி வெட்டி நீக்கப்படவேண்டும்.

## இயந்திரமூலம் தும்பு உற்பத்தி

**உபகரணங்கள்:-** உருளை இயந்திரம், சீப்பு இயந்திரம், மெருகூட்டி

மேற்குறிப்பிட்ட கங்குகள் உருளை இயந்திரத்திலிட்டு நசிக்கப்படுகின்றன. பின்னர் இவை சீப்பு இயந்திரத்திலிட்டு வாரும்படியாகப் பகிர்ந்தெடுக்கப்படு கின்றன. சீப்பிலிட்டு வாரியெடுக்கப்பட்ட தும்பு பின்னர் மெருகூட்டி எனப் படும் இயந்திரத்திலிட்டு சுத்தப்படுத்தப்படுகின்றது. பின்னர் நீள்வாரியாக இவை அளவுபடுத்தி எடுக்கப்படுகின்றன. இந்த இயந்திரத்தைப் பெற விரும்புவோர் பனை அபிவிருத்திச்சபையுடன் தொடர்புகொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தும்புக்கயிறு தயாரித்தல்

**அறிமுகம்** தென்னை அதிகமாக வளரும் கடற்கரைப் பிரதேசம் இத் தொழிலுக்கு வாய்ப்பானதாகும். தென்னையின் கழிவுப் பொருட்களே உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுவதனால் குறைந்த விலையில் மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியும். தேங்காய் மட்டையை நீரில் ஊறவைத்தே தும்பு அடிக்க வேண்டுமாகையால் நீர்நிலைகளை அண்டிய பிரதேசங்களில் இத்தொழிலை ஆரம்பித்து நடத்தலாம். கிராமப் புறங்களில் சிறுவர் முதல் முதியோர்வரை இத் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

**சந்தைவாய்ப்பு** வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தும்புக்கயிறு தயாரித்தல் தொழில் இன்னும் வளர்ச்சியடையவில்லை. பெருமளவு தேங்காய் மட்டைகள் எரிபொருளாகவும், கழிவுப்பொருளாகவும் உள்ளன. இம் மாகாணத்துக்குத் தேவையான தும்புக் கயிறு பிற மாகாணங்களிலிருந்தே தருவிக்கப்படுகின்றது. எனவே வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தும்புக்கயிறுக்கான சந்தைவாய்ப்பு நிறைய உண்டு.

**தொழில்நுட்பம்** தொழில்நுட்பம் மிக இலகுவானது. சொற்பநாள் பயிற்சியுடன் இத்தொழிலை ஆரம்பிக்கலாம். கிராமப்புறங்களில் மரபுவழித் தொழிலாக இது நடைபெறுகிறது. பிராந்திய கைத்தொழில் அபிவிருத்திச்சபை, சிறுகைத்தொழில் திணைக்கள அலுவலகங்கள் மூலம் வேண்டிய தொழில்நுட்பப் பயிற்சியைப் பெற்றுக்கொள்ளலாம்.

**மூலப்பொருட்கள்** தேங்காய் மட்டையிலிருந்து பெறப்படும் தும்பு.

**உபகரணங்கள்** கயிறு திரிக்கும் பொறி, அலுமாரித்தட்டு (விறாக்கி) தட்டுப்பொல்லு.

**முதலீடு** ரூபா 5,000/-

**மாதவருமானம்** ரூபா 3,000/-

**குறிப்பு** காணி, கட்டடம் ஆகியவற்றின் பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.
அவ்வப் பிரதேசத்தில் கிடைக்கும் தேங்காய் மட்டையைப் பயன்படுத்தலாம். அல்லது பிற இடங்களிலிருந்து தருவிக்கலாம். தேங்காய் மட்டையை இரண்டு கிழமைகள் நீரில் ஊறவிட்டு எடுக்கவேண்டுமாகையால் நீர் நிலைகளை அண்டிய பகுதி அல்லது நீர்கொள்ளக்கூடிய பெருந்தொட்டிகள் அவசியமாகும். எடுக்கப்படும் தும்பின் தரத்திற்கேற்ப கயிற்றின் தரமும் விலையும் அமையுமாகையால் தரமான தும்பைப் பெறுவது முக்கியமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கயிற்றுத் தும்புச் சுருள் தயாரித்தல்

| | |
|---|---|
| அறிமுகம் | தும்புக்கயிறு தயாரித்தலுடன் தொடர்புடையது இத் தொழில். தும்புக்கயிறு தயாரிக்கும் நிலையங்களில் ஓர் உப தொழிலாக இதனை மேற்கொள்ளலாம். அல்லது கயிற்றுத் தும்பை வேறாகக் கொள்வனவு செய்தும் இத்தொழிலை நடத்தலாம். தரமான கயிற்றுத்தும்புச் சுருள்களைத் தயாரிப் பின் ஏற்றுமதி செய்யும் வாய்ப்புக்களும் உண்டு. |
| சந்தைவாய்ப்பு | அலுவலகங்கள், வீடுகள், தொழிற்சாலைகள் போன்ற இடங் களில் கயிற்றுத்தும்புச் சுருள்கள் தேவைப்படுகின்றன. வெளி நாடுகட்கு ஏற்றுமதி செய்யக்கூடிய தரமான சுருள் தயா ரிக்கப்படின் வெளிநாட்டுச் சந்தைவாய்ப்பும் உண்டு. |
| தொழில்நுட்பம் | தொழில்நுட்பம் இலகுவானது. சொற்ப பயிற்சியுடனேயே தொழிலில் ஈடுபடலாம். புதிய தொழில் நுணுக்கங்களைப் புகுத்துவதன்மூலம் உற்பத்திப் பொருளின் தரத்தை உயர்த் தலாம். பிராந்திய கைத்தொழில் அபிவிருத்திச்சபையிலோ அல்லது சிறுகைத்தொழில் திணைக்கள அலுவலகங்களிலோ அல்லது தனியார் கயிற்றுத்தும்பு சுருள் தயாரிக்கும் நிலை யங்களிலோ பயிற்சியைப் பெற்றுக்கொள்ளலாம். |
| மூலப்பொருட்கள் | தென்னந்தும்பு அல்லது தும்புக்கயிறு. |
| உபகரணங்கள் | திரிக்கும்பொறி, சுருளாக்கும்பொறி (றேசர்கள் பொருத்தப் பட்டது) |
| முதலீடு | அண்ணளவாக ரூபா 3,500/- (இரண்டு பொறிகளுக்கும்) |
| மாதவருமானம் | ரூபா 2,500/- |
| குறிப்பு | காணி, கட்டடங்களின் பெறுமதி முதலீட்டில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. பன்னவேலைகளை வீட்டிலிருந்து செய் வதுபோல வீட்டிலிருந்தே இத்தொழிலை மேற்கொள்ள முடியும். சாயமூட்டப்பட்ட தும்புச்சுருள்களைத் தயாரிப் பதன்மூலம் பொருளின் தரத்தையும் கிராக்கியையும் உயர்த் தலாம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெசவுத் தொழில்

| | |
|---|---|
| அறிமுகம் | மிக நீண்டகாலப் பாரம்பரியப் பெருமை கொண்டது நெசவுத் தொழில். இன்றும் குடிசைக்கைத்தொழிலாக இது பெருமளவு மக்களுக்கு வாழ்வளித்து வருகின்றது. பரம்பரைத் தொழிலாகப்பலர் இத் தொழிலை இன்னும் மேற்கொண்டு வருகின்றனர். அரசாங்கம் பல வழிகளில் இத்தொழிலுக்கு ஊக்கமளித்து வருகின்றது. பெட்சீட், சாரம், துவாய், சேலை, வேட்டி ஆகியன உற்பத்தி செய்யப்படலாம். |
| சந்தைவாய்ப்பு | நெசவு செய்யப்பட்ட பருத்தித் துணிகளுக்கு நிலையான தொடர்ச்சியான சந்தைவாய்ப்பு இருந்து வருகின்றது. றெயோன், நைலோன், சிந்தற்றிக்ஸ் துணிவகைகள் பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்டுவரினும் எமது காலநிலைக்கும், பொருளாதார நிலைக்கும், நெசவுத்துணிகளே உகந்தவை. எனவே நெசவுத் துணிகளுக்கான கிராக்கி என்றும் உண்டு. |
| தொழில்நுட்பம் | இத்தொழிலுக்கு நிறைந்த தொழில்நுட்ப அறிவு அவசியமாகின்றது. எனவே தொழிலை ஆரம்பிப்பதன் முன்னர் வேண்டிய பயிற்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். புடவைக்கைத்தொழில் அமைச்சு அலுவலகங்கள் இதற்கான பயிற்சியை அளித்து வருகின்றன. |
| மூலப்பொருட்கள் | நூல், டை |
| உபகரணங்கள் | கைத்தறி (பொறி)<br>றீட், கீல்ஸ் செற், வாப்பிங்செற், வைன்டிங்மெசின் |
| முதலீடு | ரூபா 20,000/- |
| மாதவருமானம் | ரூபா 5,000/- |
| குறிப்பு | காணி, கட்டடம் ஆகியவற்றின் பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.<br>தரமானதும் குறைந்த விலையிலானதுமான தறிகளை வடக்கு-கிழக்கு மாகாண சிறுகைத்தொழில் திணைக்கள தொழிற் பயிற்சி நிலையம் செய்து வழங்குகின்றது.<br>புடவை நெய்வதற்கு வேண்டிய நூல்களை அரசாங்கம், கைத்தறிப்புடவை நெசவாளர் சங்கங்கள் மூலம் விநியோகித்து வருகின்றது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலையணை உறை தயாரித்தல்

| | |
|---|---|
| அறிமுகம் | வீட்டில் இருந்தவாறு உற்பத்தித்தொழிலில் ஈடுபடவிரும்பு வோர்க்கு தலையணை உறை தயாரித்தல் உகந்ததாகும். இதனை ஓர் உபதொழிலாகவும் மேற்கொள்ளலாம். விடுமுறை காலங்களில் பாடசாலைப்பிள்ளைகளும் இம் முயற்சியில் ஈடு படலாம். தையல் பற்றிய அடிப்படை அறிவுடன் அல்லது பயிற்சியுடன் தொழிலை ஆரம்பிக்கலாம். காணி, கட்டடம் போன்றவற்றுக்கான முதலீடு அவசியமற்றதாகும். |
| சந்தைவாய்ப்பு | சகல மட்டத்திலுமுள்ள மக்கள் தலையணைக்கான உறை களைப் பயன்படுத்துகின்றனர். எனவே தலையணை உறைகளுக் கான சந்தைவாய்ப்பு எப்போதும் உண்டு. உற்பத்திச் செலவைக் குறைப்பதன்மூலம் குறைந்த விலையில் தலையணை உறைகளைத் தயாரித்து அதிக இலாபத்தை ஈட்டலாம். |
| தொழில்நுட்பம் | தொழில்நுட்பம் மிக இலகுவானதாகும். உறையில் பூப் போடக்கூடிய தையல் இயந்திரத்தைப் பயன்படுத்துவதன் மூலம் பொருளின் தரத்தை மேம்படுத்தலாம். இதன்மூலம் நல்ல சந்தைவாய்ப்பைப் பெற்று வருமானத்தையும் அதிகரிக் கலாம். சொற்பகாலப் பயிற்சியே தொழிலை ஆரம்பிப்பதற்குப் போதுமானதாகும். சிறுகைத்தொழில் திணைக்கள அலுவ லகங்கள் மூலம் தொழில்நுட்பப் பயிற்சியைப் பெற்றுக்கொள் ளலாம். |
| மூலப்பொருட்கள் | நிறத்துணி, வெள்ளைத்துணி, நிற/வெள்ளை நூல்வகைகள், இணைப்புப் பொத்தான்கள். |
| உபகரணங்கள் | பூப்போட்டுத் தைக்கக்கூடிய தையல் இயந்திரம், கத்தரிக் கோல், அடையாளமிடும் கருவிகள், தையல்ஊசிகள். |
| முதலீடு | உபகரணங்கள் ரூபா 13,000/-<br>மூலப்பொருட்கள் ரூபா 2,600/- |
| மாதவருமானம் | ரூபா 3,000/- |
| பிரமாணம் | நீளம் 54'' அகலம் 18''<br>¾ யார் துணி போதுமானது. |
| குறிப்பு | ஒரு நாளில் பூவேலைசெய்த தலையணைஉறை ஒன்றும் பூ வேலை இல்லாத தலையணை உறை ஒன்றும் பகுதிநேர வேலையாகச் செய்யமுடியும். காணி, கட்டடம் ஆகியவற்றுக் கான பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்க்கப் படவில்லை. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்பாய் தயாரித்தல்

**அறிமுகம்**
சாதாரண மனிதனின் அன்றாடத்தேவைக்கு புற்பாய் பயன்படுகின்றது. இலவசமாகக் கிடைக்கும் புல்லைப்பயன்படுத்தி சிறு முதலீட்டுடன் அதிக வருமானத்தைத் தரும் தொழிலாக இது விளங்குகின்றது. வீடுகளில் வைத்தே குடிசைக் கைத்தொழிலாக இதனை மேற்கொள்ளமுடியும்.

**சந்தைவாய்ப்பு**
வெப்பம் அதிகமான பிரதேசங்களில் புற்பாய்களே படுப்பதற்கும், வைபவங்களின்போது விரிப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. எனவே வடக்கு-கிழக்கு மாகாணத்திலும் ஏனைய மாகாணங்களிலும் இதற்கு நல்ல சந்தைவாய்ப்புண்டு; லக்சல, கற்பகம், சிறுகைத்தொழில் திணைக்கள விற்பனை நிலையங்கள் இவற்றைக் கொள்வனவு செய்து சந்தைப்படுத்தி வருகின்றன.

**தொழில்நுட்பம்**
சிறிதளவு காலப்பயிற்சியுடன் இத்தொழிலை ஆரம்பிக்கலாம்; இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச்சபை, இலங்கைக் கைப்பணிச் சபை, சிறுகைத்தொழில் திணைக்களம் ஆகியவற்றின் மூலம் வேண்டிய பயிற்சியைப் பெற்றுக்கொள்ளலாம்.

**மூலப்பொருட்கள்** கல்பன்புல். இப்புல் கிடைக்குமிடங்கள்:-

வடபகுதியில்:- துணுக்காய், வட்டக்கச்சி, கிளிநொச்சி ஆகிய இடங்கள்

கிழக்குப்பகுதியில்:- திருகோணமலை மாவட்டத்தில்: சிப்பித்திடல், புதுக்குடியிருப்பு, தம்பலகாமம், கிண்ணியா, நிலாவெளி, கந்தளாய், கோமறங்கடவெல, பத்மீகம, அமதிகம ஆகியஇடங்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில்:- குருக்கள்மடம், இராஜபுரம், மறப்பாலம், புல்லுமலை, கிரான்குளம், மயிலம்பாவளி, வெல்லாவெளி, கொம்மாந்துறை ஆகிய இடங்கள்.

அம்பாறை மாவட்டத்தில் :- மகாஓயா, வீரமுனை, சம்மாந்துறை, ஆகிய இடங்கள்

**உபகரணங்கள்** கைத்தறிப்பொறி, நூல், சாயம், துணி, 48'' நீட் கீல்ஸ்செற்

**முதலீடு** ரூபா 10,000/- (கைத்தறிப்பொறி உட்பட)

**மாதவருமானம்** ரூபா 3,500/-

**குறிப்பு**
காணி, கட்டடம் ஆகியவற்றின் பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப் படவில்லை. இலங்கைக் கைப்பணிச் சபை ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்தொழிலுக்கான பயிற்சியை வழங்கிவருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரம்புப் பொருட்கள் தயாரித்தல்

| | |
|---|---|
| அறிமுகம் | அலுவலகப் பாவிப்புக்கான கடதாசிக் கூடைகள், தட்டுக்கள், கதிரைகள், சாதாரண கூடைகள் ஆகியன பிரம்புமூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன. பிரம்பு மூலம் தயாரிக்கப்படும் இப் பொருட்கள் நீண்ட காலம் பாவிக்கக்கூடிய உறுதியானவை. குடிசைக் கைத்தொழிலாக வீட்டிலேயே இத்தொழிலை மேற்கொள்ள முடியும். |
| சந்தைவாய்ப்பு | அலுவலகங்களும், தனியார் நிலையங்களும் பிரம்பு உற்பத்திப் பொருட்களை விரும்பி வாங்குகின்றன. வீட்டுத் தளபாடங்களாகவும் பிரம்புப் பொருட்கள் பயன்படுகின்றன. உல்லாசப் பயணிகளின் தங்குமிடங்கள், பெரிய ஹோட்டல்கள் ஆகிய இடங்களில் பிரம்பு உற்பத்திப் பொருட்கள் அலங்காரப் பொருட்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. எனவே, பிரம்பு உற்பத்திப் பொருட்களுக்கு நிலையான சந்தைவாய்ப்பு உண்டு. |
| தொழில்நுட்பம் | குறுகிய காலப் பயிற்சியுடன் இத்தொழிலை ஆரம்பிக்கலாம். தொழில்நுட்பத்திறனின் வளர்ச்சிக்கேற்ப உற்பத்திப் பொருளின் தரமும் வளர்ச்சியடையுமாகையால் தொழில்நுட்பத் தேர்ச்சி பெறுவது மிக முக்கியமானதாகும். மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கொடுவாமடு என்ற இடத்தில் இலங்கைக் கைப்பணிச் சபை பிரம்புப்பொருள் உற்பத்தி நிலையம் ஒன்றை நடத்திவருகின்றது. இங்கு பிரம்புப் பொருள் உற்பத்தியில் பயிற்சி அளிக்கப்படுகிறது. |
| மூலப்பொருட்கள் | பிரம்பு, கிடைக்குமிடங்கள்.<br>மட்டக்களப்பு-கொடுவாமடு, செங்கலடி, புதுக்குடியிருப்பு<br>திருகோணமலை-தம்பலகாமம். |
| உபகரணங்கள் | குறடு, ஆணி, கம்பி |
| முதலீடு | ரூபா 3,000/- |
| மாதவருமானம் | ரூபா 2,150/- |
| குறிப்பு | காணி, கட்டடம் ஆகியவற்றின் பெறுமதியோ வாடகையோ சேர்த்துக்கொள்ளப்படவில்லை.<br>மரத்தளபாடங்களின்விலை அபரிதமாக அதிகரித்துவரும் இக் காலகட்டத்தில் பிரம்புத்தளபாடங்களையே மக்கள் பெரிதும் விரும்பி வாங்குவர். எனவே துணைக்குத் தொழிலாளர் சிலரை வைத்துக்கொள்வதன்மூலம் உற்பத்தியையும், வருமானத்தையும் அதிகரிக்க முடியும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைப்பொறிமூலம் தானியம் அரைத்தல்

| | |
|---|---|
| அறிமுகம் | மின்சார வசதியுடைய நகர, கிராமப்புறங்களிலே மின்சார இயந்திரசாதனங்கள் மூலம் தானியங்கள் அரைக்கப்படுகின்றன. மின்சார வசதியற்ற கிராமப்புறங்களில் கையால் இயங்கும் பொறிமூலம் தானியம் அரைக்கும் தொழிலை மேற்கொள்ளலாம். தானியங்கள், மிளகாய், அரிசி, மருந்து, மூலிகைகள் ஆகியவை இந்தப் பொறியின் மூலம் அரைக்கப்படலாம். |
| தொழில்வாய்ப்பு | மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான உணவுப் பொருட்களுக்கான தானியங்கள் அரைக்கப்படுவதனால் இடையறாத தொழில்வாய்ப்புண்டு. தானியங்களை கொள்வனவு செய்து அரைத்து பொதி செய்து விற்பதன்மூலம் தொழில்வாய்ப்பை மேலும் அதிகரிக்கலாம். |
| தொழில்நுட்பம் | தொழில்நுட்பம் மிக இலகுவானது. இத் தொழிலுக்குத் தேவைப்படும் பொறி ''மில்லிங் மெஷின்'' என அழைக்கப்படுகின்றது. இதனை இயக்குவது மிகச் சுலபமானது. இப் பொறியை மரக்குற்றியொன்றில் பொருத்தியபின் அதனைப் பயன்படுத்தலாம். |
| மூலப்பொருட்கள் | தானியங்கள், மிளகாய், மருந்துமூலிகைகள். |
| உபகரணங்கள் | கையால் இயக்கும் தானியம் அரைக்கும் பொறியை சனசவிய உதவிபெறுநர்களுக்கு சுங்கத்தீர்வையின்றி இறக்குமதி செய்து தருவதற்கு இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்கும்.<br>பொறியின் விலை ரூபா 5,000/- |
| முதலீடு | ரூபா 7,500/- |
| மாதவருமானம் | அண்ணளவாக ரூபா 5,000/-. தானியம் ஒரு கிலோ அரைப்பதற்கான கட்டணம் ரூபா 8/- மிளகாய் ஒரு கிலோ அரைப்பதற்கான கட்டணம் ரூபா 12/- நாளொன்றுக்கு ஒருவர் இப்பொறிமூலம் 20-30 கிலோ வரை அரைக்கலாம். |
| குறிப்பு | காணி, கட்டடம் ஆகியவற்றின் பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. அரைப்பதற்காகப் பொருட்கள் வராத காலங்களில் முயற்சியாளர் தாமே பொருட்களைக் கொள்வனவு செய்து அரைத்து பொதி செய்து சந்தைப்படுத்தலாம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவகை பொதிசெய்தல்

**அறிமுகம்** அரிசிமா, உழுந்துமா, குரக்கன்மா, கடலைமா, பனை ஒடியல்மா ஆகியவற்றைப் பொதிசெய்து சந்தைப்படுத்தலாம். தானியங்கள் விரைவில் உழுத்துப்போகும் தன்மையுடையவை. இவற்றை அரைத்து மாவாக்கி, பதப்படுத்தி, பொதி செய்து வைப்பதன்மூலம் நீண்ட காலத்துக்குப்பயன் படுத்தலாம். அறுவடை காலங்களில் தானியங்களைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்த வேண்டும். தானியங்கள் விலையேறும் காலத்தில் இவற்றை அரைத்துப் பதப்படுத்தி, பொதி செய்து விற்பதன் மூலம் பெருமளவு வருமானத்தைப் பெறலாம்.

**சந்தைவாய்ப்பு** பொதிசெய்யப்பட்ட மாவகைகளுக்கு நல்ல சந்தை வாய்ப்பு உண்டு. நாட்டிலேற்பட்டுவரும் அபிவிருத்தி காரணமாகவும், நகரப்புறங்களில் பெரும்பான்மையினர் தொழிலுக்குச் செல்வதாலும் உடன் உணவு தயாரிக்கக் கூடிய மாவகைகளுக்குப் பெருங் கிராக்கி நிலவுகின்றது. தனிப்பட்டவர்கள் தானியங்களை மாவாக இடித்தெடுத்து உணவுப் பதார்த்தமாகத் தயாரிப்பதற்கான கால அவகாசமின்மையால் பொதி செய்யப்பட்ட மாவகைகள் பெரிதும் வரவேற்கப்படுகின்றன.

**தொழில்நுட்பம்** இத் தொழிலைப் பொறுத்தவரை தொழில்நுட்பம் எனப் பெரிதாகக் குறிப்பிடுவதற்கு ஏதுமில்லை. ஆயினும் பொதி செய்யப்படும் மா நன்கு பதப்படுத்தப்பட்டிருப்பதை உறுதி செய்தல்வேண்டும்.இல்லையெனில் மா விரைவில்பழுதடைந்து விடுவதுடன் சந்தை வாய்ப்பையும் இழந்துவிடும். மா சிந்தாத வகையில் பொதிசெய்தல் முக்கியமானதாகும்.

**மூலப்பொருட்கள்** தானியங்கள், கிழங்குவகைகள்.

**உபகரணங்கள்** அரைக்கும் இயந்திரம் அல்லது மனிதவளம், விற்தராசு, பொலித்தீன், பொலித்தீன்சீலர்.

**முதலீடு** உபகரணங்கள் - ரூபா 18,000/-
மூலப்பொருட்கள் - ரூபா 16,000/-

**மாதவருமானம்** ரூபா 3,000/-

**குறிப்பு** காணி, கட்டடம் ஆகியவற்றின் பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. இதனை வீட்டில் இருந்தவாறே ஓர் உபதொழிலாக மேற்கொள்ளலாம். மனித வளத்தைப் பயன்படுத்துவதன் மூலம் அதிக வருமானத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவினால் தின்பண்டங்கள் தயாரித்தல்

| | |
|---|---|
| அறிமுகம் | எமது நாட்டு மக்களின் உணவு வகைகளில் மாவினால் தயாரிக்கப்படும் தின்பண்டங்கள் முக்கிய இடத்தினை வகிக்கின்றன. பாண், பணிஸ், கேக், பற்றீஸ், கட்லெட், மோதகம், வடை, சுசியம் போன்ற பல்வேறு உணவுப்பண்டங்களைத் தயாரித்து விற்பனை செய்வதன் மூலம் பெருமளவு வருமானத்தைப்பெறலாம். |
| சந்தைவாய்ப்பு | உணவுச்சாலைகள், பாடசாலைகள், அலுவலகங்கள், கோயில்கள், ஆகிய இடங்களிலும், பொதுமக்கள் போக்குவரத்துச் சாதனங்களிலும், கொண்டாட்டங்களின் போதும் இவற்றுக்கான சந்தைவாய்ப்பு பெருமளவு காணப்படுகின்றது. |
| தொழில்நுட்பம் | குறுகிய காலப்பயிற்சியுடன் இத்தொழிலை ஆரம்பிக்கலாம். ஒவ்வொருவகையான தின்பண்டத்தையும் செய்வது பற்றிய அறிவு இன்றியமையாதது. துணைக்கு ஓரிருவரைச் சேர்த்துக் கொள்ளலாம். வீட்டிலிருந்தபடியே இதனை ஓர் உப தொழிலாகவும் மேற்கொள்ளலாம். பிராந்திய கைத்தொழில் அபிவிருத்திச்சபை, சிறுகைத்தொழில் திணைக்கள அலுவலகம், தனியார் தின்பண்டத் தயாரிப்பு நிலையங்களில் வேண்டிய பயிற்சியைப் பெற்றுக்கொள்ளலாம். |
| மூலப்பொருட்கள் | மா, சீனி, ஈஸ்ற் (தயாரிக்கப்படும் உணவு வகைகளுக்கேற்ப மூலப் பொருட்கள் வேறுபடும்) |
| உபகரணங்கள் | அவண் (சிறிய போறணை அடுப்பு), உணவு வகைகளைச் சூடாக வைத்துக்கொள்ளும் உபகரணம், கண்ணாடி அலுமாரி, மேசை, மரத்தாலான ரோலர், கத்தி (சிறியது), வெட்டி, பிரஷ், சுழற்றும் கருவி, உணவை எடுக்கும் கருவி, ஏனைய பாத்திரங்கள். |
| முதலீடு | உபகரணங்கள் ரூபா 20,000/-<br>மூலப்பொருட்கள் ரூபா 15,000/- |
| மாதவருமானம் | ரூபா 3,000/- |
| குறிப்பு | காணி, கட்டடம் போன்றவற்றுக்கான பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.<br>உணவுச்சாலை நடத்துநர்கள், கொண்டாட்ட ஒழுங்குபடுத்துநர்கள் ஆகியோருடன் தொடர்புகொள்வதன் மூலம் உற்பத்தியை அதிகரித்து அதிக வருமானத்தையும் பெற்றுக் கொள்ளலாம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போசாக்கு உணவுப்பொதி தயாரித்தல்

| | |
|---|---|
| அறிமுகம் | வளர்முக நாடுகளில் உள்ள பொதுவான ஒரு பிரச்சினை போசாக்கின்மையாகும். போசாக்கைத் தரக்கூடிய உணவு வகைகளை எமது சூழலில் பெறக்கூடியதாக இருந்தும் அவற்றை நாம் உரியமுறையில் பயன்படுத்துவதில்லை. உழுந்து, பயறு, சோயா அவரை ஆகியவற்றைக்கொண்டு தரம் வாய்ந்த போசாக்கு உணவைத்தயாரிக்க முடியும். இவ்வுணவை சிறுவர்முதல் முதியோர்வரை பயன்படுத்தலாம். |
| சந்தைவாய்ப்பு | வடக்கு - கிழக்கு மாகாணத்தில் போசாக்கு உணவுக்கான தானியவகை பெருமளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இம் மாகாணத்தில் மட்டுமன்றி பிறமாகாணங்களிலும் இவ்வுணவுவகைக்குப் பெரும் கிராக்கி உண்டு. இவ்வுணவு வகையை வீடுகளில் இலகுவாகப் பயன்படுத்தலாமாகையால் குடும்பப்பெண்கள் இதனைப் பெரிதும் விரும்புகின்றனர். |
| தொழில்நுட்பம் | தொழில்நுட்பம் மிக இலகுவானது. சொற்பநாள் பயிற்சியுடன் அல்லது அனுபவத்துடன் இத்தொழிலை ஆரம்பிக்கலாம். உழுந்து, பயறு, சோயா அவரை ஆகியவற்றைச் சமஅளவில் (உழுந்தைச் சற்று அதிகமாக சேர்க்கலாம்) தனித்தனியே வறுத்தெடுக்கவேண்டும். பின் இவற்றை ஒன்றாகக்கலந்து அரைத்து பொதிசெய்தல் வேண்டும். |
| மூலப்பொருட்கள் | உழுந்து, பயறு, சோயா. |
| உபகரணங்கள் | அரைக்கும் திருகை, வறுப்பதற்கான தாச்சி, தராசு, பொதி செய்வதற்கான பொலித்தீன். |
| முதலீடு | ரூபா 5,000/- |
| வருமானம் | ½கிலோ பொதியின் விலை ரூபா 30/- — 35/- ஆகும்.<br>நாளொன்றிற்குக் குறைந்தது 5 கிலோ அரைக்கலாம்.<br>நாளொன்றுக்கான வருமானம் ரூபா 300/- — 350/- ஆகும். |
| குறிப்பு | வீடுகளில் ஓர் உபதொழிலாகவே இதனைச் செய்யமுடியும். காணி, கட்டடத்தின் பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.<br>உழுந்து, பயறு, சோயா ஆகியவை அறுவடைசெய்யப்படும் காலங்களில் இவற்றின் விலை குறைவாக இருக்கும். இக்காலங்களில் இவற்றைக் கொள்வனவு செய்து பேணிப்பாதுகாத்துவைத்துப் பின்னர் உற்பத்தியின் பொருட்டு பயன்படுத்தலாம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிப்புக்கள், ரொபிகள் தயாரித்தல்

| | |
|---|---|
| அறிமுகம் | எல்லா வயதினராலும் விரும்பி உண்ணப்படும் பண்டங்களின் உற்பத்தியோடு சம்பந்தப்பட்டது இத்தொழில். எனவே எல்லோராலும் இத்தொழில் விரும்பி வரவேற்கப்படும் ஒன்றாகும். மிகச் சிறிதாக ஆரம்பித்து மிக விரைவாகவும் பெரிதாகவும் வளர்ச்சியடையும் இயல்புடையது இத்தொழில். மிகச் சொற்ப முதலீட்டுடன் பெருமளவு இலாபத்தையும் இத்தொழில் பெற்றுத் தருகின்றது. எனவே தயக்கமின்றி இத்தொழிலில் ஈடுபடலாம். |
| சந்தைவாய்ப்பு | என்றும் வீழ்ச்சியுறாத பரந்த சந்தைவாய்ப்பு உண்டு. வரட்சிக் காலங்களில் இனிப்பு, ரொபிகளுக்கான கிராக்கி அதிகமுண்டு. இந்தக் காலத்தில் உற்பத்தியை அதிகரிக்கமுடியும். |
| தொழில்நுட்பம் | சொற்பகால பயிற்சி, அனுபவத்துடன் தொழிலை ஆரம்பிக்கலாம். காலஞ்செல்லச் செல்ல தொழில்நுட்பங்களை மாற்றுவதன் மூலம் பண்டங்களின் தரத்தையும் உற்பத்தியையும் உயர்த்தலாம். தொழில்நுட்பம் மிக இலகுவானது. பயிற்சி பெறவிரும்புவோர் பிராந்தியக் கைத்தொழில் அபிவிருத்திச் சபை, சிறுகைத்தொழில் திணைக்கள அலுவலகங்கள் மூலம் பெற்றுக்கொள்ளலாம். |
| மூலப்பொருட்கள் | சீனி, திரவ குளுக்கோஸ், எசென்ஸ், கலரிங் பவுடர் |
| உபகரணங்கள் | அலுமினியப் பாத்திரங்கள் (16 - கேஜ்), மரஅகப்பை, மரமேசை (மேற்பகுதி 3 நால் இரும்புத் தகடு கொண்டது)<br>மரமேசை (மேற்பக்கம் கல்வனைட் தகடு கொண்டது)<br>ரொபி இனிப்பு வெட்டும் பொறி, தின்பண்ட வெப்பமானி, பொலித்தீன்சீலர், கத்தரிக்கோல், மரமேசை, ரொபி சுற்றும் கடதாசி. |
| முதலீடு | ரூபா 25,000/- |
| மாதவருமானம் | ரூபா 6,250/- |
| குறிப்பு | காணி, கட்டடத்தின் பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. வீட்டின் ஒரு பகுதியிலேயே இத்தொழிலை நடத்தலாம். முதலீட்டை அதிகரிப்பின் ஓர் இடத்தை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு இத்தொழிலை விரிவுபடுத்தலாம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தக்காளிக்குழம்பு தயாரித்தல்

## (TOMATO SAUCE)

| | |
|---|---|
| அறிமுகம் | வடக்கு-கிழக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயே பெருமளவு தக்காளி பயிரிடப்படுகின்றது. பெப்ரவரி, மார்ச், ஆகஸ்ட் மாதங்களில் தக்காளி அறுவடை செய்யப்படுகின்றது. இக்காலங்களில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இவை மிக மலிவாகக்கிடைக்கின்றன. இக்காலத்தில் தக்காளிக் குழம்பு தயாரிக்கும் தொழிலை மேற்கொள்ளலாம். வீடுகளில் ஓர் உபதொழிலாகவும் இதனை மேற்கொள்ள முடியும். |
| சந்தைவாய்ப்பு | நகரப்புறங்களிலுள்ள நடுத்தர வகுப்பு மக்கள் தக்காளிக் குழம்பைப் பெருமளவில் பயன்படுத்துகின்றனர். பெரிய நடுத்தர ஹோட்டல்கள், வாடிவீடுகள், உணவு விடுதிகளில் தக்காளிக்குழம்பிற்கான கிராக்கி அதிகம் உண்டு. தக்காளிக் குழம்பின் உற்பத்தியில் கணிசமான பகுதி உள்ளூரில் பயன்படுத்தப்படுவதுடன் ஒரு பகுதி வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. எனவே இதற்கு நிலையான சந்தைவாய்ப்பு உண்டு. |
| தொழில்நுட்பம் | தொழில்நுட்பம் இலகுவானது. இத்துறையில் சொற்ப காலப் பயிற்சியுடன் தொழிலை ஆரம்பிக்கலாம். தொழில்நுட்பத் தரத்திற்கேற்ப பொருளுக்கான கிராக்கி அதிகரிக்குமாகையால் தொழில்நுட்பத் திறனை வளர்த்துக்கொள்வது அவசியமாகும். |
| மூலப்பொருட்கள் | தக்காளிப்பழம், சீனி, வினாகிரி, வெள்ளைப்பூடு, இஞ்சி, மிளகாய்த்தூள், உப்பு. |
| உபகரணங்கள் | ஆர்,ஓ,பி,பி சீலிவ் மெஷின் 01, பெரிய சோர்ஸ்பான்கள் 02, வடி 01, வாயு அடுப்பும் வாயு சிலிண்டரும் (சாதாரண அடுப்பும் பயன்படுத்தலாம்) கரண்டிகள் 05, துப்பரவு செய்யப்பட்ட போத்தல்கள். |
| முதலீடு | உபகரணங்கள் ரூபா 16,000/-<br>மூலப்பொருட்கள் ரூபா 5,000/- |
| மாதவருமானம் | ரூபா 3,500/- |
| குறிப்பு | காணி, கட்டடம் ஆகியவற்றின் பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.<br>அறுவடைக்காலங்களில் தக்காளி மிக மலிவாகக்கிடைக்குமாகையால் இக்காலத்தில் உற்பத்தியை அதிகரித்து களஞ்சியப் படுத்தலாம். விலை உயரும் காலத்தில் இவற்றைச் சந்தைப் படுத்தலாம். தக்காளி கிடைக்காத காலங்களில் மிளகாய், சோயா அவரை, பூசனி, கோவா, வெங்காயம், கரட் ஆகிய மரக்கறிகளிலிருந்தும் குழம்பு தயாரிக்கப்படலாம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தக்காளிக்குழம்பு செய்முறை

நன்கு பழுத்த தக்காளிப்பழங்களைத் தெரிந்தெடுத்து கழுவிச் சுத்தம் செய்தல் வேண்டும். இவற்றைப் பாத்திரம் ஒன்றில் இட்டு 5 நிமிடங்கள் சூடாக்க தல் வேண்டும். பின்னர் பழங்களின் மேல்தோலை உரித்தெடுத்து அவற்றைப் பிசைதல் வேண்டும். இதனைப் பின்னர் பிளாஸ்ரிக் வடியினால் வடித்து விதைகளை வேறாக்க வேண்டும்.

எடுக்கப்பட்ட சாறு கொதிக்கவைக்கப்படுகையில் சீனி, வினாகிரி ஆகியனவும் இஞ்சி, கறுவா, உள்ளி, கராம்பு ஆகியவற்றின் தூளும் சேர்க்கப்பட வேண்டும். கலவை களிம்பாக வரும்போது அதனை அளவான போத்தல்களில் வார்த்து இறுக மூடி சீல் வைத்தல் வேண்டும்.

## தக்காளிக் குழம்பு செய்முறை அட்டவணை

தக்காளிப்பழங்கள்

↓

கழுவுதல்

↓

5 நிமிடங்கள் சூடாக்கல்

↓

மேற்தோலை உரித்தெடுத்தல்

↓

பிசைந்தெடுத்தல்

↓

வடித்து விதையை அகற்றல்

↓

சூடாக்கல்

↓

சீனி → கலத்தல் ← { வினாகிரி / வாசனைச்சரக்குகள் }

↓

களிம்பாகும் வரை கொதிக்கவைத்தல்

↓

போத்தல்களில் ஊற்றுதல்

↓

சீல் வைத்தல்

↓

களஞ்சியப்படுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகட் தயாரித்தல்

| | |
|---|---|
| அறிமுகம் | பெருமளவில் மாடுகள் வளர்க்கப்படும் வன்னிப்பிரதேசத்தில் பெறப்படும் பசுப்பால் போதிய சந்தைவாய்ப்பின்மையால் வீணாகிப் போகின்றது. இப்பாலை யோகட்டாக தயாரிப்ப தன் மூலம் 6 நாட்களுக்கு பழுதடையாது வைத்திருக்க முடியும். யோகட் செய்வதற்கு இயந்திர சாதனங்களோ உபகரணங்களோ பெருமளவில் தேவைப்படுவதில்லை. மூலதனமும் மிகக் குறைவே ஆகும். குடிசைக் கைத்தொழிலாக இதனை மேற்கொள்ளலாம். |
| சந்தைவாய்ப்பு | சனச்செறிவு அற்ற பிரதேசங்களில் கிடைக்கும் பாலை யோகட்டாக தயாரித்து சனச்செறிவுள்ள நகரப்பகுதிகளில் சந்தைப்படுத்தலாம். இது சத்து மிக்க உணவாகையால் இதற்கான கிராக்கி நிறைய உண்டு. வரட்சிக்காலங்களில் பெருமளவில் யோகட்டினை சந்தைப்படுத்த முடியும். |
| தொழில்நுட்பம் | செய்முறை பற்றிய அறிவுடன் இத்தொழிலை ஆரம்பிக்கலாம். காலம் செல்லச் செல்ல தொழில்நுட்பத் தேர்ச்சி கிடைக்கும். இதன் மூலம் யோகட்டின் தரத்தை உயர்த்தி விற்பனையை அதிகரிக்கலாம். தொழில்நுட்பம் பற்றிய தகவல்களை பிராந்தியக் கைத்தொழில் அபிவிருத்திச் சபை, மாவட்ட சிறு கைத்தொழில் திணைக்கள அலுவலகம், இலங்கைப் பாற்சபை ஆகியவற்றில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். |
| மூலப்பொருட்கள் | பசுப்பால், சீனி, செலற்றின், வனிலா, நிறக்கலவை, யோகட் கல்ச்சர் ஆகியன. |
| உபகரணங்கள் | குளிர்சாதனப் பெட்டி, பிளாஸ்ரிக்பேசின்கள், யோகட்கப். |
| முதலீடு | ரூபா 25,000/- |
| மாதவருமானம் | ரூபா 3,500/- |
| குறிப்பு | காணி, கட்டடங்களின் பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. குளிர்சாதனப் பெட்டி ஒன்றைப் பயன்படுத்துவதன் மூலம் உற்பத்தி அளவைப் பெருக்கிக்கொள்ளலாம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோகட் செய்முறை

செலற்றினை சிறிதளவு சுடுநீரில் கரைக்க வேண்டும். பிரமாணத்திற்கேற்ப சீனியை பாலுடன் கரைக்க வேண்டும். இக் கரைசலுடன் தண்ணீரில் கலந்த செலற்றினை நன்றாகக் கலக்க வேண்டும். இக் கரைசலைக் கொதிக்கவைத்து 42° சென்றிகிறேட் வரை ஆறவைக்க வேண்டும். கல்ச்சர், நிறக்கலவை, வனிலா ஆகியவற்றைப் பாற்கரைசலுடன் சேர்த்து நன்றாகக் கலந்து யோகட் கப்பு களில் ஊற்ற வேண்டும். 5-7 மணித்தியாலங்களுக்கு அறை வெப்ப நிலையில் கட்டிபடவிட்ட பின் குளிர்சாதனப் பெட்டியில் வைக்க வேண்டும். பின் சந்தைப் படுத்தலாம்.

**பிரமாணங்கள்**

| | | |
|---|---|---|
| பசுப்பால் | - | 3 பைந்து |
| சீனி | - | $\frac{1}{4}$ கி. கி. |
| செலற்றின் | - | 0. 5 அவுன்ஸ் |
| வனிலா | - | தேவைக்கேற்றளவு |

நிறக்கலவை (மெல்லியமஞ்சள்) - சேர்க்கவும்.
யோகட் கல்ச்சர்
இப்பிரமாணங்களுக்கேற்ப தயாரிக்கும் போது 25-30 கோப்பை யோகட் பெறலாம்.

**குறிப்பு**

1. சீனியின் அளவைத்தேவையான அளவுக்குக் கூட்டிக் குறைக் கலாம்.
2. செலற்றீனின் அளவைக் கூட்டி, அல்லது ஆடை நீக்கிய பால் சேர்த்து யோகட்டை கட்டிபட வைக்கலாம்.
3. அறை வெப்பநிலையில் கட்டியாகிய யோகட்டை குளிர் சாதனப் பெட்டியில் வைக்காவிட்டால் தண்ணீர் பிரிந்து விடும். அத்துடன் யோகட் சிறிது சிறிதாகப் புளிப்புத் தன்மையடைந்துவிடும்.
4. பாற் கரைசலை கோப்பைக்குள் ஊற்றியபின் 42° சென்றி கிறேட் வெப்பநிலையில் வைத்திருந்தால் 1 மணித்தி யாலத்திலும் குறைவான நேரத்தில் கட்டியாகும்.

**சுவையூட்டல்**

1. சுவையூட்டப்படாத யோகட்:- இதற்கு எந்தவிதமான சுவைப் பதார்த்தமும் சேர்க்கப்படுவதில்லை.
2. சுவையூட்டிய யோகட்:- துரோபரி, வனிலா, செரிப்பழம் ஆகியவற்றின் சுவைப் பதார்த்தங்களைக் கலந்து தயாரிக்கலாம்.
3. பழயோகட்:- அன்னாசி, வாழைப்பழம் ஆகிய பழங் களைச் சிறு துண்டுகளாக வெட்டி யோகட்டுடன் சேர்க் கலாம்.
4. மரக்கறியோகட்:- கரட், செலரிக்கீரை, பச்சைமிளகாய் ஆகியவற்றைச் சேர்த்துக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜாம் தயாரித்தல்

**அறிமுகம்** — இலங்கையில் மாம்பழம், தோடம்பழம், வாழைப்பழம், அன்னாசிப்பழம், கொடித்தோடைப்பழம், விளாம்பழம், பப்பாசிப்பழம், ஜெலிப்பழம் ஆகியன தேவையான அளவு கிடைக்கின்றன. குறிப்பாக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பழ அறுவடை காலங்களில் பெருமளவு உற்பத்தி காரணமாக இவற்றைச் சந்தைப்படுத்துவதே சிரமமாக உள்ளது. எனவே இப்பழங்களைக்கொண்டு ஜாம் தயாரிப்பது மிகுந்த இலாபம் உடையதாகக் காணப்படுகின்றது. இதனை வீடுகளில் ஓர் உபதொழிலாகவும், தொழிலாளர்கள் பலரைச் சேர்த்து சிறு கைத்தொழிலாகவும் மேற்கொள்ள முடியும்.

**சந்தைவாய்ப்பு** — மிக ஏழ்மையான நிலையிலுள்ள மக்களைத்தவிர பெரும்பான்மையோர் ஜாமை உணவுப்பொருளாகப் பயன்படுத்துகின்றனர். இதனை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய வாய்ப்புகளும் உண்டு. ஹொங்ஹொங், சீனா, தாய்லாந்து, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா, நெதர்லாந்து, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கநாடுகள் இலங்கையின் பழவகைகளை இறக்குமதி செய்கின்றன. இந் நாடுகளுக்கு இவற்றைப் பழமாகவும் பழச்சாறாகவும், ஜாமாகவும் ஏற்றுமதி செய்ய முடிவதால் நிலையான சந்தைவாய்ப்புண்டு.

**தொழில்நுட்பம்** — தொழில்நுட்பம் இலகுவானதாயினும் இத்துறையில் மிகுந்த அவதானம் அவசியமாகிறது. தொழில்நுட்பத்தைப் பொறுத்தே ஜாமின் தரமும், சந்தைவாய்ப்பும் நிர்ணயிக்கப்படுகின்றதாகையால் தொழில்நுட்பத் தேர்ச்சி மிக அவசியமாகின்றது. கைத்தொழில் அபிவிருத்திச்சபை, சந்தைப்படுத்தற் திணைக்களம் ஆகியவற்றிலிருந்து வேண்டிய தொழில்நுட்ப ஆலோசனைகளைப்பெறலாம்.

**மூலப்பொருட்கள்** — பழங்கள், சிற்றிக்கமிலம், சீனி, பெக்ரின் கலவை.

**உபகரணங்கள்** — பழம் வெட்டும் கருவி, ஜாம்போத்தல், சீலர், தராசு, வாயு அடுப்பு / சாதாரண அடுப்பு, வெப்பமானி, துருப்பிடிக்காத உருக்குப்பாத்திரங்கள், கத்தி, பிளாஸ்ரிக் வாளிகள், ஜக்குகள், மேசை ஒன்று, போத்தல்கள்.

**முதலீடு** — ரூபா 25,000/-

**மாதவருமானம்** — ரூபா 5,000/-

**குறிப்பு** — காணி, கட்டடம் ஆகியவற்றின் பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. பழ அறுவடைக் காலத்தில் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் கூடிய இலாபத்தைப்பெறலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜாம் செய்முறை

விரும்பிய பழங்களை (மாம்பழம், அன்னாசிப்பழம், பப்பாசிப்பழம், விளாம் பழம், கொடித்தோடைப்பழம்) நன்கு கழுவிச் சுத்தம்செய்தல் வேண்டும். பழங்களிலுள்ள தூசிகள், இலைகள், காம்புகள், தண்டுகள் அகற்றப்பட வேண்டும். பின்னர் பழத்தின் தடித்ததோலும், விதைகளும் அகற்றப்பட வேண்டும். தோலும், விதையும் அகற்றப்பட்ட பழங்களை பசையாக்கும் இயந்திரத்திலிட்டு கூழாக்குதல் வேண்டும். துருப்பிடிக்காத பாத்திரத்தில் இக் கூழை இட்டு சூடாக்கவேண்டும். இச் சந்தர்ப்பத்தில் சிற்றிக்கமிலம் கலக்கப் படவேண்டும். பின்னர் சீனியும் பெக்ரிக் கலவையும் இதனுடன் சேர்க்கப் படவேண்டும். 104°—105° செ.கி. வரை இதனைச் சூடாக்கவேண்டும். பதம் சரி யாக வந்ததும் சூடாக இருக்கும்போதே இதனைத் துப்பரவான போத்தல் களில் ஊற்றி சீல் வைத்தல்வேண்டும்.

## ஜாம் செய்முறை அட்டவணை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்ஷ்மெலோ தயாரித்தல்

| | |
|---|---|
| அறிமுகம் | எல்லோரும் விரும்பி உண்ணும் இனிப்புப் பண்டங்களுள் மார்ஷ்மெலோ முக்கியமானதாகும். அதிக முதலீடும் அதிக சிரமமுமின்றி இதனை வீடுகளிலேயே தயாரிக்க முடியும். ஓர் உபதொழிலாக இதனைச் செய்வதன் மூலம் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளலாம். |
| சந்தைவாய்ப்பு | சிறியோர் முதல் முதியோர்வரை இதனை விரும்பி உண்கின் றனர். பண்டிகைக்காலங்களில் இதற்கான கிராக்கி மிக அதிகம். பொதுச் சந்தைகள், கடைகள், போக்குவரத்து நிலையங்களில் பெருமளவு சந்தைப்படுத்தும் வாய்ப்புண்டு. |
| தொழில்நுட்பம் | தொழில்நுட்பம் மிக இலகுவானது, சிரமமற்றதுமாகும். ஆரம் பப் பயிற்சியைப் பெற்றுக் கொண்டு இத் தொழிலை ஆரம்பிக் கலாம். இலகுவான தொழிலாகையால் பெண்கள் இத்தொழி லில் ஈடுபடலாம். கைத்தொழில் அபிவிருத்திச் சபை, சிறு கைத்தொழில் அலுவலகங்கள் மூலம் வேண்டிய பயிற்சியைப் பெற்றுக்கொள்ளலாம். |
| மூலப்பொருட்கள் | சீனி, திரவக் குளுக்கோஸ், ஜெலட்டீன், கோர்ன் பிளவர், எசென்ஸ், கலரிங். |
| உபகரணங்கள் | தின்பண்ட வெப்பமானி, வாயு அடுப்பு, வாயு சிலிண்டர், அலுமினியப் பாத்திரம், மரஅகப்பை, சமையலறைத் தராசு, கையடக்க மின்சார பீட்டர், 20 தகர தட்டுகள் 9''×9'' 30 முட்டைப் பெட்டிகள் (பிளாஸ்ரிக்), சமையலறைக்கத்தி, பொலித்தீன்சீலர். |
| முதலீடு | உபகரணங்களுக்கும் மூலப்பொருட்களுக்கும் ரூபா 16,000/- |
| மாதவருமானம் | ரூபா 4000/- |
| குறிப்பு | வீட்டின் ஒரு பகுதியிலேயே செய்யக்கூடிய தொழிலாகையால் காணி, கட்டடம் ஆகியவற்றின் பெறுமதி முதலீட்டில் சேர்த் துக் கொள்ளப்படவில்லை. துணைக்கு ஓரிருவரைச் சேர்த்துக் கொள்வதன்மூலம் அதிக உற்பத்தியைச் செய்து அதிக இலா பத்தைப் பெறலாம். நகரப்புறங்களில் அல்லது சுற்றாடலில் உள்ள கடைகளுக்கு விநியோகம் செய்யலாம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்ஷ்மெலோ செய்முறை

தேவையான பொருட்கள்:-

| | | |
|---|---|---|
| ஜெலற்றீன் | - | 30 கிறாம் |
| சீனி | - | 450 கிறாம் |
| தண்ணீர் | - | 02 கப் |
| கோர்ன் பிளவர் | | |
| எசென்ஸ் | | |
| கலர் | | |

ஜெலற்றீனை ஒரு கப் தண்ணீர்விட்டு கலக்கி வைக்கவேண்டும். பாத்திரமொன்றில் ஒரு கப் தண்ணீரில் குறைந்தளவு சீனியையும் இட்டு அடுப்பிலேற்றிச் சூடாக்கவேண்டும். 10-15 நிமிடங்களின் பின்னர் சீனிப்பாகை அடுப்பிலிருந்து இறக்கி கலந்து வைத்த ஜெலற்றீனை அதனுடன் சேர்க்க வேண்டும். வேண்டிய அளவு எசென்ஸ், கலர் ஆகியவற்றையும் சேர்க்க வேண்டும். பின்னர் இக் கலவையை மின்சார பீட்டரினால் நன்றாக நுரை வரும்வரை அடிக்க வேண்டும். அடித்த கலவையை நெய் தடவிய தட்டில் வார்த்த பின் எட்டு மணித்தியாலங்கள் உறைய வைத்தல் வேண்டும். பின்னர் சிறு சதுரங்களாக வெட்டி கோர்ன் பிளவரில் புரட்டி எடுத்து பொதி செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூடில்ஸ் தயாரித்தல்

**அறிமுகம்** அவசர உணவுப்பொருள் ஒன்றினைத் தயாரிப்பதற்கு நூடில்ஸ் உகந்ததாகும். நூடில்ஸ் உற்பத்தியை வீட்டிலிருந்தவாறே ஓர் உபதொழிலாகவும் மேற்கொள்ள முடியும். இயந்திர சாதனங்கள் அவசியமில்லையாகையால் மூலதனமும் மிகக் குறைவாகவே தேவைப்படுகிறது. அதிக உடலுழைப்பின்றிச் செய்யக்கூடிய தொழிலாகையால் பெண்களும் இத்தொழிலில் ஈடுபடலாம்.

**சந்தைவாய்ப்பு** நகரப்புறங்களில் இதற்கான சந்தைவாய்ப்பு அதிகமுண்டு. விரைவாக உணவுப்பொருட்களைத் தயாரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் நகரப்புறத்தில் தொழில்புரிவோருக்கு உண்டு. எனவே நகரப்புற மக்கள் இதனை விரும்பி வாங்குகின்றனர். இதனைத் தயாரித்துப் பொதிசெய்து நகரப்புறக் கடைகளுக்கு விநியோகிப்பதன் மூலம் சந்தை வாய்ப்பைப் பெருக்கிக் கொள்ளலாம்.

**தொழில்நுட்பம்** தொழில்நுட்பம் இலகுவானது. ஆரம்ப அறிவும் அனுபவமும் இத்தொழிலுக்கு அவசியமானவை. செய்யும் பொருளின் தரத்திலே விற்பனை தங்கியிருப்பதால் அதன் தரம், சுவை பற்றிய தொழில்நுட்ப அறிவு அவசியமாகிறது. கைத்தொழில் அபிவிருத்திச்சபை, சிறுகைத்தொழில் அலுவலகங்கள் மூலம் வேண்டிய பயிற்சியைப் பெற்றுக்கொள்ளலாம்.

**மூலப்பொருட்கள்** கோதுமைமா, உப்பு

**உபகரணங்கள்** நூடில்ஸ் தயாரிக்கும் பொறி, ஸ்ரீமர், உலர்த்தும் கருவி, மேசை 2'×4', சமையலறைத்தராசு, மரக்கோல்களும் மென்கயிறும், பொலித்தீன் சீலர், கத்தி.

**முதலீடு** உபகரணங்களுக்கும், மூலப்பொருட்களுக்கும் ரூபா 17,000/-

**மாதவருமானம்** ரூபா 4,250/-

**குறிப்பு** காணி, கட்டடத்தின் பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. உற்பத்தியை அதிகரிக்கும் போது கட்டடம் ஒன்றை வாடகைக்கு அமர்த்தித் தொழிலைக் கொண்டுநடத்தலாம். மழைகாலங்களில் நூடில்ஸ்சுக்கான கேள்வி (கிராக்கி) அதிகரிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூடில்ஸ் செய்முறை

தேவையான பொருட்கள்

| | | |
|---|---|---|
| கோதுமைமா | - | 1 கிலோ |
| முட்டை | - | 3 |
| உப்பு | - | ½ தே. கரண்டி |

மாவை அரிதட்டிலிட்டு நன்கு அரித்தெடுக்கவேண்டும். இதனை மேசைமீது பரவி நடுவில் குழியிடவேண்டும். முட்டைகளை உடைத்து குழியினுள் ஊற்ற வேண்டும். உப்பையும் இதனுடன் சேர்த்துக்கொள்ள வேண்டும். பின்னர் தேவைப்படுமிடத்து சிறிது நீர்சேர்த்து மெதுமையாக வரும்வரை நன்றாகப் பிசைதல் வேண்டும். பின்னர் நூடில்ஸ் தயாரிக்கும் பொறியில் இட்டு இடியப்பம் பிழிவது போல பிழிய வேண்டும். பிழியும்போது நீளமாகவோ அல்லது வட்டமாகவோ பிழியலாம். பின்னர் உலர்த்தும் கருவியினால் உலர்த்தியபின் பொதி செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பப்படம் (அப்பளம்) தயாரித்தல்

| | |
|---|---|
| அறிமுகம் | உள்நாட்டு விளை பொருளான உழுந்தை மூலப்பொருளாகக் கொண்டு பப்படம் தயாரிக்கப்படுகின்றது. இதனை வீட்டின் ஒரு பகுதியில் வைத்து ஓர் உபதொழிலாகவும் செய்யலாம். எமது நாட்டு மக்கள் தமது உணவுக்குச் சுவை சேர்ப்பதற்காகப் பப்படத்தைப் பயன்படுத்துகின்றனர். |
| சந்தைவாய்ப்பு | பப்படத்தைத் தயாரித்து உணவுச்சாலைகளுக்கும், கடைகளுக்கும் வழங்கமுடியும். மக்களின் உணவு வகைகளுள் பப்படமும் ஒன்றாகையால் எப்போதும் இதற்கானசந்தைவாய்ப்புண்டு. விழாக்காலங்களிலும் கொண்டாட்டங்களின் போதும் இதற்கான கிராக்கி அதிகரிப்பதுண்டு. |
| தொழில்நுட்பம் | தொழில்நுட்பம் இலகுவானது. ஆரம்ப பயிற்சியைப் பெற்றுக்கொண்டு இத் தொழிலை ஆரம்பிக்கலாம். தொழில் நுட்பம் வளரவளர உற்பத்தித்தரமும், தொகையும் அதிகரிக்கும். பப்படத்தின் தரம் உழுந்துமாவையும் கோதுமைமாவையும் கலக்கும் விதத்தில் தங்கியிருப்பதால் கலவையைத் தயாரிப்பதில் அதிக கவனமெடுக்க வேண்டும். |
| மூலப்பொருட்கள் | உழுந்து, கோதுமைமா. |
| உபகரணங்கள் | மரப்பெட்டி (60 செ. மீ × 1 செ. மீ × 60 செ. மீ)<br>மேசை 2 மீ. × $2\frac{1}{2}$ மீ. (மரப்பலகை)<br>மரத்தடி (நீளம் 25 செ. மீ, விட்டம் $2\frac{1}{2}$ செ. மீ)<br>தராசு, பொலித்தீன்சீலர், அரிதட்டு |
| முதலீடு | உபகரணங்கள் ரூபா 12,500/-<br>மூலப்பொருட்கள் ரூபா 3,000/- |
| மாதவருமானம் | ரூபா 6,000/- |
| குறிப்பு | காணி, கட்டடம் ஆகியவற்றின் பெறுமதியோ வாடகையோ, முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.<br><br>உற்பத்தியை அதிகரிக்க விரும்பின் தொழிலாளர் தொகையை அதிகரிக்கலாம். உழுந்து, அறுவடைக்காலத்தில் மலிவான விலையில் கிடைக்குமாகையால் இக்காலத்தில் கொள்வனவு செய்து பேணிப்பாதுகாத்து வைத்து பின்னர் உற்பத்திக் காலத்தில் பயன்படுத்தலாம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பப்படம் செய்முறை

| | | |
|---|---|---|
| தேவையானபொருட்கள் | உழுந்து | — $\frac{1}{2}$ கி. கி |
| | பெருங்காயம் | — $\frac{1}{2}$ தேக்கரண்டி |
| | உப்பு | — 02 தேக்கரண்டி |
| | சீரகம் | — 01 தேக்கரண்டி |

உழுத்தம் பருப்பை இரண்டு மணி நேரம் நீரில் ஊறவைத்து பின்னர் நீரையும் கோதையும் களைதல் வேண்டும். இதனை வெயிலில் நன்கு காய வைத்து உலர்ந்த பின் சிறிது சிறிதாக இயந்திரத்தில் இட்டு அரைத்தெடுக்க வேண்டும். பின்னர் இதனுடன் சீரகம், உப்பு, பெருங்காயம் ஆகியவற்றையும் சேர்த்து நீர்விட்டு கெட்டியாகப் பிசைந்தெடுத்தல் வேண்டும். இந்த மாவை சிறிது எண்ணெய் தடவிய உரலில் இட்டு நன்றாக இடிக்க வேண்டும். இடித்த பின் மாவைச் சிறு சிறு உருண்டைகளாக உருட்டி எடுக்கவேண்டும். இவ்வுருண்டைகளை அழுத்தமான சிறிது மா தூவப்பட்ட பலகையில் இட்டு குளவியால் அப்பளமாக நசித்தெடுத்தல் வேண்டும். பின்னர் இவற்றை வெயிலில் நன்கு உலர்த்தி பொதிசெய்தல் வேண்டும்.

சுவையின் பொருட்டு சிறிது எள்ளும் சேர்த்துக்கொள்ளலாம்.

உற்பத்தித் தொகையை அதிகரிக்க விரும்புமிடத்து மேற்குறித்த மூலப் பொருட்களை விகிதாசாரத்திற்கேற்ப அதிகரித்துக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளிர்பானம் தயாரித்தல்

| | |
|---|---|
| அறிமுகம் | வருடத்தில் அதிக காலம் வெப்பமானதாகவே காணப்படு கின்றது. இக்காலப் பகுதியில் பழங்களைப் பயன் படுத்தி குளிர்பானம் தயாரித்து விற்பனை செய்வது மிக்க வருமானத் தைத் தரக்கூடிய தொழிலாகும். குளிர்பானம் அருந்துவதன் மூலம் உடலின் வெப்பநிலையையும் சமநிலையில் வைத்துக் கொள்ள முடியும். சிறப்பாக, பழவகைகள் மலிவாகக் கிடைக்கின்ற காலங்களில் அவற்றைக் கொள்வனவு செய்து சாறாக்கிவைத்து வேண்டிய காலங்களில் அவற்றைக் குளிர் பானமாகத் தயாரிப்பது அதிக இலாபத்தைத் தரக் கூடியதாகும். |
| சந்தைவாய்ப்பு | சனச்செறிவுள்ள நகரப்புறங்களில் குளிர்பானத்திற்கான சந்தைவாய்ப்பு அதிகம் உண்டு. நகரப்புற குளிர்பான விற்பனை நிலையங்கள், பஸ்தரிப்பு நிலையங்கள், பாட சாலைகள், கோயில்கள், படமாளிகைகள் போன்ற இடங் களில் இவற்றுக்கான கிராக்கி அதிகம் உண்டு. |
| தொழில்நுட்பம் | தொழில்நுட்பம் மிக இலகுவானதாகும். சொற்ப பயிற்சியு டன் தொழிலை ஆரம்பித்து நடத்தலாம். தொழில்நுட்ப அறிவு வளர்ச்சியடையும்போது குளிர்பானத்தின் தரத்தை உயர்த்துவதன் மூலம் விற்பனையை அதிகரிக்கலாம். |
| மூலப்பொருட்கள் | பல்வகைப் பழங்கள், சீனி, பழவாசனைத் திரவியம், இர சாயனப் பதார்த்தங்கள், ரின்பால், கசகசா, ஜெலி, குளிர்ந்தநீர். |
| உபகரணங்கள் | குளிர்சாதனப் பெட்டி, பழத்தைப் பிழிந்து சாறெடுக்கும் கருவி, பெரிய கிளாஸ் வகை, நீர் கொள்ளும் பாத்திரங்கள். |

முதலிடு

| | | |
|---|---|---|
| மூலப்பொருட்கள் | ரூபா | 10,950/- |
| உபகரணங்கள் | ரூபா | 32,000/- |
| மொத்தம் | | 42,950/- |

மாதவருமானம் ரூபா 7,000/-

குறிப்பு — காணி, கட்டடம், மின்சாரம் ஆகியவற்றின் பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. குளிர்சாதனப் பெட்டிகளைப் பயன் படுத்துவதன் மூலம் பழவகைகளையும், பழச் சாற்றையும் பழுதுபடாது பாது காக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாணிப்பனாட்டு தயாரித்தல்

| | |
|---|---|
| அறிமுகம் | வடக்கு-கிழக்கு மாகாணத்தின் வளங்களுள் பனையும் ஒன்று. பனையிலிருந்து பெறப்படும் பழத்திலிருந்து பனாட்டு தயாரிக்கப்படுகிறது. பனாட்டுக்குப் பனம்பாணியைச் சேர்ப்பதன் மூலம் அவ்வுணவுப்பொருளை நீண்டகாலத்துக்குப் பாதுகாக்க முடிகிறது. இவ்வுணவு ஊட்டச்சத்து மிக்க உணவாகும். பெருமளவு உற்பத்தி, முதலீட்டுச் செலவின்றியே இவ்வுணவுப் பண்டத்தைத் தயாரிக்க முடியும். |
| சந்தைவாய்ப்பு | பாணிப்பனாட்டு வடக்கு - கிழக்கு மாகாண மக்களால் மட்டுமன்றி நாட்டின் ஏனைய பகுதி மக்களாலும் விரும்பி உண்ணப்படுகின்றது. '' கற்பகம் '' விற்பனை நிலையங்களூடாகவோ, தனியார் கடைகள் மூலமாகவோ இதனைச் சந்தைப்படுத்தலாம். பொதுவாக இவ்வுணவுப்பொருளுக்குள்ள கிராக்கி உற்பத்தியை விட அதிகமாகவே காணப்படுகிறது. தரமான உணவாக இதனைத் தயாரிப்பின் வெளிநாட்டுச் சந்தைவாய்ப்பையும் '' கற்பகத்தின் '' ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும். எனவே இவ்வுணவுப் பண்டத்திற்கும் பெருமளவு சந்தைவாய்ப்புண்டு. |
| தொழில்நுட்பம் | தொழில்நுட்பம் மிக இலகுவானது. குறுகியகாலப் பயிற்சியும் அனுபவமும் இருந்தாலே போதுமானது. யாழ்ப்பாணத்தின் கிராமப்புறங்களில் பாணிப் பனாட்டு தயாரித்தல் ஓர் உபதொழிலாக அல்லது வீட்டுக்கடமைகளில் ஒன்று போலவே மேற்கொள்ளப்படுகின்றது. தொழில்நுட்ப ஆலோசனைகளுக்கு '' கற்பகம் '' விற்பனை நிலையங்களை அல்லது பனை அபிவிருத்திச் சபையை நாடலாம். |
| மூலப்பொருட்கள் | பனம்பழம், பனம்பாணி, வாசனைச்சரக்குகள் |
| உபகரணங்கள் | 8' × 4' × 5' அளவு கொண்ட மேடை / பந்தல், ஓலைப் பாய், விதைகளைப் பிசைவதற்கான பேசின், பனை ஓலைப் பெட்டி, களிவடிக்கும் துணி, சிறுகத்தி<br>சேமித்து வைப்பதற்கான கூடை / மண்பாத்திரம். |
| முதலீடு | மூலப்பொருட்கள் ரூபா 1,000/-<br>உபகரணங்கள் ரூபா 1,000/- |
| மாதவருமானம் | ஒரு தடவை உற்பத்தி செய்யப்படும் பனாட்டிலிருந்து பெறப்படும் வருமானம் ரூபா 3,000/- |
| குறிப்பு | காணி, கட்டடம் ஆகியவற்றின் பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. வீட்டிலுள்ள ஒரு சிறு இடத்திலேயே இத் தொழிலை மேற்கொள்ள முடியும். பனம் பழம் ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாதி மாதங்களிலேயே அதிகம் கிடைப்பதனால் இக்காலத்தில் மட்டுமே பனாட்டு உற்பத்தியை மேற்கொள்ளமுடியும். பனாட்டைப் பேணிவைத்துப் பின் பனம்பாணி கிடைக்கும் காலங்களில் அதனைப் பாணிப்பனாட்டாகத் தயாரிக்கலாம். பனம்பழம் கிடைக்கும் காலம் குறுகியதாகையால் உதவிக்குத் தொழிலாளர்களை வைப்பதன்மூலம் பெருமளவு பனாட்டை உற்பத்தி செய்யமுடியும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாணிப்பனாட்டு செய்முறை

### பந்தல் அமைத்தல்

பனாட்டு உற்பத்திக்கு மேடை அல்லது பந்தல் ஒன்று தேவைப்படுகின்றது. இது 8 அடி நீளம், 4 அடி அகலம், 5 அடி உயரம் உடையதாக பலமான தடிகளால் அமைக்கப்படும். தூசி, மணல் ஆகியன படியாத இடமாகவும் பூரண சூரிய ஒளி படக்கூடிய இடமாகவும் அது இருத்தல் வேண்டும். மேடை/பந்தலின் மேற்புறத்தில் இடப்படும் பாய் தொய்யாது இருக்கும் வகையில் பந்தலின்மேல் ''பரவுகள்'' இடப்படவேண்டும்.

### பனாட்டு தயாரித்தல்

நன்கு பழுத்த பனம்பழங்களைச் சேகரித்து (20-30) நன்கு கழுவி எடுத்தல் வேண்டும். புறத்தோலை அகற்றி விதைகளை ஒரு பெரிய பேசினிலோ பனை ஓலைக்கடகத்திலோ இடவேண்டும். பின்னர் நீரூற்றி விதைகளைப் பிசைதல் வேண்டும். தடிப்பானகளி உண்டாகும்வரை பிசைந்தபின் விதைகளை அகற்ற வேண்டும். பாத்திரத்தில் நிரம்பியிருக்கும் தடிப்பான களியை களிவடிக்கும் துணியால் வடித்து தும்பை அகற்றவேண்டும். இக்களியை மேடை அல்லது பந்தலில் இடப்பட்ட பாயின்மீது ஊற்றி பாய் எங்கணும் பரவி வெயிலில் காயவிடுதல் வேண்டும். (பனாட்டை இலகுவாகப் பாயிலிருந்து அகற்றுவதற்காகப், பாயின்மீது சிறுதுவாரங்கள் இடப்பட்ட மெழுகுசீலையை விரித்தோ அல்லது சல்லடையுடைய சேலையை விரித்தோ அதன்மீது களியை ஊற்றிப் பரவலாம்) மறுநாளும் பாயில் ஊற்றியகளி வெயிலில் காயவிடப்பட வேண்டும். அதற்கும் அடுத்தநாள் மீண்டும் களியைப் பிசைந்தெடுத்து பாயில் (முன்னர் ஊற்றிக்காயவிடப்பட்ட) களியின்மீது பரவுதல் வேண்டும். இவ்வாறு 6 அல்லது 7 தடவைகள் களி ஊற்றிக் காயவிடப்படவேண்டும். களி நன்கு தடிப்புற்றுக் காய்ந்தபின் பனாட்டை 6'' - 9'' சதுரங்களாக வெட்டிப் பாயிலிருந்து களற்றி எடுத்து மறுபுறமாகத் திருப்பிக் காயவிட வேண்டும்.

### பாதுகாத்தல்

பனாட்டுத் தட்டுகள் நன்கு காய்ந்தபின் அவற்றைப் பனை ஓலையால் பின்னப்பட்ட கூடைகளில் இட்டு வெப்பமுடைய அடுப்பங்கரைகளில் கட்டித் தொங்கவிடலாம். கூடைகளில் அடுக்கும்போது பனாட்டின் இரு புறங்களிலும் சிறிதளவு உப்புத்தடவுதல் நன்று. இது கூடைப்பனாட்டு எனப்படும்.

### பாணிப்பனாட்டு

இது நீண்டகாலத்துக்குப் பயன்படுத்தப்படக்கூடியதாகும். நன்கு காய்ந்த பனாட்டுத் தட்டுக்களை 1-1½'' சதுர துண்டுகளாக வெட்டி எடுத்தல் வேண்டும். தேவையான அளவு பனம்பாணியுடன் (சுவைக்காகவும் நறுமணத்திற்காகவும்) மிளகுதூள், சீரகம், பொரியரிசி, தேங்காய்ச்சொட்டு ஆகியவற்றைச் சூடாக்கிக் கலத்தல் வேண்டும். பின்னர் இக்கலவையை பாத்திரத்திலிடப்பட்ட பனாட்டுத்துண்டுகளின் மேல் ஊற்றிக் கலக்க வேண்டும். இதனை மண் பானைகளில் இட்டு நன்கு மூடி வைப்பதன் மூலம் நீண்டகாலத்துக்கு உணவுப்பொருளாகப் பயன்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதநீரிலிருந்து உணவுப்பொருட்கள் தயாரித்தல்

| | |
|---|---|
| அறிமுகம் | பனைதரும் பதநீரிலிருந்து பல்வேறுவகையான உணவுப் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. இவை மருந்தாகவும் பயன்படுத்தப்படுகின்றன. பனம்பாகு, பனைவெல்லம் (பனங் கட்டி) பனம்சீனி, பனங்கற்கண்டு போன்றவை பதநீரிலிருந்து பெறப்படும் பொருட்களாகும். பதநீர் பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி மாதங்களிலேயே கிடைக்கின்றது. இப் பதநீரைப் பனம்பாகு (பனம்பாணி) ஆக மாற்றுவதன்மூலம் நீண்டகாலத்துக்குப் பயன்படுத்தமுடியும். |
| சந்தைவாய்ப்பு | மக்களின் தேவைகளை ஈடுசெய்யுமளவுக்கு பதநீர் உற்பத்தியோ அதிலிருந்து பெறப்படும் உணவுப்பொருள் உற்பத்தியோ இதுகாலவரை மேற்கொள்ளப்படவில்லை. வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மட்டுமன்றி நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பதநீர் உற்பத்திப் பொருட்களுக்கான கிராக்கி அதிகம் உண்டு. பனை அபிவிருத்திச் சபையின் விற்பனை நிலையங்களான 'கற்பகத்தி'னூடாகவும் தனியார் கடைகள் மூலமாகவும் பதநீர் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்தலாம். நிலையான சந்தை வாய்ப்புண்டு. |
| தொழில்நுட்பம் | குறுகியகாலப்பயிற்சியுடன் அல்லது அனுபவத்துடன் இத் தொழிலில் ஈடுபடலாம். தொழில்நுட்பம் இலகுவானது. வீட்டின் ஒரு பகுதியிலேயே இத்தொழிலைச் செய்யலாம். |
| மூலப்பொருட்கள் | பதநீர் |
| உபகரணங்கள் | தாச்சிச்சட்டி அல்லது பானை, அகப்பை, துடைப்பம், வடி கலன். |
| முதலீடு | ரூபா 2000/- |
| மாதவருமானம் | ரூபா 2000/- |
| குறிப்பு | காணி, கட்டடத்தின் பெறுமதியோ, வாடகையோ முதலீட் டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதநீரிலிருந்து உணவுப்பொருட்கள் - செய்முறை

பதநீரை உணவுப்பதார்த்தமாக்குவதன் முன்னர் அதிலுள்ள சுண்ணாம்பை அகற்றவேண்டும். இதற்கு பி. எச் தாளைப்பயன்படுத்தலாம். பதநீரை 40°செ.கி க்கு வெப்பமேற்றி பி. எச் பெறுமானம் 7.5 ஆக வரும்வரை பொசுபோரிக் அமிலம் கலக்கவேண்டும். பின்னர் 90° செ.கி - 98° செ.கி. வரை பதநீரைச் சூடாக்கி 30 நிமிடங்கள் ஆற விடவேண்டும். அப்போது சுண்ணாம்பு பாத்திரத்தின் அடியில் மண்டியாகப் படிந்திருக்கும். தெளிந்த பதநீரை வடித்தெடுத்து சுண் ணாம்பு மண்டியை அகற்றவேண்டும்.

### 1. பனம்பாகு (பனம்பாணி)

பதநீரை சுண்ணாம்பு அகற்றியபின் 105° செ.கி. - 107° செ.கி. வரை சூடாக்க வேண்டும். அப்பொழுது பனம்பாகு (பனம்பாணி) கிடைக்கிறது. இதனைப் போத்தல்களில் அடைத்து நீண்டகாலத்துக்குச் சேமித்து வைக்கலாம். தயிர், அப்பம், பிட்டு ஆகிய உணவுவகைகளுடன் கலந்து உட்கொள்ளலாம்.

### 2. பனைவெல்லம் (பனங்கட்டி)

பதநீரின் கொதிநிலை 116° செ.கி. - 118° செ.கி. ஆக இருக்கும்போது அது பொன்மஞ்சள் நிறமாக மாறும். அதனை அடுப்பினின்றும் இறக்கி சட்டகப்பை யினால் நன்கு கடையவேண்டும். பாகு வெப்பம் ஆறும்போது இறுகிவரும். அப்போது அதனை வேண்டிய அச்சுக்களில் ஊற்றி ஆறவிடும்போது அது பனை வெல்லம் ஆகின்றது.

### 3. பனங்கற்கண்டு

பதநீரை 108°செ.கி.-112°செ.கி.வரை வெப்பமேற்றவேண்டும். பின் u வடிவி லான கற்கண்டுவிளை பாத்திரத்திற்கு மாற்றவேண்டும். தொட்டியை அசை யாமல் பாதுகாக்க வேண்டும். 30 நாட்களில் கற்கண்டு கொத்துக்கொத்தாக விளைந்திருக்கும். இக்கற்கண்டைத் தூயநீரில் கழுவி காயவைத்துப் பேணிப் பாதுகாக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதப்படுத்தப்பட்ட பனங்களி தயாரித்தல்

**அறிமுகம்**

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பெருமளவில் காணப்படும் பனை மரங்களிலிருந்து கிடைக்கும் பனம்பழத்தின் இனிப்புச் சுவையுடைய களி மனிதத் தேவைக்குப் பயன்படுத்தப்படாது, வீணே விரயமாகிறது. இக் களியில் 30 - 40% இனிப்புச் சுவை உள்ளது. இக்களியிலிருந்து எண்ணெய், கேக், இனிப்புப் பாண், ஜாம், பானம், ஆகியன தயாரிக்கப்படுகின்றன. இக் களி இரசாயனப் பதப்படுத்திகளினால் பதப்படுத்தப் பட்டு போத்தல்களிலோ, கலன்களிலோ அடைத்து நீண்ட காலத்திற்குப் பயன்படுத்தப்படலாம்.

**சந்தைவாய்ப்பு**

பனை அபிவிருத்திச்சபை ஒரு லீற்றர் பனங்களியை ரூபா 15/-ற்கு கொள்வனவு செய்கின்றது. எனவே இதனைச் சந்தைப் படுத்துவதில் சிரமம் ஏதும் இல்லை.

**தொழில்நுட்பம்**

தொழில்நுட்பம் இலகுவானது. இதற்கு இயந்திர சாதனங்களோ, பொறிகளோ தேவைப்படுவதில்லை. பனம்பழங்களை நன்கு கழுவி அவற்றின் தோலை அகற்ற வேண்டும். பின்னர் சிறிதளவு வெந்நீரிலே தோல் அகற்றிய விதைகளை இட்டு கையால் பிசைதல் வேண்டும். பெறப்பட்ட களியை அலுமினியப் பாத்திரத்திலிட்டு சூடாக்க வேண்டும். நுரையை கரண்டிகளினால் எடுத்து அகற்ற வேண்டும். களி நன்கு ஆறிய பின் பதப்படுத்தும் இரசாயனத்தை அதனுடன் நன்கு கலந்து போத்தல்களிலோ, பிளாஸ்ரிக் கொள்கலன்களிலோ அடைத்தல் வேண்டும்.

**உபகரணங்கள்**

பிளாஸ்ரிக் கொள்கலன்கள் 10, (25 லீற்றர் கொள்ளளவு) அலுமினியப் பாத்திரங்கள் 02, (50 லீற்றர் கொள்ளளவு) பிளாஸ்ரிக் வாளிகள் 03, அடுப்பு, விறகு, வடி, அகப்பை.

**முதலீடு**

| | |
|---|---|
| உபகரணங்கள் | ரூபா 5,500/- |
| மூலப்பொருட்கள் | ரூபா 5,200/- |
| | ரூபா 10,700/- |

**வருமானம்**

ரூபா 8,440/- (ஒரு ஆளுக்கு மூன்று மாதங்களுக்கானது)

**குறிப்பு**

காணி, கட்டடம் ஆகியவற்றின் பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. பனம்பழங்கள் அதிகமாகக் கிடைக்கும் இடங்களில் இத்தொழிலை ஆரம்பிப்பது உகந்தது. பனம்பழங்கள் பொதுவாக ஆகஸ்ட், செத்தெம்பர், ஒக்தோபர் மாதங்களிலேயே கிடைக்கின்றன. களி எடுக்கப்பட்ட பின் எஞ்சும் விதைகளைப் பாத்தியிட்டு அதிலிருந்து கிடைக்கும் பனங்கிழங்கு மூலமும் பெருமளவு வருவாயைப் பெற்றுக்கொள்ளலாம். (பனம்பழம் ஒன்றை 2/- வீதம் கொள்வனவு செய்யலாம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழி வளர்த்தல்

| | |
|---|---|
| அறிமுகம் | வீடுகளில் ஓர் உப தொழிலாகவும் கோழிவளர்ப்பை மேற் கொள்ளலாம். முழுநேரத் தொழிலாகச் செய்வதன்மூலம் பெருமளவு இலாபத்தைப் பெறலாம். இத் தொழில், முயற்சி யாளரின் வருமானத்தை மட்டும் பெருக்கும் இயல்பு கொண் டதன்று. பிரதேச மக்களின், முட்டை, இறைச்சித் தேவையை யும் பூர்த்தி செய்கின்றது. மக்களுக்கு வேண்டிய சத்துணவை வழங்குகின்றது. எனவே இத் தொழில் தனக்கும் சமூகத்துக் கும் பயனுடைய தொழிலாக விளங்குகின்றது. |
| சந்தைவாய்ப்பு | கோழி முட்டை, இறைச்சி ஆகியவற்றுக்கு எப்போதும் பற் றாக்குறையே நிலவுகின்றது. இவ்வுணவு வகைகள் பெருமள வுக்கு வெளிமாவட்டங்களில் இருந்தே தருவிக்கப்படுகின்றன. எனவே உள்ளூரில் போதிய சந்தைவாய்ப்புண்டு. |
| தொழில்நுட்பம் | இத் தொழிலுக்கான ஆரம்ப அறிவையும் பயிற்சியையும் பெற்றுக்கொள்வது முக்கியமானதாகும். ஒழுங்கான பராமரிப் புத் திறன் அவசியமாகும். கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள அலுவலகங்கள் மூலம் வேண்டிய பயிற்சியைப் பெற்றுக்கொள்ளலாம். |
| மூலப்பொருட்கள் | கொள்வனவு செய்யப்பட்ட ஒருநாள் குஞ்சுகள் அல்லது வீடு களில் அடைவைத்துப் பெறப்பட்ட கோழிக்குஞ்சுகள். |
| உபகரணங்கள் | (50 முட்டைக் கோழிகள் வளர்ப்பதற்கானது)<br>150 சதுர அடி விஸ்தீரணங்கொண்ட கோழிக்கூடு, நீர் வடி கட்டும் கலன்கள் இரண்டு, உணவு புகட்டும் கலன்கள் இரண்டு, கோழியின் பருவத்துக்கேற்ற தீவனம். |
| முதலீடு | ரூபா 12,000/- |
| வருமானம் | ரூபா 2,600/- |
| குறிப்பு | காணி, கட்டடத்திற்கான பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. முட்டைக் கோழி வளர்க்கும் காலத்தில் (வேறு கூட்டில்), இறைச்சிக் கோழியையும் வளர்ப்பது தொடர்ச்சியான வருமானத்தைப் பெற்றுத்தரும். இறைச்சிக்கோழி 45 நாட்களிலேயே விற்பனைக்குத் தயா ராகிவிடும். ஒரு நாட் குஞ்சு முட்டையிடுவதற்கு 6 மாதம் செல்லும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடு வளர்த்தல்

**அறிமுகம்**

ஆடு வளர்த்தலை ஓர் உபதொழிலாகவும், பொழுதுபோக்காகவும் செய்யலாம். மேய்ச்சல்நிலம் அதிகமாகக் காணப்படும் பிரதேசங்களில் பெருமளவு ஆடுகளை வளர்க்கமுடியும். இலங்கையில் ஜமுனாபாரி, சாணன், சிறிலங்கா போயர், கொட்டுக்கச்சியா, உள்நாட்டு இனவர்க்க ஆடுகள் காணப்படுகின்றன. ஆடுவளர்த்தல் விரிவாக்க சேவை நிலையங்கள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, வவுனியா, அனுராதபுரம், திருகோணமலை, புத்தளம், குருநாகல், கம்பஹா ஆகிய இடங்களில் இயங்குகிறது. 1983ஆம் ஆண்டில் சிறீலங்கா - ஜேர்மன் ஆடு அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் புத்தளம் மாவட்டத்திலுள்ள கொட்டுக்கச்சியா என்னுமிடத்தில் ஆடுகள் இனப்பெருக்க நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

**சந்தைவாய்ப்பு**

பாலுக்காகவும், இறைச்சிக்காகவும் ஆடுகள் வளர்க்கப்படுகின்றன. நாட்டில் இவையிரண்டுக்குமே பற்றாக்குறை நிலவி வருகின்றது. எனவே இவற்றுக்கான சந்தைவாய்ப்பு எப்போதும் உண்டு. குறிப்பாக நகரப்புறங்களில் இவற்றுக்கான கிராக்கி மிக அதிகமாகும்.

**தொழில்நுட்பம்**

தொழில்நுட்பம் மிக இலகுவானது. ஆடுவளர்ப்பில் ஈடுபடுபவர்கள் அவற்றின் இயல்பினை விளங்கிக்கொள்வது மிக அவசியமாகும். கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்கள அலுவலகங்கள் மூலம் வேண்டிய அறிவையும் பயிற்சியையும் பெற்றுக்கொள்ளலாம்.

இளம்கடாக்களைப் புணர்ச்சிக்குப் பயன்படுத்தும் காலம் 10 - 12 மாத வயது.

மறியாட்டின் இருவேட்கைக்கு இடைப்பட்ட காலம் 18 - 21 நாட்கள்.

வேட்கை தொடரும் காலம் 2 - 3 நாட்கள்.

கர்ப்ப காலம் 150 நாட்கள்.

உணவுவகை

மா, பலா, வாழை, வேம்பு, பனை, இப்பில் இப்பில், கிளிரிசிடியா, முள்முருக்கு போன்றவற்றின் இலைகளும், இளம் தண்டுகளும், சாதாரண புல்வகையும், நேப்பியர், பினிப்புல், பங்கோலா, பவ்வல், பிறக்கேரியா ஆகிய வளர்ப்பினப் புல் வகை.

தானியங்கள், விவசாய உபபொருட்களும் கழிவுப்பொருட்களும் நீரும்.

நோய்கள்

ஆட்டுச்சோர்வாதம், தொடுகை, கொப்பளத்தோல், அழற்சி, தோல்நோய், நியூமோனியா, கொக்சிடியோசிஸ், காற்றூதுதல் அல்லது வாய்வூதுதல்.

**உபகரணங்கள்** — லாயம் அல்லது பட்டி, நீர்புகட்டும் பாத்திரங்கள்.

**முதலீடு** — ரூபா 8,500/- (05 ஆடுகளுக்கானது)

**மாதவருமானம்** — ரூபா 1,500/-

**குறிப்பு** — காணி, கட்டடம் ஆகியவற்றின் பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயல் வளர்த்தல்

**அறிமுகம்**
முயல் வளர்த்தலை ஓர் உபதொழிலாகவும், பொழுதுபோக்காகவும் செய்யலாம். இது மிக இலகுவானதும் இலாபம்தரக் கூடியதுமாகும். மனிதனுக்கு வேண்டிய இறைச்சித்தேவையைப் பூர்த்திசெய்து கொள்ளலாம். முயல் இறைச்சியில் மற்ற எவ்வகை இறைச்சியையும்விட அதிகளவு புரதமும் (20.5), கனிப்பொருளும் (1.5), மிகக்குறைந்தளவு கொழுப்புச் சத்தும் காணப்படுகின்றன. மனிதனின் உடல் ஆரோக்கியத்திற்கு முயல் இறைச்சி ஏனைய இறைச்சிகளைவிட மிகச்சிறந்ததாகும். முயலின் மலம் மற்றும் கழிவுப்பொருட்கள் பசளையாகப் பயன்படுகின்றன. தோல் அழகான தொப்பிகள் செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

**சந்தைவாய்ப்பு**
முயல் இறைச்சி கிடைப்பது மிக அரிதாக உள்ளது. மக்களின் தேவைக்கேற்றளவு உற்பத்தி இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. எனவே இதற்கான சந்தைவாய்ப்பு எப்போதுமே உண்டு.

**தொழில்நுட்பம்**

* முயல் வளர்த்தல் இலகுவானது. ஆயினும் ஆரம்பப்பயிற்சியைப் பெற்றுக்கொள்வது அவசியம்.
* எமது நாட்டிற்கு நியூசிலாந்து இனமான வெள்ளைமுயலும், கலிபோனிய முயலினமும் உகந்தவையாகக் கருதப்படுகின்றன. புல், கீரை, முள்முருக்கு, உழுத்தம்கோது, புண்ணாக்கு இப்பில் இப்பில், வத்தாளை, கரட், கனிப்பொருட்கலவை, நீர் ஆகியவை முயலின் உணவாகும்.
* முயல்கள் வெகுவிரைவாக இனம்பெருக்கக்கூடியவை. பெண் முயல் ஒன்று ஒரு வருடத்தில் ஏறக்குறைய 32 குட்டிகளை ஈனும். இரண்டு மூன்று வருடங்களுக்கு பெண்முயல் தொடர்ந்து குட்டி ஈனும். உணவுக்குப் பயன்படுத்தப்படும் முயலொன்றின் சராசரி நிறை 2-2½ கிலோ கிராம் ஆகும். குட்டி பிறந்து 8ம் கிழமையில் இறைச்சிக்காக முயல் வெட்டப்படுகின்றது.
* முயலின் சினைக்காலம் 30 நாட்களாகும். பிறந்து 8வது கிழமையில் குட்டிகளைத் தாயிலிருந்து பிரித்தல் வேண்டும். குட்டிகளைப் பிரித்த சில நாட்களில் மீண்டும் தாயைச் சினைப்படுத்த வேண்டும்.
* பெண்முயல்களும் ஆண்முயல்களும் வேறுவேறு கூடுகளில் வளர்க்கப்படும். இனச்சேர்க்கையின்போது ஒரு ஆண்முயலுடன் 10 பெண்முயல்களைச் சேர்க்கைக்குப் பயன்படுத்தலாம் இச்சேர்க்கையின்போது ஒருநாள் முழுவதும் பெண்முயல்களை ஆண்முயலுடன் தங்கவைத்தல் வேண்டும்.
* முயலை வளர்ப்பதற்கு சிறுகட்டடம் ஒன்றும் கூடும் அவசியம் கூடுகளை நீர்வசதியுள்ள குளிரான இடங்களில் அமைப்பது நல்லது. கூடுகள் 36" × 30" × 24" அளவினதாக இருக்க வேண்டும். முயல் இலகுவில் வெளியேறாதவாறும், பிற பிராணிகளால் கூட்டிலிருக்கும் முயல்களுக்கு ஆபத்துக்கள் நேராதவாறும் கூடு நல்லமுறையில் அமைதல் வேண்டும்.
* விபரங்களுக்கு கால்நடை உற்பத்திச் சுகாதார திணைக்கள அலுவலகங்களை நாடவும்.

**உபகரணங்கள்** கூடு, கட்டடம், நீர், உணவு வைப்பதற்கான பாத்திரம்.

**முதலீடு** ரூபா 12,000/-

**மாதவருமானம்** ரூபா 3,000/-

**குறிப்பு** காணி, கட்டடம் ஆகியவற்றின் பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேனீ வளர்த்தல்

| | |
|---|---|
| அறிமுகம் | தேனீவளர்த்தல் இலகுவானதும் இலாபகரமானதுமான ஒரு தொழிலாகும். இதனைப் பொழுதுபோக்காகவும் செய்யலாம். எமக்குத் தேவையான சுத்தமான தேனை நாமே தேடிக்கொள்ளலாம். பொதுவாகத் தேனீ கொட்டும் இயல்புடையது எனக்கருதி பலர் இத்தொழிலில் ஈடுபடுவதில்லை. ஆனால் தேனீயை எமது நண்பனாக்குவதன் மூலம் நல்ல பயன்களைப்பெறலாம் என்பதைப் பலரும் உணர்ந்துகொள்வதில்லை. தேனீவளர்ப்பதன் மூலம் தேன், மெழுகு, தேனீ விஷம் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். |
| சந்தைவாய்ப்பு | மனிதத்தேவைக்கு வேண்டிய தேனில் ஒரு சிறு பகுதிமட்டுமே உற்பத்தி செய்யப்படுகின்றது. தேன் உணவுத் தேவைக்கு மட்டுமன்றி மருந்தாகவும் பயன்படுவதனால் எப்போதுமே நல்ல சந்தைவாய்ப்புண்டு. |
| தொழில்நுட்பம் | தொழில்நுட்பம் இலகுவானது. பயிற்சியும் அனுபவமும் அவசியம். தேனீக்களில் இராணித்தேனீ, ஆண்தேனீ, வேலையாட்தேனீ என மூன்றுவகை உண்டு. இராணித்தேனீயும் வேலையாட்தேனீயும் எப்போதும் ஒருகுடியில் காணப்படும். ஆண்தேனீக்கள் விசேட சந்தர்ப்பங்களில் மட்டும் காணப்படும். ஒரு குடியின் தலைவியாக இராணித்தேனீ தொழிற்படும். இதன் தொழில் முட்டையிடுவது மட்டுமே. நாளொன்றுக்கு 500 - 1200 முட்டைகள் இது இடும். வேலையாட் தேனீக்களே பூக்களிலிருந்து தேனை எடுத்துவரல், சேமித்தல் போன்ற சகல வேலைகளையும் செய்யும். ஒரு குடியில் 25,000 - 100,000 வரையிலான தேனீக்கள் காணப்படும். தேன்குடிஒன்றைப்பிடித்து தேனீப்பெட்டி ஒன்றில் நிலைப்படுத்துவதற்கு அனுபவம் பயிற்சிபெற்ற ஒருவரின் உதவி அவசியமாகும். பூக்கள் அதிகளவில் மலர்ந்து மகரந்தமும் தேனும் அதிகளவில் சேமிக்கப்படும் காலம் தேனீ விருத்தியடையும் காலமாகும். இக்காலத்திலேயே ஒரு குடியிலிருந்து பல தேனீக்குடிகள் உருவாகின்றன. இச்சந்தர்ப்பத்திலேயே தேனீக்குடி ஒன்றைப் பிரித்தெடுத்து தேனீப்பெட்டியில் நிலைப்படுத்தி வைத்தல் வேண்டும்.<br><br>வசந்த காலத்தில் தேனீக்கள் தேன் சேகரிப்பதில் சுறுசுறுப்பாக ஈடுபடும். தேன்வதைகளில் தேன் சேகரிக்கப்படும். வதையில் தேன் நிறைந்த பின்னர் புகையூட்டி தேன்பிரித்தெடுக்கும் கருவி ஆகியவற்றின் உதவியுடன் தேனைப்பிரித்தெடுக்கலாம். தொழில்நுட்பம் பற்றிய விபரங்கள் பயிற்சி ஆகியவற்றுக்கு விவசாயத் திணைக்கள விவசாயப் போதனாசிரியர்கள், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள அலுவலர்களை நாடவும். |
| உபகரணங்கள் | தேனீப்பெட்டி, புகையூட்டி, தேனீக்களை கொண்டுசெல்லும் பெட்டி, தேன் பிரித்தெடுக்கும்கருவி, முகமூடிவலை. |
| முதலீடு | ரூபா 2,500/- (05 குடிகளுக்கானது) |
| வருமானம் | ரூபா 1,000/- |
| குறிப்பு | தேனீவளர்ப்பிற்கு, காணிகட்டடங்கள் அவசியமற்றவை தேனீ வளர்ப்பிற்கு அதிகளவு பூக்கள் மலருகின்ற சோலைகளை அண்மிய இடங்கள் உகந்தவையாகும். தேனீப்பெட்டியை அதிகளவு வெயில் காற்று இல்லாத இடமாகவும் இருளான, குளிரான இடமாகப் பார்த்து அமைத்தல் வேண்டும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காளான் வளர்த்தல்

| | |
|---|---|
| அறிமுகம் | காளான் புரதச் சத்து நிறைந்த உணவாகும். சிறிய அளவி லான முயற்சியுடனும் முதலீட்டுடனும் காளான் வளர்ப்பை மேற்கொள்ளலாம். இதன் மூலம் கிடைக்கும் வருமானம் மிக உயர்ந்ததாகும். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளமையால் பலர் தற்போது காளான் உற்பத்தியில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். |
| சந்தைவாய்ப்பு | இலங்கைக்கு வருகைதரும் வெளிநாட்டுச் சுற்றுப்பயணிகள் காளானை விரும்பி உண்ணுகின்றனர். இதனால் உல்லாசப் பயண ஹோட்டல்களிலும் உணவு விடுதிகளிலும் இதற்குப் பெரும் கிராக்கி உண்டு. |
| தொழில்நுட்பம் | தொழில்நுட்பம் மிக இலகுவானது. |
| தயாரிப்பு | நீர் ஊற்றப்பட்ட வைக்கோலை அவித்தபின்னர் மரச்சட்ட மொன்றின் உதவியுடன் அதனை களிமண்படையில் வைப்ப தன்மூலம் படுகையொன்று தயாரிக்கப்படவேண்டும். ஒரே விதமான மூன்று படுகைகள் அவசியமாகும். படுகைகள் தயார் செய்யப்பட்டதன் பின்னர் பாத்திகளுக்கு நீரூற்றி அதன் மீது வித்திகளைப் பரப்பப்பட வேண்டும். வித்தி என்பது விதைக்கப்படும் காளானைக் குறிக்கும். நேரடி ஒளி யைக் குறைப்பதற்கு பிளாஸ்டிக் ஷீட்கொண்டு பாத்தியை மூடிவைத்தல் வேண்டும். அல்லது கிடுகினாலான 10' × 10' பரப்பளவு கொண்ட சிறு கொட்டிலில் இடப்படவேண்டும். பாத்தி ஒன்றின் நீள அகலம் முறையே 3:2 அடிகளாகும். |
| அறுவடை | ஒருவாரத்திற்கும் இரண்டு வாரத்திற்கும்இடைப்பட்ட காலத் தில் அறுவடை செய்யலாம். |
| முதலீடு | ரூபா 1,500/- |
| மாதவருமானம் | பாத்தி ஒன்றிலிருந்து 750 கிராம் காளானை அறுவடை செய்யலாம். கிலோ ஒன்றின் விலை ரூபா 80/- தொடக்கம் ரூபா 120/- வரை வேறுபடும். |
| குறிப்பு | காணி, கட்டடம் ஆகியவற்றின் பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. கண்டியிலும், அம்பாறையிலும் சில தனியார் காளான் உற்பத்தியில் ஈடு பட்டுள்ளனர். காளான் உற்பத்தி தொடர்பான நிலையங்கள் இரண்டு, செங்கலடியிலும் கல்லடியிலும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரினால், பராமரிக்கப்பட்டு வரு கின்றன. |
| தொழில்நுட்ப ஆலோசனைகளுக்கு | மெசர்ஸ் மஷ்றும் டெவலப்மென்ற் அன்ட், ட்றெயினிங் சென்ரர் (பிறைவேட்) லிமிட்டெட், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, 310, காலி வீதி, கொழும்பு-03 என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டுப்பூச்சி வளர்த்தல்

**அறிமுகம்** — பட்டுப்பூச்சி வளர்த்தல் இலகுவானதும், இலாபகரமானதுமான ஒரு தொழிலாகும். பட்டுப்பூச்சி வளர்ப்பதற்கு, மல்பெரிச் செடி இன்றியமையாததாகும். இச்செடியின் இலைகளே பட்டுப் பூச்சியின் உணவாகும். இச்செடி இலங்கையில் 4000 அடிக்கு குறைவான, எப்பகுதியிலும் வளரக்கூடியது. வரட்சியான பகுதிகளில் பாசனவசதி அவசியம். 25-100 அங்குல மழை வீழ்ச்சியும் 24°-30° சென்டிகிறேட் சீதோஷ்ண நிலையும் இச் செடி பயிரிடுவதற்கு அவசியமானவை. ஒருமுறை பயிரிடப் படும் செடி 12-15 வருடங்கள் தொடர்ச்சியாக பயன்தரும். எனவே இத்தொழிலுக்கான நடைமுறைச்செலவு மிகக் குறைவாகும்.

**சந்தைவாய்ப்பு** — பட்டுப்பூச்சி தன்னைச்சுற்றி உருவாக்கும் கூடு அல்லது தரணைகளிலிருந்தே பட்டுநூல் எடுக்கப்படுகின்றது. இக்கூடுகள்/தரணைகள் பட்டுப்பொருள் அபிவிருத்தி அதிகார சபையினால் கொள்முதல் செய்யப்படுகின்றது. இவற்றுக்கான தேவையின், மிகச் சொற்பளவு உற்பத்தியே மேற்கொள்ளப்படுகின்றது. எனவே எவ்வளவு உற்பத்தியை மேற்கொள்ளினும் அவற்றைச் சந்தைப்படுத்தும் வாய்ப்புண்டு.

**தொழில்நுட்பம்** — தொழில்நுட்பம் மிக இலகுவானது. தொழில்நுட்ப ஆலோசனைகளையும் அறிவுரைகளையும்''பட்டுப்பொருள் அபிவிருத்தி அதிகாரசபை,'' அபிவிருத்திப் பிரிவு, 50/11 சிறிமாவீதி, கொழும்பு 5லிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**மூலப்பொருட்கள்** — மல்பெரிச்செடி, பட்டுப்பூச்சிமுட்டைகள்

பட்டுப்பூச்சி முட்டைகள் கொண்ட உறைகளை பட்டுப்பொருள் உற்பத்தி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். இவ்வுறையில் 20,000க்கு மேற்பட்ட முட்டைகள் உள்ளன.

20,000 பட்டுப்பூச்சிகளை வளர்ப்பதற்கு 500-600 கிலோ கிராம் மல்பெரிச்செடி இலைகள் வேண்டும். இப்பூச்சியிலிருந்து 25-30 கிலோகிராம் பட்டுநூலைப் பெறமுடியும்.

**உபகரணங்கள்** — மல்பெரிச்செடி வளர்ப்பதற்கான நிலம், (ஒரு ஏக்கர்) 20×15 அடி அளவு கொண்ட வளர்ப்புக்கூடம், பட்டுப்பூச்சி வளர்ப்பதற்கான தட்டுக்கள் ஆகியன.

**முதலீடு** — உபகரணங்கள் ரூபா 12,000/-

**மாதவருமானம்** — ரூபா 3000/- வரை.

ஓர் உறையில் உள்ள 20,000 முட்டைகளை வளர்ப்பதன் மூலம் ரூபா 3000/- வருமானமாகப் பெறலாம். இதற்கான உற்பத்திச் செலவு ரூபா 400/- மட்டுமே.

**குறிப்பு** — காணி, கட்டடத்தின் பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

ஒரு தொழிற்கூடத்தில் மூன்று அல்லது நான்குபேர் தொழிலில் ஈடுபடலாம். இலகுவான தொழிலாகையால் அங்கவீனர்களும் இத்தொழிலை இலகுவாக மேற்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸ் வெல்டிங் தொழில்

| | |
|---|---|
| அறிமுகம் | இத் திட்டத்தின் கீழ் அசிட்லின் ஒக்சிசன் வாயுக்களின் உதவியுடன் ஒட்டுத்தொழில் செய்யப்படுகின்றது. இலேசான ஒட்டு வேலைகளை இதன்மூலம் செய்யமுடியும். மேசைகள், கட்டில்கள், மெல்லிய தகடுகள், வாகனங்களின் பொடி, குளிர் சாதனப்பெட்டி ஆகியவற்றைச் சீர் செய்யும் வேலைகள் மேற்கொள்ளப்படலாம். பாரிய இரும்பு,உருக்கு துண்டங்களை அறுப்பதற்கு ஒக்ஸி அசிட்லின் பயன்படுகின்றது. |
| தொழில்வாய்ப்பு | தகரம், இரும்பு, உருக்கு போன்றவற்றினாலான பாவனைப் பொருட்கள் இன்று பெருமளவு விரும்பப்படுகின்றன. பழுதடைந்த இப்பொருட்களைச் செப்பனிடுவதற்கு காஸ்வெல்டிங் பயன்படுகின்றது. எனவே நிரந்தரமான தொழில்வாய்ப்பு உண்டு. உலோகப் பாத்திரங்கள் செப்பனிடும் வேலையையும் இதன்மூலம் மேற்கொள்ளமுடியும். |
| தொழில்நுட்பம் | ஆறுமாதகாலப் பயிற்சியுடன் இத்தொழிலை ஆரம்பிக்கலாம். பயிற்சியை கைத்தொழில் அமைச்சுமூலமும், தனியார் நிலையங்கள் மூலமும் பெற்றுக்கொள்ளலாம். |
| மூலப்பொருட்கள் | காஸ் அசிட்லின், ஒக்சிசன்வாயு, காஸ்வெல்டிங்ரோச், வெட்டி, இரும்புக்கம்பி, பித்தளைக்கம்பி. |
| உபகரணங்கள் | கையடக்கமான ட்ரொலி, காஸ்உள்ள காஸ்சிலிண்டர், வெல்டிங் ரோச், வெட்டி ஆகியவற்றுடனான பூரணமான கருவிப்பெட்டி அறிவுறுத்தல் புத்தகங்களைக்கொண்ட கையடக்கமான பொதி. |
| முதலீடு | ரூபா 35,000/- |
| மாதவருமானம் | ரூபா 2,500/- |
| குறிப்பு | காணி, கட்டடம் ஆகியவற்றின் பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. துணைக்கு ஒருவரை வைத்துக்கொள்வதன்மூலம் கூடிய வேலைகளைப் பொறுப்பேற்று வருமானத்தை அதிகரிக்கலாம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்க் வெல்டிங் தொழில்

அறிமுகம்

இரும்பு, உருக்கு ஆகியவற்றால் ஆக்கப்பட்ட வாகனங்கள், விவசாய இயந்திரங்கள், உபகரணங்கள் ஆகியவற்றை ஒட்டுவதற்கும், வீட்டு யன்னல்களுக்கான கிறில் அமைத்தல், உருக்குத் தளபாடங்கள் ஆகியன செய்வதற்கும் இத்தொழில் பயன்படுகின்றது.

தொழில்வாய்ப்பு

இரும்பு, உருக்கு இயந்திரங்கள், உபகரணங்கள் ஆகியவற்றின் பயன்பாடு இன்று அதிகரித்து வருகின்றது. இவற்றிலேற்படும் பழுதுகளை ஆர்க்வெல்டிங் மூலமே திருத்தியமைக்க முடியுமாகையால் இத்தொழிலுக்கு நிலையான தொழில்வாய்ப்புண்டு. யன்னல் கிறில்கள், இரும்புத் தளபாடங்கள் ஆகியவற்றைச் செய்து சந்தைப்படுத்துவதன் மூலம் தொழில் வாய்ப்பைப் பெருக்கிக்கொள்ளலாம்.

தொழில்நுட்பம்

குறைந்தது ஆறுமாதகாலப் பயிற்சியுடன் இத்தொழிலை ஆரம்பிக்கலாம். பயிற்சியை கைத்தொழில் அமைச்சு, கைத்தொழில் அபிவிருத்திச்சபை ஆகியவற்றின்மூலமும், தனியார் தொழில் நிலையங்கள் மூலமும் பெற்றுக்கொள்ளலாம்.

மூலப்பொருட்கள்

1. வெல்டிங்கோல்
2. மெல்லிரும்பு, வார்ப்பிரும்பு, உருக்கு ஆகியன.

உபகரணங்கள்

வெல்டிங் பிளான்ற், வெல்டிங்கேபிள், வெல்டிங்கோல்டர், வெல்டிங்சீட், வெல்டிங்களங்கள், மின்மாற்றி, ஜெனரேட்டர்.

முதலீடு

ரூபா 20,000/- — ரூபா 25,000/-

வருமானம்

நாளொன்றுக்கு ரூபா 250/-

குறிப்பு

காணி, கட்டடம் ஆகியவற்றின் பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.
இரண்டொரு தொழிலாளர்களைத் துணைக்கு வைத்துக் கொள்வதன் மூலம் மேலதிக வருமானத்தைப் பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்பிறே பெயின்ரிங் தொழில்

| | |
|---|---|
| அறிமுகம் | மோட்டார் வாகனங்கள், குளிர்சாதனப் பெட்டிகள், மின் சார விசிறிகள், வீட்டுப்பாவனைக்கு உதவும் இரும்பு, தகரத் தினாலான தளபாடங்கள் போன்ற பாவனைப்பொருட்களுக்கு வர்ணம் பூசுவதற்கு இத்தொழில் உதவுகின்றது. வீட்டின் ஒரு பகுதியிலேயே இத்தொழிலை ஆரம்பித்து நடாத்தமுடியும். |
| தொழில்வாய்ப்பு | மக்களால் பயன்படுத்தப்படும் பொருட்களில் பெரும்பாலா னவை இரும்பு, தகரம், உருக்கு ஆகியவற்றினால் தயாரிக் கப்பட்டவையாகும். இப்பொருட்கள் துருப்பிடிக்காது அடிக்கடி வர்ணம் பூசப்படவேண்டுமாகையால்இத்தொழிலுக்கு நிரந்த ரமான தொழில் வாய்ப்புண்டு. |
| தொழில்நுட்பம் | குறைந்தது மூன்றுமாத காலபயிற்சியுடன் இத்தொழிலை ஆரம்பிக்கலாம். சிறுகைத்தொழில் அமைச்சு, கைத்தொழில் அபிவிருத்திச்சபை, ஆகியவற்றிலும் தனியார் நிறுவனங்களி லும் வேண்டிய பயிற்சியைப் பெற்றுக்கொள்ளலாம். |
| மூலப்பொருட்கள் | பெயின்ற், தின்னர், ரேபன்ரைன், மக்கு, சான்பேப்பர். |
| உபகரணங்கள் | ஸ்பிறேயுனிற் |
| முதலீடு | பூரணமான உபகரணப்பெட்டி ரூபா 15,000/- |
| மாதவருமானம் | உபகரணங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படும் போது ரூபா 2,000/- தொடக்கம் ரூபா 3,000/- வரையான வருமா னத்தைப் பெறலாம். |
| குறிப்பு | காணி, கட்டடம் ஆகியவற்றுக்கான பெறுமதியோ, வாட கையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. காஸ் வெல்டிங் செய்யும் இடங்களிலேயோ அல்லது அதன் அருகா மையிலேயோ ஸ்பிறே பெயின்டிங் தொழிலை ஆரம்பிப்பது வாய்ப்பானதாகும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகனங்களின் ரயர்களை கையால் மாற்றுதல்

| | |
|---|---|
| அறிமுகம் | சொற்ப முதலீட்டுடன் ஆரம்பித்து நடத்தக்கூடிய இத்தொழில் மிக்க இலாபந்தரக் கூடிய ஒன்றாகும். உபகரணங்கள் மிக நீண்டகாலத்திற்குப் பயன்படும் தன்மை வாய்ந்தவை. வாகனங்களின் ரியூப்புக்களை ஒட்டுதல், ரயர் ரியூப்புக்களை மாற்றுதல் போன்ற வேலைகளைச் செய்யமுடியும். உதவிக்கு ஒருவரை அமர்த்துவதன்மூலம் தொழிலை வளர்த்துக்கொள்ள முடியும். |
| தொழில்வாய்ப்பு | இன்று வாகனங்களின் தொகை பல்கிப் பெருகியுள்ளது. போக்குவரத்து வாகனங்களின் தொகை பெருகியுள்ளது போல, லொறி மற்றும் டிரக்டர், இரண்டு சில்லு டிரக்டர் ஆகியவற்றின் பயன்பாடும் அதிகரித்துள்ளதால் டயர், ரியூப் களை மாற்றியிணைக்கும் தொழிலுக்கு நல்ல எதிர்காலம் உண்டு. |
| தொழில்நுட்பம் | தொழில்நுட்பம் இலகுவானது. இத்தொழில் சார்ந்த ஆரம்ப அறிவுடன் அல்லது அனுபவத்துடன் தொழிலை ஆரம்பிக் கலாம். |
| மூலப்பொருட்கள் | ரியூப் ஒட்டுவதற்கான பிசின், இரப்பர்தாள்கள், இரப்பர் திரவம். |
| உபகரணங்கள் | ரயர் மாற்றும் கருவி, வன்காந்தமாக்கும் (வல்கனைசிவ்) கருவி, காற்றடிக்கும் பம்பி, வார்சுத்தியல். |
| முதலீடு | ரயர் மாற்றும் கருவியும் வல்கனைசிவ் கருவியும் : ரூபா 17,000/-<br>ஏனையவை : ரூபா 500/- |
| மாதவருமானம் | ரூபா 2,500/- |
| குறிப்பு | காணி, கட்டடம் ஆகியவற்றின் பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. ஒரு சிறிய இடத்தை வாடகைக்கு அமர்த்தி இத் தொழிலை நடத் தலாம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துவிச்சக்கர வண்டி (சைக்கிள்) பழுதுபார்த்தல்

| | |
|---|---|
| அறிமுகம் | பெருமளவு முதலின்றி அதிக இலாபத்தைப் பெற்றுத் தரக் கூடிய தொழில் இதுவாகும். உதவியாளர் ஒருவரை வைத்துக் கொள்வதன் மூலம் தொழிலை இலகுவாகச் செய்ய முடியும். வருமானத்தையும் அதிகரித்துக்கொள்ள முடியும். |
| தொழில்வாய்ப்பு | சாதாரண மனிதனின் வாகனமாக துவிச்சக்கர வண்டி விளங்குகின்றது. எரிபொருள் விலையேற்றம் காரணமாக பலர் இன்று துவிச்சக்கர வண்டியையே பயன்படுத்துகின்றனர். எனவே இத் தொழிலுக்கு நல்ல எதிர்காலம் உண்டு. |
| தொழில்நுட்பம் | இத் தொழிலுக்கு ஓரளவு தொழில்நுட்ப அறிவு அவசியமாகும். சிறு சிறு பழுதுபார்த்தல்களை குறுகியகாலப் பயிற்சியுடன் மேற்கொள்ள முடியும். வண்டியை முற்றாகக் கழுவி மீண்டும் பொருத்துவதற்கு தொழில்நுட்ப அறிவு மிக முக்கியமானதாகும். பயிற்சிகளை பிராந்திய கைத்தொழில் அபிவிருத்திச்சபை, சிறு கைத்தொழில் திணைக்கள அலுவலர்கள் மூலம் பெற்றுக்கொள்ளலாம். |
| மூலப்பொருட்கள் | இறப்பர் திரவம், பிசின், இறப்பர்தாள், ரியூப் துண்டுகள், சுரையும் பூட்டுக்களும், கொழுப்பு, எண்ணெய்-உராய்வு நீக்கி எண்ணெய். |
| உபகரணங்கள் | காற்றடிக்கும் பம்பி, வார்சுத்தியல், ஸ்பானர் தொகுதி, இடுக்குக் குறடு, திருகு குறடு, திருப்புளி. |
| முதலீடு | உபகரணங்கள் ரூபா 1,500/-<br>மூலப்பொருட்கள் ரூபா 1,000/- |
| மாதவருமானம் | ரூபா 2,800/- |
| குறிப்பு | காணி, கட்டடம் ஆகியவற்றின் பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.<br>பொதுச்சந்தை, பஸ்நிலையம், பாடசாலை போன்ற இடங்களுக்கு அருகாமையில் தொழில் நிலையத்தை அமைப்பதன் மூலம் நிலையான தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளலாம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிகாரம் / மணிக்கூடு பழுதுபார்த்தல்

| | |
|---|---|
| அறிமுகம் | மக்களில் பெரும்பாலானவர்களினால் நாளாந்தம் பயன் படுத்தப்படும் கருவிகளுள் ஒன்று கடிகாரம் / மணிக்கூடு. இது இன்றைய மனிதனின் இன்றியமையாத் தேவைகளுள் ஒன்றாகவும் விளங்குகின்றது. எனவே இவை பழுதுறும்போது இவற்றைப் பழுதுபார்ப்பதற்கான வாய்ப்புக்கள் நிறைய உண்டு. சிறு முதலீட்டுடன் இத் தொழிலை ஆரம்பித்து நடத்தலாம். இத் தொழிலுடன் வேறு சிறு பொறிகளைப் பழுதுபார்க்கும் முயற்சியிலீடுபடல் மேலதிக வருமானத்தைத் தருவதாக அமையும். |
| தொழில்வாய்ப்பு | நகரப்புறங்களிலும் வளர்ந்துவரும் கிராமப்பகுதிகளிலும் கடிகாரம் / மணிக்கூடு பயன்பாடு அதிகமாகையால் இவ்விடங்களில் பழுதுபார்ப்பதற்கான கிராக்கியும் அதிகமுண்டு. |
| தொழில்நுட்பம் | இத் தொழிலில் தொழில்நுட்ப பயிற்சியோ அனுபவமோ உள்ளவரே ஈடுபடமுடியும். |
| மூலப்பொருட்கள் | சிறிய போத்தல் எண்ணெய் |
| உபகரணங்கள் | கடிகாரம் திறக்கும்கருவி, இடுங்கி, தூரிகை, பார்க்க உதவும் கண்ணாடி, சுத்தியல், கை அகற்றும் கருவி, பின்டன், திருப்புளி தொகுதி, பெட்டிமூடி திறக்கும் கருவி. |
| முதலீடு | ரூபா 1100/- |
| மாதவருமானம் | ரூபா 2000/- க்குக் குறையாத மாதவருமானத்தைப் பெற முடியும். தொழில் செய்பவர் வேண்டிய மாற்றுறுப்புக்களைத் தானே கொள்வனவு செய்து பயன்படுத்துமிடத்து அதிக இலாபத்தை ஈட்டமுடியும். |
| குறிப்பு | காணி, கட்டடத்துக்கான ஹெமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. இத்தொழிலை வீட்டிலேயே மேற்கொள்ளமுடியும். வருமானத்தை ஈட்டித்தரக்கூடிய இடங்களெனின் காணி, கட்டடத்துக்கான வாடகை செலுத்தப்படவேண்டும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பி. வி. சி / ஈயக்குழாய் பழுதுபார்த்தல்

| | |
|---|---|
| அறிமுகம் | இத்தொழில் பெரும்பாலும் சேவை அடிப்படையில் அமைவதால் பெருமளவு மூலதனம் தேவைப்படுவதில்லை. உபகரணங்களுக்கான முதலீடே தேவைப்படுகின்றது. உதவியாள் ஒருவரை வைத்திருப்பது தொழிலை இலகுவாகச் செய்வதற்கு உகந்ததாகும். நாட்கூலி அடிப்படையிலன்றி ஒப்பந்த அடிப்படையில் இத் தொழிலைச் செய்வதன் மூலம் கூடிய வருமானத்தைப் பெற்றுக்கொள்ளலாம். |
| தொழில்வாய்ப்பு | குடிநீர் வழங்கல், வடிகால் அமைத்தல், தொலைபேசி மின் இணைப்புகள் வழங்கல், தளபாடங்கள் செய்தல் போன்ற தொழில்களுக்கு பி. வி. சி / ஈயக் குழாய்கள் பயன்படுத்தப் படுகின்றன. |
| தொழில்நுட்பம் | குறுகிய காலப் பயிற்சியுடன் இத்தொழில் முயற்சியில் ஈடுபடலாம். தொழிலில் ஈடுபடும்போது தொழில் நுட்பமும் வளர்ச்சியடையும். |
| மூலப்பொருட்கள் | பி. வி. சி / ஈயக்குழாய்கள்,<br>ஒட்டுவதற்கான பிசின்,<br>மண்ணெய். |
| உபகரணங்கள் | குழாய் திருகு குறடு, கழற்றும் கருவி, காற்றூட்டு, மண்ணெய் விளக்குவகை, அலகுடனான உலோக இரம்பச் சட்டம் மேசன் சட்டுவக் கரண்டி, வார்சுத்தியல், அனலற்ற வல்லுளி வகை, அளக்கும்நாடா, குழாய் கத்தரிப்புக்கருவி. |
| முதலீடு | ஏறக்குறைய ரூபா 3,000/- |
| மாதவருமானம் | ரூபா 2,000/- தொழிலாளியின் தேர்ச்சியிலும், திறமையிலும் வருமான அதிகரிப்பு தங்கியுள்ளது. |
| குறிப்பு | காணி, கட்டடம் போன்றவற்றின் பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிளாஸ்ரிக் எழுத்துக்கள், பெயர்த்தகடுகள் தயாரித்தல்

| | |
|---|---|
| அறிமுகம் | வீடுகள், கடைகள் ஆகியவற்றுக்கான பெயர்ப் பலகைகளும் வாகனங்களுக்கான இலக்கத்தகடுகளும் இக்காலத்தில் பிளாஸ்ரிக் எழுத்துக்களைப் பயன்படுத்தியே தயாரிக்கப்படுகின்றன. இவ்வெழுத்துக்கள் நீண்டகாலம் நிலைத்து நிற்கக் கூடியவை. அழிந்து போகும் தன்மையற்றவை. அழகானவையாகவும் இவை விளங்குகின்றன. எனவே பலராலும் விரும்பப்படுகின்றன. |
| சந்தைவாய்ப்பு | நகரப்புறங்களில் இவற்றுக்கான சந்தைவாய்ப்பு நிறையஉண்டு. வர்த்தக நிலையங்கள் தங்கள் பெயர்ப்பலகைகளை பிளாஸ்ரிக் தகடுகளையும் எழுத்துக்களையும் கொண்டே தயாரிக்கின்றன. எனவே இவற்றுக்கான [கிராக்கி எக்காலத்தும் உண்டு. |
| தொழில்நுட்பம் | பிளாஸ்ரிக் எழுத்துக்கள் வெட்டுதல், பெயர்ப்பலகைகள் தயாரித்தல், இலக்கத்தகடுகள் தயாரித்தல் தொழிலில் அனுபவம் அல்லது பயிற்சி உடையவர்கள் இத் தொழிலில் ஈடுபடலாம். தொழில்நுட்ப அறிவை வளர்த்துக்கொள்வதற்கு பிராந்திய கைத்தொழில் அபிவிருத்திச் சபை, சிறு கைத் தொழில் திணைக்கள அலுவலகங்கள் போன்றவற்றிலிருந்து பயிற்சியைப் பெற்றுக்கொள்ளலாம். |
| மூலப்பொருட்கள் | பிளாஸ்டிக் தகடுகள், ஒட்டும் பொருட்கள், தேய்ப்புத்தாள், இல 1. பிளேட்டுகள். |
| உபகரணங்கள் | இலக்கங்கள், எழுத்து அடுக்கும் இயந்திரப் பொறி (கைக்கருவி) துளையிடும் கருவி, மேசை இடுக்கி, வெட்டும் கருவி, ஸ்டென்சில் தொகுதி, பிளாஸ்டிக் ஷீற்றுகள், ஒட்டுப்பொருட்கள் தேய்ப்புத்தாள், இல. 1 பிளேட்டுகள். |
| முதலீடு | பொறிவகை ரூபா 12,000/-<br>ஏனையவை ரூபா 2,000/- |
| மாதவருமானம் | ரூபா 2,500/- |
| குறிப்பு | காணி, கட்டடம் ஆகியவற்றின் பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. வீட்டில் வைத்தே இத்தொழிலை நடத்தலாம். நகர்ப்புறங்களில் எனின் ஒரு சிறு இடத்தை வாடகைக்கு அமர்த்தி தொழில் செய்யலாம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படச்சட்டம் (Frame) அமைத்தல்

| | |
|---|---|
| அறிமுகம் | இத்தொழில் மிக இலகுவானதும் அதிக இலாபத்தைத் தரக் கூடியதுமாகும். வாடிக்கையாளரால் தரப்படும் படங்களுக்கு சட்டம் அமைத்துக் கொடுத்தல், படங்களைக் கொள்வனவு செய்து சட்டம் அமைத்துச் சந்தைப்படுத்தல், முகம் பார்க்கும் கண்ணாடிகளைச் செய்து சந்தைப்படுத்தல் போன்ற பல்வேறு தொழில்களைச் செய்யமுடியும். அதிக முயற்சி எடுப்பின் அதிக வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியும். |
| தொழில்வாய்ப்பு | பல்வேறு உப தொழில்களைச் செய்வதன் காரணமாக அதிக சந்தைவாய்ப்பு உண்டு. கோயில் உற்சவங்களின் போது சட்டம் அமைத்த படங்களுக்கு அதிக கிராக்கி உண்டு. வீடு குடிபுகுதல், திருமண வைபவங்கள் போன்ற காலங்களில் சட்டம் அமைத்த படங்களுக்கு கேள்வி உண்டாகையால் எப்போதுமே தொழில் வாய்ப்புண்டு. |
| தொழில்நுட்பம் | குறுகிய காலப்பயிற்சியுடன் இத்தொழிலை ஆரம்பிக்கலாம். தொழில்நுட்பத் திறனை அதிகரிப்பதன் மூலம் படங்களைக் கவர்ச்சியானதாக உருவாக்கி சந்தைவாய்ப்பையும் அதிகரிக்கலாம். பிராந்திய கைத்தொழில் அபிவிருத்திச் சபை, சிறு கைத்தொழில் திணைக்கள அலுவலகங்கள் மூலம் இதற்கான பயிற்சியைப் பெற்றுக்கொள்ளலாம். |
| மூலப்பொருட்கள் | மரச்சட்டங்கள், கண்ணாடிகள் |
| உபகரணங்கள் | சுத்தியல் (½ இறாத்தல்) 7" உருக்குக் குறடு,<br>கண்ணாடி வெட்டும் கருவி, 24" இருபக்க அடிமட்டம்,<br>பற்றிறுக்கி துளைவு, பட்டைக்கல், ½" ஆணி (1 கி. கி)<br>1" ஆணி (1 கி.கி) மரவேலை செய்யப்படுவதற்கான ஸ்குவில்ட்<br>கண்ணாடி ஷீட், மரச்சட்டங்கள், மேசை. |
| முதலீடு | ரூபா 5,000/- |
| மாதவருமானம் | ரூபா 2,500/- |
| குறிப்பு | காணி, கட்டடத்திற்கான பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.<br>இத் தொழிலுடன் அழகுசாதனப் பொருட்களையும் விற்பதன் மூலம் அதிக வருமானத்தைப் பெறலாம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தகம் கட்டுதல்

| | |
|---|---|
| அறிமுகம் | சமூகப் பெறுமதியும், கல்விப்பெறுமதியும் கொண்ட ஒரு தொழிலாக இது விளங்குகின்றது. பாடசாலைகள், நூல் நிலையங்கள், சந்தைகள் ஆகியவற்றின் அருகில் இத் தொழில் நிலையத்தை அமைத்து அதிக வருமானத்தைப் பெறலாம் |
| தொழில்வாய்ப்பு | கையேடுகள் பல கட்டப்பட்டு புத்தகமாக்கப்படுகின்றன. கிடைத்தற்கரிய சிதைவடைந்த பழமையான நூல்கள் மீளவும் கட்டப்பட்டு புதுப்பொலிவு பெறச் செய்யப்படுகின்றன. நூல் நிலையங்களில் வாசிப்பதற்காகவும், உசாத்துணையாகவும் பயன்படுத்தப்படும் நூல்களுக்கு தடித்த அட்டைகள் கட்டப்படுகின்றன. எனவே இத் தொழிலுக்கு நல்ல எதிர் காலமுண்டு. |
| தொழில்நுட்பம் | தொழில்நுட்பம் இலகுவானது. ஆயினும் அச்சுக்கூடம் ஒன்றில் இத் தொழிலுக்கான ஆரம்பப் பயிற்சியைப் பெற்றுக்கொள்வது இன்றியமையாததாகும். |
| மூலப்பொருட்கள் | வச்சிரம், துணி, நூல், கடதாசி, மட்டை. |
| உபகரணங்கள் | வெட்டும் இயந்திரம், அழுத்தும் இயந்திரம், குத்தூசி, காகிதங்களை இணைக்கும் கருவி, கத்தரிக்கோல். |
| முதலீடு | உபகரணங்கள் ரூபா 15,000/-<br>மூலப்பொருட்கள் ரூபா 3,000/- |
| மாதவருமானம் | ரூபா 4,000/- |
| குறிப்பு | காணி, கட்டடங்களுக்கான பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. அப்பியாசப் புத்தகங்களைக் கட்டி விற்பதன் மூலம் நிலையானதும் தொடர்ச்சியானதுமான வருமானத்தைப் பெற்றுக்கொள்ளலாம். வீட்டிலிருந்து கொண்டே ஓர் உபதொழிலாகவும் இதனை மேற்கொள்ளலாம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தக நிலையம் அமைத்தல்

| | |
|---|---|
| அறிமுகம் | பாடசாலைகள், அலுவலகங்கள் பல்கலைக்கழகங்களை அண்டிய பகுதிகளில் இத் தொழிலை ஆரம்பிப்பது சிறந்தது. முதலீட்டைப் பெருக்குவதன் மூலம் மாத வருமானத்தையும் அதிகரித்துக் கொள்ளலாம். |
| சந்தைவாய்ப்பு | மாணவர்களுக்கான நூல்கள், பயிற்சிப்புத்தகங்கள், அலுவலகங்களுக்கான காகிதாதிகள் என்பவற்றிற்கு எப்போதும் சந்தைவாய்ப்புண்டு. பாடசாலைகள் ஆரம்பமாகும், ஆண்டின் ஆரம்ப காலத்தில் பயிற்சிப் புத்தகங்களுக்கான கிராக்கி மிக அதிகமாக இருக்கும். |
| தொழில்நுட்பம் | குறிப்பிட்டதற்குரிய தொழில்நுட்பம் ஏதும் இல்லை. வாடிக்கையாளர்களைப் பெருக்கிக்கொள்வதன் மூலம் வருமானத்தைக் கூடுதலாகப் பெறமுடியும். |
| உபகரணங்கள் | தட்டுக்கள் (விறாக்கிகள்) மரம், அல்லது இரும்புத்தகட்டினால் செய்யப்பட்டது,<br>கண்ணாடி மேசை — 01<br>நீளமான மேசை — 01<br>சாதாரண மேசை — 01<br>கண்ணாடிப் பெட்டி (ஷோக்கேஸ்) |
| விற்பனைப் பொருட்கள் | அலுவலக பாவனைப் பொருட்கள், பாடசாலை மாணவர்களுக்கான நூல்களும், காகிதாதிகளும், இலக்கிய, மருத்துவ நூல்களும், சஞ்சிகைகளும், அழகுசாதனப் பொருட்கள் (சிறுவருக்கானது) |
| முதலீடு | தளபாடங்களுக்கு ரூபா 18,000/-<br>விற்பனைப் பொருட்கள் ரூபா 25,000/- |
| மாதவருமானம் | ரூபா 2,500/- க்கு மேல் |
| குறிப்பு | காணி, கட்டடம் ஆகியவற்றின் பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்பாக்கம்:
பதிப்பகத்திணைக்களம்,
வடக்கு - கிழக்கு மாகாணம்,
அன்பு ஒழுங்கை,
உப்புவெளி,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டமிடல் பிரதிச்செயலாளர் அலுவலகம்

நிதி திட்டமிடல் அமைச்சு

வடக்கு - கிழக்கு மாகாணசபை

திருகோணமலை

பதிப்பகத் திணைக்களம், திருகோணமலை. I - 155 - 3,000 - 1992

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org